வாரப்பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, BANDARANAIKE MAWATTE, COLOMBO-12.

194, ஏ. பண்டாரநாயக்க மாவத்த கொழும்பு-12.

திறம் சலவைக்கு

மில்க் வைற் சோப்




மில்க் வைற் சோப் தொழிற்சாலை

யாழ்ப்பாணம்

புத்தகம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 1991 வைகாசி திங்கள் 23-ம் நாள் (5—6—60) ஞாயிற்றுக்கிழமை துல்ஹஜ் 9 | இதழ் 1

# வானொலியில் தேர்தல் பிரசாரத் தடுப்பு

## யு. என். பியின் ஒரு சூழ்ச்சியே

## மாற்றுக் கட்சியினர் டட்லியின் குட்டை உடைத்துவிடுவர் என்ற அச்சமே காரணம்!

—டாக்டர் நாகநாதன்

"இலங்கை வானொலியில் அரசியல் கட்சிகளின் தேர்தல் பிரசாரங்களை அனுமதிப்பதில்லையென யு. என். பி.யின் காபந்து அரசாங்கம் செய்திருக்கும் எதேச்சாதிகாரமான முடிவு அநீதியானது, ஜனநாயகத்துக்கு விரோதமானது என்பது மட்டுமல்ல, பெரும் சூழ்ச்சிகரமானதுமாகும்" என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் சுதந்திரன் நிருபரிடம் ஆத்திரத்தோடு தெரிவித்தார்.

"முறைகேடான வழியில் இலங்கையின் பிரதம மந்திரிப் பதவியை அபகரித்துக் கொண்டவரான யு. என். பி. தலைவர் திரு டட்லி சேனநாயகா பொய்யும், புனை சுருட்டும், பித்தலாட்டமும் நிறைந்த கீழ்த்தரமான ஆவேசப் பிரசாரத்தின் மூலம், வகுப்புவாத வெறியைக் கிளப்பிவிட்டு, அந்த



டாக்டர் இ. எம். வி. நாகநாதன்

ஆபத்தான அலையின் மீது சவாரி செய்துகொண்டு அரசியல் அதிகாரத்துக்கு மீண்டும் வந்துவிடலாம் என்று திட்டமிட்டுச் செயலாற்றுகிறார்.

### பத்திரிகைகளின் மூடு திரை

"இவருடைய இந்த மட்டரகமான திட்டத்துக்குப் பக்கபலமாக நின்றுஏரிக்கரைப் பத்திரிகைகளும், டைம்ஸ் ஒப் சிலோன் பத்திரிகைகளும் தாளம் கொட்டுகின்றன. மாற்றுக் கட்சிகளின் கருத்துக்களுக்கும், பிரசாரங்களுக்கும் இந்த முதலாளித்துவப் பத்திரிகைகளில் மூடுதிரை போடப்படுகின்றது.

"இந்த நிலையில் மாற்றுக் கட்சிகள் தமது அரசியல் கொள்கைகளைப் பொதுமக்களுக்கு எடுத்துச் சொல்ல ஒரே ஒரு வாய்ப்பளிக்கக் கூடியது இலங்கை வானொலிதான். இலங்கை வானொலியில் மாற்றுக் கட்சிகளுக்கு இடமளித்தால் தனது பொய்ப்பிரசாரக் குட்டுகளை எதிர்க்கட்சியினர் தகர்த்துவிடுவார்கள் என்ற அச்சத்தினாலேயே திரு டட்லி இந்த வாய்ப்பினை மறுத்துத் தடுத்து நிறுத்தியிருக்கிறார். இது யு. என். பி. செய்திருக்கும் ஒரு பெரும் சூழ்ச்சியாகும்"

மேற்கண்டவாறு டாக்டர் நாகநாதன் தொடர்ந்து கூறினார்.

"அப்படியானால் இந்த வாய்ப்பு யு. என். பி. கட்சிக்கும் மறுக்கப்பட்டுத்தானே இருக்கிறது? அவர்களும் தங்கள் கட்சியைப்பற்றி வானொலிமூலம் பிரசாரம் செய்ய முடியாதல்லவா?" என்று சுதந்திரன் நிருபர் அவரிடம் கேட்டபோது அவர் மேலும் கூறியதாவது:

"இல்லை யு. என். பி. கட்சியின் கையில் காபந்து அரசாங்கம் இருப்பதால், அரசாங்க மந்திரிகள் வானொலியைத் துஷ்பிரயோகம் செய்து வருகிறார்கள். செய்திகளின்மூலமாகவும், அறிக்கைகளின்மூலமாகவும் அவர்கள் கட்சிப் பிரசாரங்களையே நுழைத்து வருகிறார்கள்.

### கபடத்தனமான பிரசாரம்

'அரிசி விலை குறைக்கப்பட்டுவிட்டது. வாழ்க்கைச் செலவு குறைக்கப்படுகிறது. வீடு கட்டும் திட்டம் அமுல் செய்யப்படுகிறது. கப்பல்

(8-ம் பக்கம் பார்க்க)

## 'ஜீ. ஜீ.யை மந்திரியாக்கி சமஷ்டியை நசுக்குவோம்'

## கொழும்புத் தமிழர் வீடுகளில் ஜே. ஆர். இரகசியக் கூட்டங்கள்

(சுதந்திரன் ஒற்று நிருபர்)

கொழும்பு தெற்குத் தொகுதிக்கு யு. என். பி. அபேட்சகராகப் போட்டியிடும் திரு. ஜே. ஆர். ஜயவர்தன அப்பகுதியிலுள்ள தமிழ் பேசும் மக்களுடைய வாக்குகளைத் தட்டிக் கொள்வதற்காக கொழும்புத் தமிழ்ப் பிரமுகர் சிலருடைய வீடுகளில் இரகசியக் கூட்டங்கள் நடத்தித் தமிழரசுக் கட்சியையும் அதன் தலைவர்களையும் திட்டி வருவதாகத் தெரிகிறது.

தமிழரசுக் கட்சி எதுவித நிபந்தனையுமின்றி யு. என். பியை ஆதரிக்க வேண்டும் என்ற கருத்துடைய மேற்படி கொழும்புத் தமிழ்ப் பிரமுகர்களில் சிலர் தமிழ் இனத்தையும், தமிழ் மொழியையும் தங்கள் சொந்த நலனுக்காக விலை கூறி விற்கும் தரத்திலுடையவர்களாவர்.

### இரகசியக் கூட்டம்

கடந்த மாதம் 28-ந் தேதி சனிக்கிழமை கொழும்பு, பாமன்கடை ஒழுங்கையிலுள்ள திரு. ஈ. பி. செல்லையா என்பவருடைய வீட்டில் திரு. ஜே. ஆர். ஜயவர்தன ஒரு இரகசியக் கூட்டத்தைக் கூட்டினார்.

யு. என். பி. அரசாங்கத்திலேயே நிர்ப்பந்திக்கப்பட்டு உரிய காலத்துக்கு முன்பே இளைப்பாறியவரான மாஜி சிவில் சேவையாளர் திரு ஈ. இராசையா உட்பட பல பிரமுகர்களும், அரசாங்க உத்தியோகத்தர்களும் இந்தக் கூட்டத்தில் சமுகமாயிருந்தனர்.

### ஜே. ஆர் பேச்சு

திரு. ஜே. ஆர். பேசினார். அவர் பேசியதன் சாரம் பின்வருமாறு:

"அன்பர்களே, நான் தமிழ் மக்களுடைய நண்பன். தமிழ் மக்களோடு எனக்கு நீண்ட காலத் தொடர்பு உண்டு. தமிழர்களின் விரோதியல்லன் நான். எப்போதும் தமிழர்களுக்கு உதவி புரிய வேண்டும், தொண்டு செய்ய வேண்டும் என்றே என் மனம் துடித்துக் கொண்டிருக்கிறது. எனவே தமிழர்கள் எதிர்வரும் பொதுத் தேர்தலில் என்னை ஆதரிக்க வேண்டும்.

### ஒரு தமிழரே பிரேரித்தார்

"என்னுடைய நண்பர் அட்வகேட் பி. நவரத்தினராஜா தான் என்னுடைய நியமனப் பத்திரத்தில் கையொப்ப மிட்டு என்னைப் பிரேரித்தவர் ஆவர். எனக்காக இரவு பகலாகப் பாடுபட்டு உழைத்து வருகிறார். தமிழ் மக்களாகிய உங்களுடைய வாக்கை நம்பித்தான் நான் களனியை விட்டு இங்கு போட்டியிட வந்திருக்கிறேன்.

### பொன்னம்பலம் பொருத்தமான தலைவர்

நாட்டில் ஏற்பட்டிருக்கும் வகுப்பு வாதத்துக்கும், கடந்த கால வகுப்புக் கலவரங்களுக்கும் காரணம் சமஷ்டிக் கட்சியும், திரு. சுந்தரலிங்கமும் தான். சமஷ்டித் தலைவர்கள் தமிழ் மக்களைத் தவறான வழியில் இட்டுச் செல்கிறார்கள். தமிழ் மக்களுக்கு பொருத்தமான தலைவன் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் தான். மொழிப் பிரச்னையைத் தீர்க்க அவர் கூறும் வட்டமேசை மாநாடு ஒரு அருமையான ஆலோசனை.

(8-ம் பக்கம் பார்க்க)

### ஜூன் 5-ந் தேதி துக்க தினம்

ஜூன் 5-ந்தேதி ஞாயிற்றுக் கிழமையை தமிழ் பேசும் மக்கள் வழமை போல் துக்கதினமாக அனுஷ்டிக்கும் படி தமிழரசுத் தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

1956 ஜூன் 5-ந் தேதி 'சிங்களம் மட்டும்' மசோதா சட்டமாக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்நாள் பிரதி வருடமும் தமிழ் பேசும் மக்களால் துக்கதினமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

கருப்புக்கொடி கட்டல், கடைகள் அடைத்தல், கூட்டங்கள் வைத்தல், பிரார்த்தனைகள் நடத்தல் ஆகிய விஷயங்களில் தமிழ் பேசும் மக்கள் இந்நாளில் ஈடுபடுவர். இம்முறையும் இந் நடைமுறை தொடரட்டும் என்று தமிழரசுத் தந்தை தமிழ் பேசும் மக்களை வேண்டிக் கொள்கிறார்.

தொய்வு (ASTHMA) சங்காரி

ரிச்லெட்ஸ் பெக்டோரல்

(RICHELET'S PECTORAL)

* இடைவிடாத இருமல்
* இளைப்பு
* மூச்சுத் திணறல்
* கிர் புர் சத்தம்
* நெஞ்சு வலி
* தொண்டை வலி






இவைகளை ஒழித்துக் கட்டுவதில் இணையற்றது. ஈளை நோயினால் இன்னலுறுபவர்களுக்கு இது ஓர் வரப்பிரசாதம். சில டோஸ் சாப்பிட்டதுமே நிம்மதியளிக்கக் கூடிய இவ்வற்புத சஞ்சீவி.

எங்கும் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:

வெஸ்டன் ஏஜன்சீஸ்,

63, பேங்ஷால் வீதி, கொழும்பு.

(போன் : 2885)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமியரும் மொழியால் தமிழரே

## ஒற்றுமையின்மையால் பண்டைப் பெருமைமிக்க இனம் அண்டிப் பிழைக்கும் இழிநிலை எய்தியது

### தமிழ் மொழியின் உயர்வு நம் கையில்

(வீ. எஸ். பிள்ளை)

**சிலாபம் தமிழ் இளைஞர் மன்றத்தின் நான்காவது ஆண்டுவிழா சமீபத்தில் நடந்தபோது ஆசிரியர் திரு. வீ. எஸ். பிள்ளை தலைமை வகித்துப் பேசினார். "தமிழும் தமிழரும்" என்ற பொருளில் அவர் பேசிய பேச்சில் அன்றைய தமிழகத்தையும் இன்றைய தமிழகத்தையும், தமிழர் தம் முந்திய பெருநிலையையும் தற்போதைய திக்கற்ற நிலைமையையும் படம் பிடித்துக் காட்டினார். பேச்சு இங்கு முழுமையாகப் பிரசுரிக்கப்படுகிறது.**

பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே வளர்ந்து சங்கத் திருப்பிலேயிருந்து வைகையேட்டிலே தவழ்ந்த பேதை என்று எம் அன்னையாம் தமிழ் மொழியைத் தமிழர் போற்றுவர்.

உரைநடை செய்யுள் என இரு அங்கங்களையுடைய இயற்றமிழும், தோல், துளை, நரம்பு, கஞ்சம் மிடறென ஐந்து அங்கங்களையுடைய இசைத் தமிழும், நாடகம் நடனம் கூத்து என மூன்று அங்கங்களையுடைய நாடகத் தமிழும் எனத் தித்திக்கும் அமிழ்தெனும் பொருள் படைத்த தமிழ் மொழி முப்பெரும் பிரிவுகளையுடையதாகும். தமிழணங்கின் அணிகலன்களாக விளங்கி அழகினுக்கழகு செய்யும் சிலப்பதிகாரம், சிந்தாமணி, மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி ஆதியாம் ஐம்பெருங் காப்பியங்களும், அறம் பொருள் இன்பம் வீடெனும் நான்கு புருஷார்த்தங்களையும் அடிப்படையாகக் கொண்டெழுதப்பட்ட அகநானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப் பத்துப், பத்துப்பாட்டு, கலித்தொகை பதினெண் கீழ்க் கணக்கு ஆதியாம் இலக்கிய நூல்களும், அகத்தியம் தொல்காப்பியம் முதலாகவுள்ள இலக்கண நூல்களும் தமிழ்நாட்டில் மட்டுமல்ல, அயல்நாட்டாரையும் வசிகரிக்கத்தக்க சொற்சுவையும், பொருட்சுவையும், ஓசைநயமும் அணியும் அழகும் நிறைந்த அரும்பெருங் காப்பியங்களாக விளங்குகின்றன.





இலங்கையில் எல்லாப் பகுதிகளிலும்

4 அவுன்ஸ் மற்றும் 16 அவுன்ஸ்

சைஸ்களில் கிடைக்கிறது.

சோல் ஏஜண்டுகள்:—

சிர்நுல் கதீர் அன் கம்பெனி,

48, இரண்டாம்குறுக்குத்தெரு, கொழும்பு-11.

டெலிபோன்: 6009 & 3710.


#### இணையற்ற நூல்கள் ஒப்பற்ற புலவர்கள்

மேனாட்டு மேதைகளாகிய வண. பெஸ்கி அடிகள், சங். ஜீ. யூ. போப்பையர் முதலானவர்களையே கவர்ந்து தன்பாலிழுத்த இன்பத் தமிழ் மொழியின் மேன்மையை என்னென்றியம்புவது? இக்காலப் புலவர்களைப்போல் அன்றி இறைவன் திருவருளினாலே நாலாயிரத்திற்கதிகமான தமிழ்ப் பிரபந்தங்களைச் சிருட்டித்த தமிழ்ப் புலவர்கட்கு நிகரானவர்கள் வேறெம்மொழியாளரிடையேயும் எக்காலத்தும் தோன்றியதில்லை. கவிச் சக்கரவர்த்தி கம்பனால் எழுதப்பட்ட இராமாயணத்திற்கும், இளங்கோவடிகளால் ஆக்கப்பட்ட சிலப்பதிகாரத்திற்கும், வள்ளுவரால் இயற்றப்பட்ட உலகப் பொதுமறையாகிய திருக்குறளுக்கும் நிகரான நூல்கள் வேறு எந்த மொழியிலும் கிடையாது. இதுபற்றியே தான் நம் வரகவி பாரதியாரும் "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோலினிதாவதெங்குங் காணோம்" என்றும், "யாமறிந்த புலவருளே கம்பனைப்போல் வள்ளுவர்போல் இளங்கோவைப்போல் பூமிதனில் யாங்கணுமே கண்டதில்லை" என்றும் அறுதியிட்டுக் கூறியுள்ளார். தன்னிகரில்லாத் தமிழ் மொழியின் பெருமையை யாராலும் விரித்துரைத்தல் அரிதேயாகும்.

#### கட்டடக் கலை மேம்பாடு

அழகுக் கலை, இன்பக் கலை, அறிவுக் கலையென்ற முக்கலைச் சுடர்களால் தமிழகத்தில் மட்டுமன்றி முழு உலகத்திலும் ஒளிபரப்பி அன்றும் இன்றும் குன்றின் மேல் தீபமென்னக் குன்றுப்புகழோடு வாழ்ந்து கொண்டிருப்பவள் நம் தமிழ்த்தாய். தமிழ் நாட்டின் கண்ணுள்ள திருச்சேத்திரங்களிலும், தேவாலயங்களிலும், மாடமாளிகைகள் கூடகோபுரங்களிலும் காணப்படுகின்ற கட்டிட நிர்மாணத் திறனும், அவற்றிலே நுட்ப நுணுக்கங்களோடு செதுக்கப்பட்டிருக்கும் சிற்ப வேலைப்பாடுகளும் கல்லிலும் கம்பிலும் உலோகப் பொருட்களிலும் பல்வேறு முகபாவங்களிலும், பல்வேறு கோணங்களில் தத்ரூபமாகச் சிருட்டிக்கப்பட்டிருக்கும் சிற்பங்களும் அழகுக் கலையின் மகத்துவத்தை எடுத்துக்காட்டும் சான்றுகளாக அமைந்துள்ளன.

#### அறிவுக் கலை மேம்பாடு

இலக்கண இலக்கிய நூல்களின் சிறப்பியல்புகளும், கிராம மக்களின் உள்ள உணர்ச்சிகளையெடுத்துக் காட்டும் நாட்டுப் பாடல்கள் கிராமிய மக்களின் வாழ்க்கையைப் படம் பிடித்துக்காட்டும் தெருக்கூத்துக்களும், செவிக்கின்பம் பயக்கும் இனிய சங்கீதமும், கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவரும் நாடக நாட்டியங்களும் இன்பக் கலையின் மேன்மையை என்றும் விளக்கிக்காட்டுவனவாகும். கணிதம், பூத, பௌதிக, வானசாஸ்திரங்கள், சோதிடம் சுகாதாரம் மனையியல் வாணிபம் அரசியல் ஆகிய சகல துறைகளிலும் தமிழ்நாடு சிறந்து விளங்கி அறிவுக் கலையின் திறனை விளக்கச் செய்கின்றன. இந்த முக்கலைகளிலும் எழுதப்பட்ட சிறந்த நூல்களும, அக்கலைகளில் வல்ல மேதாவிகளும், நூல்களையெழுதிய அறிஞர்களும் நம் தமிழ்நாட்டில் பலர் வாழ்ந்துள்ளனர் என்பதற்கு இன்னும் பல சான்றுகளுள்ளன.

#### அகவாழ்வு

மக்களின் வாழ்க்கைத்தன்மையையும், நிலத்தின் இயற்கை இயல்பையும் அடிப்படையாகக் கொண்டு குறிஞ்சி பாலை முல்லை மருதம் நெய்தல் என ஐந்து பிரிவுகளாக வகுக்கப்பட்ட தமிழகத்துப் பூமியிலே வாழ்ந்த தமிழ் மக்கள் அகவாழ்வு புறவாழ்வென்ற இரு வாழ்க்கைக் கூறுகளை அடிப்படையாகக் கொண்டு வாழ்ந்து வந்தனர். ஒத்த பருவமும் ஒத்த நலனும் ஒத்த குணமும் அமைந்த ஓர் தலைவனும் தலைவியும் ஒரு மனப்பட்டுக் கூடி வாழ்ந்த இல்லற வாழ்க்கையிலே அறிவும் ஒழுக்கமும், அன்பும் ஆதரவும், அறிவும் கடவுள் பக்தியும், கடமையும் கண்ணியமும் கட்டுப்பாடும் ஒருங்கே யமைந்து தமிழ் நாட்டுத் தம்பதிகளின் அகவாழ்வை மலரச் செய்தன.

#### புறவாழ்வு

இல்லறத்தை நல்லறமாக நடத்தி அதிலே இன்பங் காண்பதற்குப் பொருளைத் தேடுதற்காகக் கைக் கொள்ளுந் தொழிலை ஊக்கத்தோடும் துணிவோடும் மதிநுட்பத்தோடும் திறம்பட நடத்தி அதிக பலனைப் பெறுதற்காதாரமாகக் கல்வி, கைத்தொழில் பயிற்சி வசதிகளும், சுகாதார பொருளாதாரக் குடியிருப்பு வசதிகளும் தமிழகத்தில் தாராளமாக இருந்ததால் புறவாழ்வு சிறப்புற்றது. அன்றியும் நாட்டிலே மக்களின் பொது வாழ்வில் சாந்தியும் சமாதானமும்; அன்பும் அமைதியும்; ஒற்றுமையும் சகோதரத்துவமும் நிலவுவதற்கு நாட்டு மன்னர்களின் ஆட்சியாக; நீதியும் நேர்மையும் செங்கோன்மையும் நிறைந்ததாக விளங்கியது. எனவே தமிழ் நாட்டு மக்களின் வாழ்வு சீருஞ் சிறப்புமுற்று சந்தோஷமும் சுபீட்சமும் நிறைந்ததாக இருந்ததென்பதில் கிஞ்சித்தும் சந்தேகமில்லை.

#### மன்னர்

அறிவிலும் புலமையிலும் ஆட்சித் திறனிலும் கைதேர்ந்த மன்னர்கள் வாழ்ந்தார்கள். கொடையில் சிறந்த குமணன் பாரி போன்ற அரசரும் ஆட்சி செய்தனர். நீதியில் பிறழாத மனுநீதி கண்ட சோழன் போன்றமன்னரும் இருந்தார்கள். தீரமும் வீரமும் மிக்க திறல் வேந்தரும் ஆண்டனர். அறிவில் மிக்க புலவர்கட்கும், திறமை மிக்க வீரர்கட்கும், காவிய ஓவிய இசை நாடக நாட்டிய இசைக் கலைஞர்கட்கும் அங்கே ஆதரவும் மதிப்பும் அரசர்களால் கொடுக்கப்பட்டன. அஞ்சா நெஞ்சம் படைத்த படை வீரர்கள், மதியூகம் மிக்க மந்திரிகள், தொழில் நுட்ப நிபுணர்கள் ஆங்கிருந்தனர். அரசர்கட்கெல்லாம் அங்கே மதிப்பிருந்தது; மரியாதையிருந்தது.

#### ஆடவர் பெண்டிர்

திடகாத்திரமும் தேகசுகமும், ஊக்கமும் முயற்சியும், உறுதியும் வீரமும் உடையவர்களாக விளங்கினர் தமிழகத்து ஆடவர். நாணம் மடமை அச்சம் பயிர்ப்பு என்ற நாற்குணமும் நிறைந்தவர்களாகக் கொண்ட கணவரையன்றி வேறெவரையும் ஏறெடுத்தும் பாராதவர்களாக ஒழுக்க சீலமுடையவர்களாக, கற்பில் வழுவாத பொற்பின் செல்விகளாக, இல்லாதவைதை இன்பலோகமாக்கும் இலட்சுமிகளாக வாழ்ந்தனர் திராவிட மகளிர். பெற்ற பிள்ளைகளைச் சன்மார்க்கராக, அடக்கமும் பணிவும் உள்ளவர்களாக, விளங்கச் செய்தனர் தமிழ் நாட்டுத் தாய் தந்தையர்கள்.

#### கப்பலோட்டினான்

இமயம் முதல் ஈழம் வரையுள்ள நாடுகளை வெற்றிகொண்டு பரந்த இராச்சியத்தைக் கட்டியாண்டனர் செந்தமிழ் நாட்டுத் திறல் வேந்தர்கள். யவனரோடும் துருக்கரோடும் அராபியரோடும் போட்டா போட்டியிட்டுக் கப்பலோட்டிக் கடல் வாணிபம் செய்வதிலே முதன்மை ஸ்தானம் வகித்தனர் தமிழ் நாட்டு வணிகர், மாலுமிகள். உடைநடை பாவனைகளிலே ஒழுக்கம் பிரதானமாகக் கடைப்பிடிக்கப் பட்டது. ஈகையிலும் விருந்தோம்புதலிலும் சிறந்து விளங்கினான் தமிழன். தன்மானத்தோடும், தனிப்பண்பாட்டோடும், பழக்க வழக்கங்களோடும், நாகரிகத்தோடும் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக வாழ்ந்தனர் தமிழ் மக்களென்பதற்கு இலக்கிய நூல்கள் சான்றுகளாக விளங்குகின்றன.

#### திராவிட நாடு

"திருவேங்கடம் தென்குமரியாயிடை தமிழ் கூறு நல்லுலகம்" ... வடக்கே இமய மலைமுதல் தெற்கே கன்னியாகுமரி வரையிலுமுள்ள பாரத பூமி மட்டுமல்ல, கிழக்கே ஆஸ்திரேலியா கிழக்கிந்திய தீவுகள் வரையிலும், மேற்கே ஆபிரிக்கா வரையிலும், இந்து மகா சமுத்திரம் முழுவதையும் அடக்கியதாய்ப் பரந்து கிடந்து கடல் கோளுக்குட்பட்டு மறைந்தொழிந்த "லெமூரியா" வென்னும் குமரிக் கண்டமும் சேர்ந்ததே திராவிட நாடாகும். உலகத்திலே மனித இனம் குமரிக்கண்டத்திலே தான் உற்பத்தியான தென்பதும், மனித இனம் முதன் முதல்

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**க. த. நாதன், யாழ்ப்பாணம்**

கே: சமஷ்டிக் கோரிக்கையை எந்த ஒரு சிங்கள அரசியல் கட்சியும் சரி, எந்த ஒரு சிங்கள அரசியல்வாதியும் சரி ஏற்றுக்கொள்ளவில்லை. இந்த நிலையில் எப்படிச் சமஷ்டியைப் பெறப் போகிறார் செல்வநாயகம் என்று கேட்கிறாரே அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு ஜீ. ஜீ. பொன்னம்பலம், உங்கள் பதில் என்ன குயுக்தியாரே?

ப: அரசியலில் எந்த ஒரு கோரிக்கையையும், அதிகாரத்தில் இருப்போர் கேட்டவுடன் சுலபமாக ஏற்றுக்கொள்வதில்லை. இதுவே உலக வழக்கம். இந்தியா சுதந்திரம் கேட்டபோது பிரிட்டிஷ்காரர்கள் 'இதோ தந்தோம்' என்று கொடுத்தார்களா? ஆந்திரர் தனி மாகாணம் கேட்டபோது 'அதற்கென்ன எடுத்துக்கொள்ளுங்கள்' என்று நேருதான் கொடுத்துவிட்டாரா? கேட்டவர்கள் யாராயிருந்தாலும் இறுதி வரை உறுதியோடு நின்று போராடித்தான் பெற்றார்கள். நாமும் தளராத திடசித்தத்தோடு நமது கோரிக்கையைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்தால் சிங்கள அரசியல் கட்சிகளும், சிங்கள அரசியல் தலைவர்களும் என்றோ ஒருநாள் பணிந்து கொடுக்கத்தான் வேண்டி வரும்; ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டி வரும். இந்த உண்மையை அறிந்ததனாலே தான் திரு செல்வநாயகம் கடந்த 10 வருடங்களாக நிலையான கொள்கையில் உறுதியோடு நின்று போராடி வருகிறார்.

அது சரி, தமது அகில இலங்கை ஆனைப்பந்தி காங்கிரஸ் பருத்தித்துறைமுதல் தேவந்துறைவரை தமிழுக்குச் சமஅந்தஸ்துப் பெறப் போராடப்போவதாகத் திரு பொன்னம்பலம் பம்மாத்துக்காட்டுகிறாரே, அவருடைய கேள்வியை நாமும் அவரிடமே கேட்டால் என்ன பதில் சொல்வார்? கேள்வி இதுதான்: இன்று எந்த ஒரு சிங்கள அரசியல் கட்சியாவது சரி, அல்லது எந்த ஒரு சிங்கள அரசியல் தலைவராவது சரி தமிழுக்கு சமஅந்தஸ்து என்ற கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை. இந்த நிலையில் எப்படிச் சமஅந்தஸ்தைப்பெறப் போகிறார் திரு பொன்னம்பலம்?

ஃ

**சு. சோமானந்தம், யாழ்ப்பாணம்**

கே: கோண்டாவில் தமிழரசுக் கட்சிக் கூட்டத்தில் யாரோ கல் எறிந்தார்களாமே, உண்மையா குயுக்தியாரே?

ப: பாவம், தமிழ் காங்கிரஸ்காரர்கள் கல்லைக்கூட இன்னும் சரியாக வீட்டெறியப் பழகிக்கொள்ளவில்லை. இந்த நிலையில் அரசியல் விரோதிகளை எங்கே சொல்லை விட்டெறிந்து தானும் இலக்காகத் தாக்கப்போகிறார்கள்! ஒரு வீராதி வீரர் எறிந்தார். அந்தக் கல் எதிரே நின்ற மரத்தில் பட்டுத் திரும்பி வந்து அவர் மண்டையையே பிளந்தது. இந்தச் 'சின்னத்தனமான காரியங்களைச் செய்விக்கக்கூடிய சிமோல் பேர்வழிகள் தமிழரசுக் கட்சியில் இல்லை.

ஃ

**ஜோ. இக்னேசியஸ், முந்தல்**

கே: தமிழர்களைக் காட்டிக் கொடுக்கும் எட்டப்பர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் இலங்கையில்?

ப: ஏகப்பட்ட பேர் இருக்கிறார்கள். பட்டிருப்பில் மட்டும் என்று எண்ணுதீர்கள். உத்தியோக மொழி இலாகாவில் மட்டும் என்று எண்ணுதீர்கள். இப்போது திருகோணமலையிலும் ஒரு 'ஈயார் எஸ் ஆர்' முளைத்திருக்கிறாரே!

ஃ

**எம். கே. பரமேஸ்வரி, பதுளை**

கே: டட்லி முடியாதது என்ன, முடிக்காதது என்ன?

ப: டட்லி முடிக்காதது சட்டபூர்வமான கலியாணம். முடியாதது சிறீமாவோவுக்குப் பதில் சொல்ல.

ஃ

**திரு வன்னியசிங்கம், மட்டக்களப்பு**

கே: மாஜி நிதியமைச்சர் எம். எம். முஸ்தபா இம்முறை ஏன் தேர்தலில் குதிக்கவில்லை?

ப: அவர் ஒரு யு. என். பி. அபேட்சகராக நிந்தவூர் தொகுதியில் போட்டியிடுவதாக யு. என். பி. பத்திரிகை பட்டியல் வெளியிட்டிருக்கிறது. ஆனால் மனிதர் பின் வாங்கிவிட்டார். தமிழரசுக் கட்சியில் அவர் நிலையாக நின்றிருந்தால் இன்று அவர் நிந்தவூர்த் தொகுதியின் முடிசூடா மன்னராக விளங்கியிருப்பார். இந்த உண்மையை அவரே வாய்விட்டுச் சொல்லிக் கழிவிரக்கப் பட்டுக்கொண்டு திரிகிறார்.

ஃ

**ஆர். எஸ். நாதன், மருதானை**

கே: உங்களால் மருதானையிலுள்ள இரவு இராணிகளை அடக்க முடியுமா?

ப: உங்களைப்போன்ற இரவு இராசாக்களால்கூட முடியாத காரியத்தில் அடியேன் ஈடுபடுவேனா?

ஃ

**க. சிவப்பிரகாசம் மட்டக்களப்பு**

கே: மட்டக்களப்புத் தொகுதியில் போட்டியிடும் புரக்டர் குமாரசாமியை உங்களுக்குத் தெரியுமா?

ப: தெரியும். மட்டக்களப்பு அருள் நெறி மன்றத்து தலைவராம் அவர்! குன்றக்குடி அடிகளார் வந்து பேசிய ஒரு கூட்டத்துக்கு அவரைத் தலைமை வகிக்கப் போட்டார்கள். மனிதர் எழுந்தார். வெலவெலத்து நின்றார். "குன்றக்குடி அடிகளாரைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. அவர் பேசுவார்" என்றார். உட்கார்ந்துவிட்டார். இப்படிப்பட்டவர்தான் மீன் பாடும் தேன்நாட்டின் பிரதிநிதியாகிவிட ஆசைப்படுகிறார். கட்டுக்காசை அவர் காப்பாற்றினால் அது உலக மகா அதிசயங்களில் ஒன்றாக இருக்கும்.

ஃ

**இ. திருச்செல்வம், எருவில்**

கே: தமிழ்காங்கிரஸ்காரர்கள் இப்போது திரு ஏ. எல். தம்பியையாவையே நாய் என்றும் நரி என்றும் இழிவுபடுத்திப் பேசவும் எழுதவும் ஆரம்பித்துவிட்டார்களே!

ப: பொன்னம்பலத்தின் சின்னம் கண். மருண்ட கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேயாகத் தெரிகிறது. நண்பன் யார் கூடிக் கழுத்தறுப்போன் யார் என்பதை இப்போதாவது தம்பியையா உணர்ந்திருப்பார் என்று நம்புகிறோம்.

ஃ

**சுந்தரி சபாரத்தினம், கொக்குவில்**

கே: எதிர்வரும் தேர்தலில் திருமதி குயுக்தியார் போட்டியிட்டால்...

ப: போட்டியிட்டால் என்ன? கட்சிரீதியென்றால் ஐந்நூறு, சுயஇச்சைரீதியென்றால் ஆயிரம், துண்டு விழுந்தது என்று பொருள்.

**எம். எஸ். எம். புகாரி, துந்துவை**

கே: சமசமாஜிஸம், கொம்யூனிஸம் என்றால் என்ன? எழுத்தாளன், பேச்சாளன் என்பவன் யார்?

ப: அடிக்கடி மாறுவது சமசமாஜிஸம். அண்டிக் கெடுப்பது கொம்யூனிஸம். பிட்டிசம் எழுதுபவன் எழுத்தாளன். எதையும் உளறுபவன் பேச்சாளன்.

ஃ

**செல்வி அம்புஜம், கிரான்**

கே: வரவேற்கப்படும் விருந்தாளி யார்? வரவேற்கப்படாத விருந்தாளி யார்?

ப: வரவேற்கப்படும் விருந்தாளி முதல் குழந்தை! வரவேற்கப்படாத விருந்தாளி...

## கடிதம்

அன்பே! உனது கடிதம்
படித்தேன்; அகத்தை அகழ்ந்(து)
உன்பால் எடுத்தே உரித்தாக்கிக்
கொள்ளல் உனக்கழகோ?
என்பால் எதுவும் இனி இல்லை;
ஏதோ இறக்க வில்லை,
மின்போல் இடையும் விழிவேல்
இணையும் விளங்கும் ஒன்றே!!

அன்று தெருவில் அசைந்த
படியேயோர் அன்னமொன்று
சென்ற பொழுது சிறிது
திரும்பினேன், தற்செயலாய்;
நன்றி தெனதுயிர் நங்கையின்
கண்களோ? நஞ்சம்! என்னைக்
கொன்றதும், பின்நான் உயிர்த்ததும்,
என்னுளக் கோயிலிலே,

தெய்வமாய் அந்தத் திருவையே
வைத்துத், தினம் தினம் நான்
வைகறை, யாமம், நடுப்பகல்,
மாலை வழிபடலும்,
நைகிற நெஞ்சகம் நம்பிக்கை
ஒன்றையே பற்றிப் பற்றி
உய்வழி தேடி உழன்றதும்
எங்ஙன் உரைப்பதுவே!

அப்பாடா! நீயும் கடைசியில்
ஏதோ அருள்சுரந்தாய்.
இப்பாவி யேனுக் கெழுதிவிட்
டாயே! இன்று நேற்றா?
எப்போதோ போட்ட விதைமுளை
கொண்ட(து); அவ் வின்பநிகழ்
வைப்பாட எங்கே பதம்தேடு
வேன்நான், அணங்குருவே!!

உருவினாய் போலும்என்உள்ளத்தைப்
பற்றி; உடன் அதனைச்
சொருகினாய் போலும் சுரிகுழ
லூடு; சுடர்க்கொடி! நோய்
பெருகிநாள் தோறும் 'பிலக்க'வைக்
காதே; பிறைநுதால்! நான்
வருகிறேன்; போடு பதில்வெகு
விரைவில்; வணக்கம், அன்பே.

—முருகையன்



## நமக்குத் தொழில் கவிதை

நமக்குத் தொழில் கவிதை என்ற வெண்பாப் போட்டியில் கவிதை எழுத விரும்புவோர் யாவரும் கலந்து கொள்ளலாம். கட்டுப்பாடு கிடையாது. ஒருவர் எத்தனை வெண்பாக்கள் வேண்டுமானாலும் எழுதலாம். கவிதை அஞ்சல் அட்டையில் (Post Card) மட்டுந்தான் எழுதப்படவேண்டும். ஒரு அட்டையில் ஒரு வெண்பாவுக்கு மேல் எழுதக் கூடாது. கீழே தரப்பட்டிருக்கும் அச்சிட்ட முகவரியை வெட்டி அஞ்சலட்டையில் ஒட்டி அனுப்ப வேண்டும். அச்சிட்ட முகவரி ஒட்டப்பெறாத அட்டைகள் கவனிக்கப்படமாட்டா.

### போட்டி இல : 11

இந்த பதினோராவது வெண்பாப் போட்டிக்கு "ஆடி இருபதிலே சாடு" என்ற ஈற்றடி தரப்பட்டிருக்கிறது. இதை வைத்தே வெண்பா எழுதப்பட வேண்டும். இலக்கியச் சுவைக்கும், நகைச் சுவைக்கும், அங்கதச் சுவைக்கும் (Satire) முக்கிய கவனிப்பு அளிக்கப்படும். மத்தியஸ்தர்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற வெண்பாக்கள் சுதந்திரனில் வெளியாகும்.

—ஆசிரியர் : சுதந்திரன்.

'நமக்குத் தொழில் கவிதை'
C/o ஆசிரியர்,
சுதந்திரன்,
த. பெ. 1183,
கொழும்பு—12.

வெண்பாக்கள் கிடைக்க வேண்டிய முடிவு தேதி
15—6—1960

"ஆடி இருபதிலே சாடு"

உங்கள் நீடித்த எழிலுக்கு
'எலைட்'
சுப்பர்லோன் ஜோர்ஜட் என்னும்
அழகின் அணிகலனை அணியுங்கள்.
பார்வைக்கு மட்டும் அழகல்ல, அவை நவீன நூலிழைகளால் இணைக்கப்பட்டிருப்பதால் உறுதியாக உழைக்கின்றது.
இன்னும் அழுக்குப் பிடியாமல், சுருங்காமல், மடிப்புக் குலையாமல் இருக்கக் கூடியது
'எலைட்'
சுப்பர்லோன் ஜோர்ஜட்
அற்புதமான டிசைன்களிலும் எடுப்பான கண்கவர் வர்ணங்களிலும் கிடைக்கின்றன.
குண்டன்மால்ஸ்,
லிமிட்டெட்,
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டட்லி இதுவரை கைது செய்யப்படாதது ஏன்?

## அதிகாரம் அவர் கையில்— பொலீஸ் அவர் பின்னால் என்பதாலா?

## சிங்களப் பாமர மக்களைத் தமிழருக்கு எதிராகத் தூண்டிவிட்டு வருகிறாரே!

## பதவி ஆசையால் பிரதமரே துரோகி ஆகிறார்

டட்லி சேனநாயகா இதுவரை கைது செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆமாம், நாட்டின் பிரதமர் இன்று நேற்றல்ல, பாராளுமன்றம் எப்போது கலைக்கப்பட்டதோ அப்போதே கைது செய்து கம்பி எண்ணவைக்கப்பட்டிருக்க வேண்டும். ஏன் இன்னும் அது நடைபெறவில்லை?

அதிகாரம் அவர் கையில் சிக்கிக்கொண்டிருக்கிறது என்பதாலா? பொலீஸ்அவர் பின்னால் நின்று கைகட்டி சேவகம் புரிகிறது என்பதாலா? ஏன்? பதவி ஆசையால், நாடாள வந்தவரே நயவஞ்சகராக மாறி நாத்தழும்பேறிப் பேசுகிறார்; மூன்றிலொரு பங்கு மக்களின் முழுமுதல் துரோகி ஆகிறார்! ஆயினும் அவர் இதுவரை கைது செய்யப்படவில்லை; கண்டிக்கப்படவில்லை; தண்டிக்கப்படவில்லை; தன் இஷ்டப்படி தொடர்கிறார் நாசவேலையை!

### செய்தி

''துவேஷமூட்டும் பேச்சுக்கள் பேசாதீர்; மக்களைத் தூண்டிவிடாதீர்; தூபம் போடாதீர்; கொந்தளிப்புக்கு வழி செய்யாதீர்; இனக்கலவரத்துக்கும் அமைதியின்மைக்கும் அத்திவாரம் இடாதீர். அது எல்லாம் குற்றம். அப்படிச் செய்தால் தண்டிக்கப்படுவீர்கள்''—இப்படி அறிவிக்கப்பட்டிருக்கிறது. பத்திரிகைகளில் செய்திகள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

### வசை புராணம்

டட்லி செய்வது என்ன. ஜூலை 20 தேர்தலுக்கான

### சிங்கம்

தமது பிரசார இயக்கத்தை தொடங்கிவிட்டாராம். சிங்களப் பாமர மக்கள் மத்தியில் சென்று வசைபுராணம் பாடுகிறார்—தமிழ் பேசும் மக்கள்மீதும் தமிழரசுக் கட்சிமீதும்! பரவாயில்லை, சப்புக்கொட்டும் வாய்க்கு அது சரக்கு என்று விட்டுவிடலாம்.

### தூபம் போடுகிறார்

ஆனால் அவர் இன்னொருபடி மேலே சென்றுவிடுகிறாரே! சிங்களப் பாமர மக்களுக்கு தூபம் போடுகிறார். தமிழர்களுக்கு எதிராக அவர்களைத் தூண்டிவிடுமளவுக்கு வெறித்தனமாகப் பேசுகிறார். 'தமிழர்களை நிர்மூலமாக்குங்கள்' என்று மறைமுகமாகச் சிங்களப் பாமர மக்களுக்கு உபதேசம் செய்து வருகிறார். இது கண்டிக்கப்பட வேண்டிய குற்றம் இல்லையா? நாட்டின் பிரதமர் செய்வதானால் குற்றமும் குணமாகிவிடுமா? இதுதான் கேள்வி.

### புது தினுசான பேச்சு

டட்லியின் பேச்சுக்கள்சில சமயங்களில் புது தினுசாகவும் வருகின்றன.

''நாங்கள் தமிழருக்கு விரோதிகள் அல்லர்; அவர்களின் நண்பர்கள். தமிழர்களுக்கு எதிராக நாம் பிரசாரம் செய்யவில்லை; தமிழரசுக் கட்சிக்கு எதிராகவே பிரசாரம் செய்கிறோம். தமிழரசுக் கட்சி தான் எங்கள் எதிரி'' என்று அவர் சொல்லி வருகிறார்.

### முட்டாள் தனத்துக்கு எடுத்துக் காட்டு

டட்லியின் முட்டாள் தனத்துக்கு இது ஒரு எடுத்துக்காட்டு. எதிரிகள் தமிழரசுக் கட்சியினராயிருந்தாலும் தமிழ் மக்களாயிருந்தாலும் இரண்டும் ஒன்றுதான். தமிழரைத் திட்டாமல் தமிழரசுக் கட்சியினரை மட்டும் திட்டினாலும் அது தமிழரைத் திட்டியதாகவே முடியும். ஏன்? தமிழரசுக் கட்சி தமிழ் பேசும் மக்களின் நிறுவனம். அக்கட்சியினர் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகள். கடந்த பொதுத் தேர்தல் முடிவுகள் தமிழ்பேசும் மக்களின் பிரதிநிதிகள் தமிழரசுக் கட்சியினரே என்பதை சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபித்துவிட்டன. ஆகவே தமிழரசுக் கட்சியினருக்கு எது செய்தாலும் அது தமிழ் பேசும் மக்களுக்கு செய்யப்பட்டதாகவே கொள்ளப்படும். நாட்டின் பிரதமருக்கு இது புரியவில்லை.

### காவலராம்

இப்படிச் சொன்னால் புரியும் என்று நம்புகிறோம். தாம் சிங்கள மக்களின் உரிமைகளைத் தமிழருக்கு அல்லது அவருடையபுதுப்பாணியில் சொல்வதானால் தமிழரசுக் கட்சியினருக்கு, விற்கத் தயாராயில்லை என்கிறார். தமது இனத்தைக் காட்டிக் கொடுக்க தம்மால் முடியாது என்று முழங்குகிறார். தாம் தமது சிங்கள இனத்தின் காவலனாக இருக்கவே விரும்புவதாகச் சொல்கிறார். மக்கள் தம்மைத் தெரிவு செய்தார்கள் என்றும் தாம் அவர்களின் உரிமைகளைக் காப்பாற்றி நம்பிக்கைக்குப் பாத்திரராக இருக்க வேண்டும் என்று வேதாந்தம் பேசுகிறார்.

### இவர் யார்?

இவற்றையெல்லாம் செய்வதற்கு இவர் யார்? தமிழரசுக் கட்சி வேறு தமிழ் பேசும் மக்கள் வேறு என்று சொல்வதானால் சிங்கள மக்கள் வேறு டட்லியின் யு. என். பி. வேறு என்றுதானே அர்த்தம் பண்ண வேண்டும். தமிழ் பேசும் மக்களின் உரிமைகளுக்காகத் தமிழரசுக் கட்சி பேசுவது தவறு என்றால் சிங்கள மக்கள் விஷயங்கள் பற்றி யு. என். பி. பேசுவதும் தவறுதானே. இந்த அடிப்படையில் பார்த்தால் டட்லி வாய் திறப்பதே தப்பு. இதை அவர் ஒப்புக் கொள்வாரா?

### பஞ்சசீலம் படும்பாடு

''நீங்கள் வாழுங்கள்; எங்களையும் வாழ விடுங்கள்''— தமிழ் பேசும் மக்கள் சார்பில் தமிழரசுக் கட்சியினர் கேட்பது இதைத்தான். டட்லியிடமிருந்து என்ன பதில் கிடைக்கிறது? ''வாழுவோம்; ஆளுவோம்'' என்று ஆவேசக்குரல் எழுப்புகிறார். பௌத்தரான டட்லி பஞ்சசீலத்தைச் சொந்தப் பிரச்னை குறுக்கிடும் போது கழுத்தை நெரித்துக் கொன்றுவிட்டு சுய ரூபத்தைக் காட்டுகிறார். நாடெங்குமுள்ள சிங்களப் பாமர மக்களிடம் சென்று 'தமிழரை ஒரு கை பாருங்கள்' என்று தட்டிக் கொடுத்து வருகிறார்.

அறிவிக்கப்பட்டபடி நாட்டு மக்களிடம் துவேஷமூட்டும் பேச்சுக்கள் பேசுபவர்கள் தண்டிக்கப்படுவதாயின் இதுவரை-முதன் முதலில்-தண்டிக்கப்பட்டிருக்க வேண்டியவர் இந்த நாட்டின் பிரதமர்.

### சியரட்ட பத்திரிகை

துவேஷமூட்டும் பிரசுரங்களை வெளியிடுபவர்களைத் தண்டிப்பதானால் இதுவரை தண்டிக்கப்பட்டிருக்க வேண்டியவர்கள் யு. என். பியின் சிங்களப் பத்திரிகையான ''சியரட்ட''வோடு சம்பந்தப்பட்டவர்கள்.

அல்லும் பகலும் ஆலகால விஷத்தைக் கக்கி வருகிறது 'சியரட்ட'. சிங்களப் பாமர மக்களைத் தூண்டுவது மட்டுமல்ல; துவேஷமூட்டுவது மட்டுமல்ல; போர் முரசும் கொட்டத் தொடங்கிவிட்டது அந்தப் பத்திரிகை.

''சிங்களப் பொது மக்களே பொங்கி எழுங்கள். எங்கள் இனத்தைத் தமிழரிடமிருந்து காப்பாற்றுங்கள். தமிழர்களை நிர்மூலமாக்குங்கள்'' என்று அறைகூவல் விடுக்கத் தொடங்கிவிட்டது சியரட்ட-யு. என். பி பத்திரிகை.

### பலே சிங்கள நீதி!

குற்றம் புரிபவர் பிரதமர்; நித்த நித்தம் விஷம் கக்குவது அவரது கட்சிப் பத்திரிகை. ஆயினும் அவர் இன்னும் கைது செய்யப்படவில்லை; பத்திரிகை மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஏன்? அதிகாரம் அவர் கையில்; பொலீஸ் அவர் பின்னால்! பலே நீதி-சிங்கள நீதி!!

---

## எஸ். ஜே. வியின் வேண்டுகோள்

கடந்த பொதுத் தேர்தலில் தமிழ் அரசுக் கட்சி வெற்றி ஈட்ட பொருள் உதவி தந்து துணைபுரிந்த தமிழ் பேசும் மக்களாகிய உங்களிடம் தான் மீண்டும் பணம் தந்து உதவுங்கள் எனக் கேட்க வேண்டிய நிர்ப்பந்த நிலையில் இருக்கிறேன்.

எடுத்த எடுப்பில் தமிழ் பேசும் இனம் தனது இழந்த உரிமைகள் அனைத்தையும் பெற்றுவிட முடியாது. நிலையான கொள்கையோடு தொடர்ச்சியாகப் பல காலத்திற்கு நாம் உரிமைக்குரல் எழுப்பினால்தான் உரிமை வாழ்வு பெற முடியும். உலகில் உள்ள விடுதலை பெற்ற பல் வேறு நாடுகள்-தேசிய இனங்கள் இந்தப் பேருண்மையையே உணர்த்தி நிற்கின்றன. ஆதலால் தமிழ் அரசுக்கட்சியை ஒருகுறிப்பிட்ட குழுவின் கட்சியெனக் கருதாது ஒவ்வொரு தமிழ் மகனும்-மகளும் தாம் அங்கம் வகிக்கும் 'மக்கள் விடுதலை இயக்கம்' (*Peoples, Freedom Movement*) அது எனக்கருதி நிறைந்த தமிழ் உணர்ச்சியோடு பணியாற்ற வேண்டும்.

இம்முறைத் தேர்தலில் நாம் போட்டியிடும் எல்லாத் தொகுதிகளிலும் வெற்றியீட்டி தமிழ் பேசும் இனம் தனது ''சுயநிர்ணய உரிமையை'' நிலைநாட்ட உறுதிபூண்டுவிட்டதை சிங்கள அரசாங்கத்திற்கும் உலகத்திற்கும் எடுத்துக்காட்ட வேண்டும். இந்நிலையை உருவாக்க ஓர் அரிய வாய்ப்பாகவே இத்தேர்தலை நாம் பயன்படுத்த வேண்டும். ஆதலால் இம் முக்கியத்துவத்தை உணர்ந்து இயன்றளவு பணம் தந்து உதவுங்கள் என மீண்டும் பணிவன்புடன் வேண்டுகிறேன்.

எஸ். ஜே. வி. செல்வநாயகம்

16, அல்பிறட் ஹவுஸ் கார்டின்ஸ்
கொள்ளுப்பிட்டி, கொழும்பு-3.

---

கடிதம்:

## வடக்கு-கிழக்கு மாகாணத் தமிழ் மக்கள் பதில் என்ன?

இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்கள் தலைவரும் தமிழரசுத் தந்தையுமான திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தமிழ் பேசும் மக்கள் சார்பில் விடுத்த குறைந்த பட்ச நான்கு அம்சக் கோரிக்கைகள் 'நியாயமற்றவை' என்று யு. என். பிக்காரர்களும் சில தினப் பத்திரிகைகளும் பிரசுரம் செய்து வருவது தெரிந்ததே.

அது மட்டுமல்ல. பாமர சிங்கள மக்களுக்கு தூபம் போட்டு அவர்களைத் தமிழர்களுக்கு எதிராகத் தூண்டி வருகிறார்கள்.

வேண்டுமானால் தலைவர் செல்வநாயகம், ''உடனடியாகச் சமஷ்டி ஆட்சி ஏற்பட வேண்டும்'' என்ற ஒரே கோரிக்கையை விடுத்திருக்கலாம். ஆனால் அவர் ஏனையோரின் அபிலாஷைகளையும் மதித்து மிக, முக்கியமான நான்கு விஷயங்களைப் பற்றியே பிரஸ்தாபித்தார்

இவற்றில் எந்த விஷயத்திலும் தம்மால் இம்மியளவும் விட்டுக் கொடுக்க முடியாது என்று பிரசாரஞ் செய்து வருகிறார். எப்படியும் பிரதமராக இருந்துவிட ஆசைப்படும் டட்லி சேனநாயகா, இந்த நான்கு கோரிக்கைகளில் எதுவொன்றாயினும் நியாயமற்றது என்று கருதும் தமிழ் மகன் இந்நாட்டில் உண்டா?

தொண்ணூற்றைந்து விகிதத்திற்கு மேல் தமிழ் பேசும் மக்கள் வதியும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் அரசகருமமொழியாக ஏற்படவேண்டுமென்பது நியாய மற்றதா?

பரம்பரை பரம்பரையாக இரண்டாயிரம் வருடங்களுக்கு மேல் தமிழ் மக்களுக்குச் சொந்தமாயிருந்த நிலத்தைப் பறிக்கப்படாது என்று கோருவது தவறு?

ஒரே யின மக்களையுடையதும், ஒற்றுமையாட்சியுடையதுமான பிரித்தானியாவிற் கூட பிரதேச சபைகள் மூலம் (County Councils) ஆட்சிப் பொறுப்பு மக்களிடம் பகிர்ந்து அளிக்கப்பட்டிருக்கிறதே! அதே போல் இங்கும் பிரதேச சபைகள் அமையுங்கள் என்று கோருவது முறையற்றதா?

இருநூறு அந்நியப் பிரசைகளான வெள்ளையருக்கும், ஒரு லட்சத்திலும் குறைவாயுள்ள பறங்கியருக்கும், மூன்று லட்சம் மலாய்க்காரர்களுக்கும் விசேட பிரதிநிதித்துவம் வழங்கப்படும். போது,' இந்நாட்டு நலத்திற்காக அல்லும் பகலும் உழைத்து மடியும் பத்து இலட்சம் மலை நாட்டுத் தமிழராகிய நமக்கு நான்கே நான்கு பிரதிநிதிகள் தரும்படி கேட்டது நியாயமற்றதா?

துரதிர்ஷ்டவசமாக எங்கள் வாக்குரிமை பறிபோய் விட்டது. இதற்குப் பதிலிறுக்க வேண்டியது, வாக்குரிமையுடைய தமிழ் மக்களின் தலையாய கடமையாகும்.

உங்கள் தீர்ப்பு சிங்கள அரசியல்வாதிகளின் கண்களைத் திறக்க கூடியதாக இருக்க வேண்டும். அடுத்து வரும் தேர்தலில் நீங்கள் அளிக்கும் தீர்ப்பிற்றான் தங்கியிருக்கிறது இந்நாட்டில் வதியும் சகல தமிழ்ப் பேசும மக்களுடைய வாழ்வும் தாழ்வும்.

மலைநாட்டுத் தமிழன்
நாவலப்பிட்டி.

---

## கொழும்பில் வள்ளுவர் விழா

நான்கு பெரும் கழகங்களின் ஆதரவில்

சைவமங்கையர் கழகம் கொழும்பு, விவேகானந்த சபை, கொழும்பு தமிழ்ச் சங்கம், வெள்ளவத்தை இசைக் கலை மன்றம் என்பவற்றின் ஆதரவில் 8-6-60 புதன்கிழமை மாலை 5 மணிக்கு வெள்ளவத்தை சைவமங்கையர் கழக மண்டபத்தில் வள்ளுவர் விழா கொண்டாடப்படவிருக்கிறது.

திரு. கோ. ஆழ்வார்பிள்ளை தலைமையின் கீழ் விழா கொண்டாடப்படும்.

செல்வி ந. சிவசுப்பிரமணியம், திரு க. பொ. இரத்தினம், திரு ச. சிவகுமாரன் (சென்னை) முதலியோர் விரிவுரை நிகழ்த்துவார்கள்.

திருவாட்டி பரஞ்சோதி அம்மாள் இராசமாணிக்கம் இசைவிருந்து அளிப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடனடி நடவடிக்கையில் தமிழரசுக் கட்சி

## சுதந்திரன் ஆலோசனே செயல்படுத்தப்பட்டது

### மாற்றுக் கட்சிகளின் துவேஷப் பிரசாரத்துக்கு எதிராக கொள்கைவிளக்க துண்டுப் பிரசுரங்கள்

## சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் இலட்சக்கணக்கில் விநியோகம்

யு. என். பியும் அக்கட்சியின் சிங்களப் பத்திரிகையான "சியரட்ட"வும் மற்றும் சில சிங்களப் பத்திரிகைகளும் தமிழரசுக் கட்சியின் கொள்கைகளேயும் கோரிக்கைகளேயும் திரித்துக் கூறிச் சிங்களப் பாமரப் பொதுமக்களைத் தூண்டி விட்டு வருவதை கடந்த வாரங்களில் நேயர்களுக்கு அம்பலப்படுத்தினேம்.

அந்தப் பத்திரிகைகளும் யு. என். பி கட்சியும் துவேஷப் பிரசாரம் செய்வதற்கு எதிர் நடவடிக்கையாகத் தமிழரசுக் கட்சி தன் கொள்கைகளேயும் கோரிக்கைகளேயும் விளக்கி சிங்களத்தில் துண்டுப்பிரசுரங்கள் வெளியிட்டு சிங்களப் பொதுமக்களுக்கு விநியோகிக்க வேண்டும் என்று ஆலோசனை கூறியிருந்தோம்.

சுதந்திரனின் ஆலோசனேப்படி தமிழரசுக் கட்சி உடனடி நடவடிக்கையில் இறங்கியிருக்கிறது. கட்சிக் கொள்கை விளக்கத் துண்டுப் பிரசுரங்கள் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் இலட்சக் கணக்கில் தயாராகி வருகின்றன. அவை வெகு விரைவில் விநியோகிக்கப்படும் என்று தெரிகிறது.

தமிழரசுத் தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் கையொப்பத்தோடு வெளிவரும் மேற்படி துண்டுப் பிரசுரத்தின் தமிழாக்கம் இங்கே பிரசுரிக்கப்படுகிறது.

—ஆசிரியர்.

### கூட்டாட்சி எவற்றைக் கருதவில்லே

1. கூட்டாட்சி என்பது நாட்டைத் தனித் தனி இராச்சியங்களாகப் பிரிப்பதன்று.

2. அது நாட்டைப் பிரித்துச் சிதைப்பதன்று.

3. அது ஒரு மொழி பேசும் மக்கள் கூட்டத்தை ஏனைய மொழிகள் பேசும் மக்கள் கூட்டத்துடன் சேரவிடாது பிரித்துத் தனிப்படுத்துவதன்று.

4. அது நாட்டுப் பிரிவினைக்கு வழி வகுப்பதன்று.

5. சிலர் கூறுவது போல், அது சிங்கள மக்களுக்கு எதிரானதன்று.

6. சிலர் குற்றம் சார்த்துவது போல் அது "சிறுபான்மையினர் ஆதிக்கம்" செலுத்துவதையோ, "நாட்டின் பெரும்பான்மை இன மக்களைக் காட்டிக் கொடுப்பதையோ", பிறநாட்டினர் படை எடுத்தலேயோ ஆதரிக்கவில்லே.

கூட்டாட்சி என்பது நாட்டைப் பிளவு படுத்துவது அல்லது பிரிப்பது என்பவர்கள் உண்மையில் கூட்டாட்சியின் தன்மையை அறியாத காரணமாக அவ்வாறு கூறுகிறார்கள். அன்றேல் அரசியற் காரணங்களுக்காகத் திட்டமிட்டுத் திரித்துக் கூறுகிறார்கள்.

### கூட்டாட்சி என்பது என்ன?

1. கூட்டாட்சி என்பது ஓர் இன மக்களின் உணர்ச்சிகளைத் தேசிய ஒற்றுமையுணர்ச்சியுடன் இசைவுபடச் செய்யும் ஓர் வழியாகும்.

2. அது தனிப்பட்ட சமூக நலன்களில் அக்கறை உள்ள மக்களுக்கிடையில், உண்மையான ஒற்றுமையை நிலே நாட்ட உதவுகிறது; அது வேற்றுமையில் ஒற்றுமை காண்கிறது.

3. கூட்டாட்சியில் முழு நாட்டுக்கும் உரித்தான விடயங்களே மத்திய அரசாங்கம் கவனிக்கும். குறிப்பிட்ட பிரதேசங்களுக்குரிய விடயங்களே மாத்திரம் அப்பிரதேச ஆட்சி கவனிக்கும்.

### தமிழ் அரசுக் கட்சி எவற்றைக் கேட்கவில்லே

1. தமிழ் அரசுக் கட்சி புறம்பான தமிழ் இராச்சியம் ஒன்று வேண்டுமென்று கேட்கவில்லே.

2. தமிழ் அரசுக்கட்சி ஆயுதந் தாங்கிய படைகள், வெளிநாட்டுத் தொடர்புகள், நாணயம், போக்குவரத்து, வியாபாரம், அஞ்சல், புகைவண்டி போன்ற நாட்டுக்குப் பொதுவான விடயங்களைத் தன்னதிகாரத்தில் விடும்படி கேட்கவில்லே.

உண்மை இவ்வாறிருக்க, தமிழ்அரசுக்கட்சி பற்றி அவதூறு சொல்லித் துர்ப்பிரசாரம் செய்பவர்கள் இக் கட்சியையும் இதன் கொள்கைகளேயும் மாசு படுத்தி, மக்கள் மனத்திலே தப்பெண்ணம் உண்டாக்குவதற்கே அவ்வாறு செய்கிறார்கள்.

### தமிழ் அரசுக் கட்சி கேட்பன எவை

1. பரம்பரை, பரம்பரையாகத் தமிழ் பேசும் மக்கள் வாழ்ந்து வரும் பிரதேசத்தில் அம்மக்களுக்கு அரசாங்க அதிகாரத்தில் நியாயமான அளவு பங்கு கொடுக்க வேண்டுமென்றே தமிழ் அரசுக் கட்சி கேட்கின்றது. அரசாங்க அதிகாரம் முழுவதிலும் பங்கு கேட்க வில்லே. கல்வி, உடல் நலம், உள்ளூர் ஆட்சி, நில அபிவிருத்தி, நீர்ப் பாய்ச்சல் முதலிய பிரதேச முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களிலேயே பங்கு கேட்கிறது.

2. இக்கட்சி இலங்கையிலே, கூட்டாட்சி நிலவ வேண்டுமெனக் கேட்கிறது. இக் கூட்டாட்சி மூலம் சிங்கள மக்களுக்கும் தமிழ் பேசும் மக்களுக்குமிடையில் முழு ஒத்துழைப்பையும், சமாதானத்தையும், ஒற்றுமையையும் நிலே நாட்ட விரும்புகிறது.

3. சுதந்திரமும் நீதியும் மக்கள் யாவருக்கும் கிடைக்க வேண்டுமென்றும் நாடு முழுவதும் அபிவிருத்தி செய்ய வேண்டும் என்றும் இக்கட்சி கேட்கிறது.

தமிழரசுக் கட்சி சிங்கள மக்களுக்கு விடுக்கும் செய்தியாதெனில் "நீங்கள் நன்குக வாழுங்கள்—எங்களேயும் வாழ விடுங்கள்" என்பதே.

### கூட்டாட்சி என்பது புதிய கருத்தா?

கூட்டாட்சி என்பது புதியதொரு கருத்தோ அல்லது கண்டு பிடிப்போ அல்ல, பல்வேறு இன மக்கள் வாழும் நாடுகளில் எழுந்துள்ள அதிக சிக்கலான இன, மொழி, பொருளாதாரப் பிரச்னேகளே வெற்றிகரமாக தீர்த்து வைப்பதற்கு ஒரு கைகண்ட மார்க்கமாக கூட்டாட்சி அமைந்துள்ளது.

### கூட்டாட்சியுள்ள நாடுகள் எவை?

அமெரிக்க ஐக்கிய இராச்சியம், கனடா, உருசியா, யூகோசிலேவியா, சுவிச்சர்லாந்து, அவுத்திரேலியா, இந்தியா, பாக்கித்தான், மலாயா ஆகிய யாவும் கூட்டாட்சியுள்ள நாடுகளே. இந்த நாடுகள் பிளவுற்றோ, ஒற்றுமையின்றியோ இருக்கின்றன வென்று சொல்லுவாரைக் காணேம். இந்த நாடுகளின் ஒற்றுமைக்குக் கூட்டாட்சி அமைப்பே முக்கிய காரணமாகும்.

### கூட்டாட்சியுள்ள சிறு நாடுகளுண்டோ?

உண்டு. 25,000 சதுர மைலில் நிலப்பரப்பைக் கொண்ட இலங்கையிலும் பார்க்கச் சிறிய நாடாகிய சுவிச்சர்லாந்து (15,950 சதுர மைல்) கூட்டாட்சியை கொண்டுள்ளது. சுவிச்சர்லாந்தின் குடித்தொகை ஏறக்குறைய இலங்கையின் குடித்தொகையில் அரைப் பங்காகும்.

### இலங்கை கூட்டாட்சி பெறின் அது தென் இந்தியாவுடன் இணேந்து விடுமெனக் கூறலாமா?

1. கூட்டாட்சியெனின் எப்பொழுதாயினும் தென் இந்தியாவுடன் சேர்வதாகும் என்பது மிகத்தப்பான கூற்ருகும்.

2. இவ்வாறு சேர்வது சாத்தியமாகாது. அதற்கு காரணங்கள்—

(அ) இலங்கையின் கூட்டாட்சியில் வெளிநாட்டுத் தொடர்புகளும், ஆயுதந் தாங்கிய படைகளும் சிங்கள மக்களின் அதிகாரத்திலுள்ள மத்திய அரசாங்கத்தின் கையிலேயேயிருக்கும்.

(ஆ) இந்தியக் கூட்டாட்சியின் கீழுள்ள பிரதேசத்தில் பதினேந்தில் ஒரு பங்கான தென் இந்தியாவுக்கு வெளி நாட்டுக் கருமங்களில் அதிகாரமில்லே. அத்தகைய அதிகாரங்கள் யாவும் புது டெல்லியிலுள்ள இந்திய மத்திய அரசாங்கத்தின் கையிலேயே யுள்ளன.

### சம அந்தஸ்து என்ருல் என்ன?

(1) சிங்களத்துக்கும் தமிழுக்கும் சமமான நிலே. அதாவது அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் சிங்கள மக்களுக்குச் சிங்களம் எந்நிலேயிலுண்டோ அதே நிலேயில் தமிழ் பேசும் மக்களுக்குத் தமிழ் இருத்தல் வேண்டும் என்பதே.

(2) சம அந்தஸ்து என்பது மொழி வழங்கப்படும் தன்மையைக் குறிப்பதேயன்றி அதன் அளவையன்று.

(3) தமிழுக்குச் சம அந்தஸ்துக் கொடுத்தால், சிங்கள மக்கள் தமிழ் படிக்க வேண்டுமென்று இப்பொழுது பிழையாகச் சிலர் கருதுகின்றனர்.

சிங்கள மொழியை வளர்ச்சியடையச் செய்து அதற்கு உரிய இடத்தைக் கொடுக்க

(12-ம் பக்கம் பார்க்க)


கே. பாலச்சந்திரன் அளிக்கும்

'நாடக விழா'

கொழும்பு நகர மேயர் ஆரம்பித்து வைப்பர்.

பிரபல வானெலி புகழ் "சாணு"—திரு. சண்முகநாதன் தயாரித்த

"பதியூர் ராணி"


என்ற சரித்திர நாடகம்

4-ம் 5-ம் தேதிகளில் நடைபெறும்.

மற்றும் ரொசாரியோ பீரிஸ்—திரு: ஏ. சரவணமுத்து (றேடியோ மாமா) திரு. சோதிநாதன் ஆகியோரும் நடிக்கின்றனர்.

இடம்: லயனல் வென்ட்ர் தியேட்டர் கொழும்பு.

டிக்கட் விபரம்: ரூபா 5, 3, 2.


திறமாக நீர்ப்பாய்ச்சுவதற்குகந்த நம்பிக்கைவாய்ந்த பம்ப்

விங்கெட்

நிர்மாண இயந்திரங்கள் உற்பத்திசெய்யும் உலகப்பிரசித்திபெற்ற மெனி லேர்ஸ் விங்கெட் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் தயாரிக்கப்பட்ட இந்த அடக்கமான, உறுதிவாய்ந்த தண்ணீர் பம்ப்கள், அதிககாலம் மகத்தான சேவையைத் தருகின்றன.

இவற்றின் பராமரிப்புச் செலவு மிகக் குறைவு. மிப் பாட்டர் பெட்டி விலேகளில் கிடைக்கும். வில்லியர்ஸ் ... ஸ்ட்ராக் ... பெற்றோல்/மண்ணெண்ணெய் எஞ்ஜின்கள் பாவிக்க ... எம்மிடம் ... பலரக ... உள்ளன. ... குழாய்களும், கை உருளைகளும் கிடைக்கும்.

உபவிநியோகஸ்தர்கள்:

ராஜரத்னம் அன் கம்பெனி,
244, கே. கே. எஸ். ரோடு,
யாழ்ப்பாணம்.

முழு விபரங்களுக்கு எங்களை விசாரிக்கவும்:

தி கொழும்பு கொமர்ஷியல் கம்பெனி லிமிட்.
(பெரிய பிரித்தானியாவில் இணைக்கப்பட்டது—அங்கத்தவர்களின்பொறுப்பு வரையறுக்கப்பட்டது)
தபாற்பெட்டி 33, கொழும்பு
... போன்: 7...

உயர்ந்த சேவை

1½" மோடல்-மணித்தியாலம் 1500-6000 கலன் இறைக்கிறது.

2" மோடல்-மணித்தியாலம் 1680-11000 கலன் இறைக்கிறது.

3" மோடல்-மணித்தியாலம் 4300-16800 கலன் இறைக்கிறது.

டிலிவரிக்கேற்ப ஹெட்டும், சக்ஷன் லிவ்ட்டும் தேவை

ஆகக் கூடுதல் முழு ஹெட் 70 அடி

ஆகக் கூடுதல் சக்ஷன் லிவ்ட் 25 அடி

எமது பிரதிநிதியை விசாரிக்கவும்:
எம். பூபாலசிங்கம்,
244, கே. கே. எஸ். ரோட்,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தெய்வத் தமிழ்மறை

பல்லவி

தெய்வத் தமிழ் மறையை தினம் ஓது;—உள்ளம்
தெளியும், மடமையிருள் ஒழியும்; தவருது (தெய்வ)

அநுபல்லவி

உய்வைத் தரும், இனிய பொய்யா மொழியமுதம்;
ஒப்பற்ற வள்ளுவர் அற்புத மாய்ப்படைத்த, (தெய்வ)

சரணம்

அன்பு வளம் பெருகும், துன்பமெல் லாம்கருகும்;
அறிவுத் திறன்விரியும், பொருளனைத் தும்புரியும்;
பண்பு நெறிதுலங்கும், இன்பநல் வாழ்விலங்கும்,
பாரகத் தே,அமரப் பேறனைத் தும்கிடக்கும்; (தெய்வ)

# வள்ளுவன் மாண்பு

பல்லவி

வள்ளுவன் மாண்புரைக்க வாயேது? — அவன்
மலரடியை, உளத்தால் வழுத்துவ தன்றி, திரு (வள்ளு)

அநுபல்லவி

அல்லல் அகன்றுலகம் நல்ல சுகம்பெற, ஈ
ராயிரம் ஆண்டின்முன்பே தூய நெறிவகுத்த, (வள்ளு)

சரணம்

அலைகடல், மலை, வான் பூ, வுலகையெல் லாம்அளந்து.
ஆழ்ந்தகன் ருேங்கியநுண் ணறிவனைத் தும்கொணர்ந்து,
“இலையிதில் இல்லாப்பொருள்” என, உணர்ந் தோர்வியக்க,
இனிய குறளமுத மணியிற் பொதிந்தளித்த. (வள்ளு)

“பரமஹம்ஸ தாசன்”

# ஞானகலாநிதி

(க. வ. ஆறுமுகம்)

செந்தமி ழன்னை உலகினுக் கீந்திட்ட
சீர்மறை யின்பெயர் சொல்தோழி?
எந்தமி ழோர்கள் உயிரெனப் போற்றும்
இனிய திருக்குறள் என்தோழி!

தென்தமிழ் நாட்டவர் செய்தவ முற்றுமே
சேர்ந்த திருப்பெயர் சொல்தோழி?
அந்தமில் கீர்த்தி அகிலம் அளிக்கும்
அருந்தவ வள்ளுவர் என்தோழி!

மாய மூலமெனும் ஈன நெறியினை
மாற்றி அமைத்தவர் யார்தோழி?
வையக வாழ்வினில் தெய்வநி லைகண்ட
மாமுதற் பாவலர் என் தோழி!

துன்பம் தவிர்ந்திட வாழ்வி லவர்சொலும்
சேதிக ளுண்டெனிற் சொல் தோழி?
அன்பை மறந்தவர் துன்ப மடைதல்
அறத்தியல் பென்றனர் என்தோழி!

ஞாலத்திற் பெண்களின் சீலத்தைப் பற்றிஅந்
நாயனுர் சொல்வது சொல்தோழி?
நாயகன் தெய்வமென் றேதொழு வாளிந்த
நானிலத் தெய்வமென் ருர்தோழி!

சாதி பிறப்பினைச் சார்ந்த முறைமை
தமிழ்மறை கூறுதோ சொல்தோழி?
தீது மகாகொடி திம்முறை சாதி
செயல்வழி என்கிற தென்தோழி!

காதலர் இன்ப வழக்கினை ஞான
கலாநிதி சொல்வதுண்டோ தோழி?
ஓதிட ஓதிட இன்பம் தளிர்ப்பவை
எத்தனை யோவுண்டு என்தோழி!

நீதில் அறம்பொருள் இன்ப மடைந்தவர்
செல்கதி என்னசொன் ஞர்தோழி?
சாதல் பிறத்தல் தவிர்ந்திடு பேரின்பச்
சாந்தி உலகது என் தோழி!

# வாழும்முறை உரைத்த வள்ளுவர் மாபெரும் புரட்சியாளர்

## அழிவின் எல்லையை அணுகிக்கொண்டிருக்கும் உலகோருக்கு உய்யும் வழி காட்டுகிருர்

[ பண்டிதர் கா. பொ. இரத்தினம்
தலைவர் : தமிழ் மறைக் கழகம் ]

வான்புகழ்கொண்ட வள்ளுவனுக்கு வையகமெங்கும் விழா. தமிழ் பேசும்மக்கள் எங்கெங்கெல்லாம் வாழ்கிருர்களோ அங்கங்கெல்லாம் விழா—வைகாசி அனுடத்தில், அதாவது இம்மாதம் 8-ந் தேதி.

அகில இலங்கைத் தமிழ்மறைக் கழகம் உலகத் தமிழரை ஒன்றுபடுத்தும் உயரிய நோக்கோடு ஆண்டில் ஒரு நாளை—வைகாசி அனுடத்தை வள்ளுவன் திருநாளாகக் கொண்டாடும்படி வேண்டி வருவதற்கு நல்ல பயன் கிடைக்கிறது. பொதுமக்களும், கழகங்களும், வானொலி நிலையங்களும், பத்திரிகைகளும் ஒத்துழைத்து ஆண்டில் ஒருநாளேனும் வள்ளுவன் பெயர் அகிலம் எங்கும் ஒலிக்கவும் அவன் வாய்மொழி வழங்கவும் வழி செய்து வருவது தெரிந்ததே. வள்ளுவர் திருநாளையொட்டி இங்கு கவிதைகளும் கட்டுரையும் பிரசுரிக்கப்படுகின்றன.

சமயத்துறை, சமூகவாழ்வுத்துறை, பொருளாதாரத்துறை, அரசியற்றுறை முதலிய பலதுறைகளிலே புரட்சியாளர் பலர் தோன்றி மக்கள் வாழ்வைச் செம்மைப் படுத்தியுளர். இப்புரட்சியாளர்களுக்குள்ளே முன்னணியில் விளங்கியவர் திருவள்ளுவராவர். மக்கள் வாழ்வின் துறையனைத்திலும் மாபெரும் புரட்சியினை அவர் உண்டாக்கியிருக்கிருர். மக்கள் இவ்வுலகிலே இன்பமாய் வாழுதற்கேற்ற வழிகளை எல்லாம் அவர் வகுத்திருக்கிருர். அவர் காலத்திலிருந்த கண்மூடிப் பழக்க வழக்கங்கள் யாவற்றுக்கும் மாருக அவர் புரட்சி செய்திருக்கிருர். இன்று உலகப் பேரறிஞர் விரும்பும் மாற்றங்களையும் அன்று அவர் எடுத்துரைத்திருக்கிருர். இன்னும் உலகம் நன்கு உணர்ந்து மேற்கொள்ள முடியாது தயங்கும் வழிகளையும் அவர் அன்றே தெளிவாக விளக்கியிருக்கிருர்.

இன்று உலகத்தில் உள்ள போட்டி பொருமைகளுக்கும், பெரும் பூசல்களுக்கும் பிரிவினைகளுக்குங் காரணமாயிருப்பது பொருளாதாரமேயாகும். நெற்றிவியர்வை நிலத்தில் சிந்த உழைக்கும் பாட்டாளி மக்கள் உண்ண, உடுக்க, உறங்கப் போதிய வாய்ப்பின்றித் துடிப்பதையும், அன்பும் அறமும் சேராத வழிகளிற் பொருளையீட்டிக்குவித்த செல்வர்கள் அப்பொருளைப் பல்வேறு புதுப்புது வழிகளிற் செலவு செய்து போகக்கடலிற்றிளைப்பதையும் நாம் காண்கிருேம். பிழைக்க வேறு வழியன்றிப் பிச்சை எடுத்து வாழ்கின்றவர்களும் உலகத்து நாடுகள் பலவற்றிலே உளர்.

### வள்ளுவரின் ஆவேசம்

உழைத்து வாழ முடியாத—உழைப்புக்கேற்ற ஊதியம் பெறமுடியாத—ஒரு சமுதாயம் உருவாக்கப்பட்டால் அதை உருவாக்கினவர்கள் அழிக்கப்பட வேண்டியவர்களே. “தனி ஒருவனுக்கு இங்கு உணவில்லை எனில் சகத்தினை அழிப்போம்” என்ருர் பாரதியார். வள்ளுவர் காலத்திலே வறியவர்களாயும் செல்வர்களாயும் ஆவது விதியின் பயன் என்ற கொள்கையைப் பல சுயநலப் புலிகள் நிலைநிறுத்தி வயிறு வளர்த்தார்கள். ‘எல்லாம் கடவுளின் கட்டளை’ என்று அவர்கள் மக்களை ஏமாற்றினுர்கள். எனவே, வள்ளுவர் ஒருவன் இரந்து வாழ வேண்டின் இந்த உலகம் மட்டுமன்றி இந்த உலகத்தை ஆக்கியவனும் அழிந்துபோக வேண்டும் என்று வெகுண்டு வைத்தனர்.

“இரந்தும் உயிர் வாழ்தல்
வேண்டின் பரந்து
கெடுக இவ்வுலகியற்றியான்.”

எதற்கும் வெகுளாத அருள் உள்ளம், கடவுளை இழுத்து மக்களை ஏமாற்றுபவர்களை எண்ணும் பொழுது கொதித்துக் குமுறுகிறது.

### விதிக்கும் மூடநம்பிக்கைக்கும் எதிர்ப்பு

“விதி விதி” என்று கூறி மக்கட்குலத்தை மடமைச் சேற்றிலே புரள வைத்துள்ளனர் சுயநலவாதிகள் பலர். இந்தத் துரோகச் செயலை எதிர்த்துப் பெரும் புரட்சி செய்தவர் வள்ளுவர். “எல்லாம் எம் தலைவிதி” என்று கருதிச் சோர்ந்து விழுந்து கிடந்த மக்களைத் “தெய்வத்தாலாகாதெனி



பண்டிதர் கா. பொ. இரத்தினம்

னும் முயற்சி மெய்வருந்தக் கூலி தரும்”, “பயப்படாதிர்கள் முயற்சி பெருமை தரும்” என்று ஊக்கியவர் வள்ளுவர்.

“கடவுளுடைய வாக்குகள் இவை, முனிவர்களுடைய கூற்றுக்கள் இவை, இவற்றை ஆராயாமல் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆராயமுற்பட்டால், பொருத்தமற்றன என்று இகழ்ந்தால் நரகத்தில் அழுந்துவீர்கள்” என்று முழங்கிய நூல்கள் மலிந்த அக்காலத்தில் “உண்மைப் பொருளை ஆராய்ந்து பார்த்து அறிதல் வேண்டும்; குருட்டுத்தனமாக எதையும் நம்புதல் கூடாது, யார் கூற்றுனுலும் ஏற்றுக் கொள்ளல் கூடா” என்று பெரும் புரட்சி செய்தவர் வள்ளுவர் பெருமான்.

“எப்பொருள் யார் யார்
வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள்
காண்பதறிவு,”

என்று கூறி அறிவுலகில் ஒரு பெரிய திருப்பத்தை உண்டாக்கிய பெருமை அவருக்குரியது. ஆராய்ச்சி மனப்பான்மையை மக்களிடத்தே உண்டாக்கியவர்களுக்குள்ளே தலைசிறந்தவர் திருவள்ளுவரேயாவர். ஆராய்ச்சி செய்கிறவர்களுக்கு வழிகாட்டிவரும், ஆராய்ச்சி செய்யுமாறு மக்களைத் தூண்டியவரும் அவரேயாவர்.

### வாழும் முறை உரைத்தார்

“செத்த பின் சிவலோகம், வைகுண்டம்” என்று பிதற்றியவர்களுக்கு “இந்த உலகிலேயே இன்ப வாழ்வுண்டு சுவர்க்க வாழ்வுண்டு, உண்மையான வாழ்வுண்டு” என்று விளக்கியவரும் திருவள்ளுவரே.

“வையத்துள் வாழ்வாங்கு
வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள்
வைக்கப்படும்”

என்று முழங்கினுர் அவர்.

“காயமே பொய்யடா காற்றடைத்த பையடா; பெண்ணினம் மாயப் பிசாசினம்; உலகம் கானல் நீர்” என்ற கொள்கையில் அழுந்தி, வாழும் வகையறியாமற் கிடந்து தவித்த மக்களுக்கு உலகத்திலே சிறப்பாக வாழும் முறையை வகுத்துக் காட்டிய தனிப்பெருமை வள்ளுவருக்குரியது.

### எது கடமை

சாதிக்குரிய கடமைகளைச் செய்ய வேண்டுமென்று வகுக்கப்பட்ட சட்ட திட்டங்களை உடைத்தெறிந்து நல்ல காரியங்களைச் செய்வது தான் கடமையென்று நிலை நாட்டியவர் வள்ளுவர். பயன் கிடைத்தாலுங் கிடைக்காவிடினும் நல்லவற்றைச் செய்ய வேண்டும் என்று மக்களைத் தூண்டினுர் அவர். “மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று” என்று அவர் வற்புறுத்தினுர்.

### பெண்ணின் பெருமை

அடக்கப்பட்டவர், தாழ்த்தப்பட்டவர், நசுக்கப்பட்டவர் முதலானேருக்கு விடுதலை பெறும் வழியைக் காட்டி, அவர்கள் உயர்ந்தோராக வாழும் முறையை அழுத்தம் திருத்தமாய் எடுத்து விளக்கினுர் வள்ளுவர்.

“எண்ணிய எண்ணியாங்கு
எய்துவர் எண்ணியார்
திண்ணியராகப் பெறின்”
“அருமையுடைத்தென்று
அசாவாமை வேண்டும்
முயற்சி பெருமை தரும்”
“ஆக்கம் அதர்வினுஅய்ச்
செல்லும்
அசைவிலா ஊக்கமுடையா
னுழை”

என்றெல்லாங் கூறி மக்களுக்குத் தன்னம்பிக்கையும் மனத்திட்பத்தையும் உண்டாக்கினுர்; தாழ்வு மனப்பான்மையும் தோல்வி மனப்பான்மையும் நிறைந்து சோர்ந்து கிடந்த மக்களுக்கு வீரத்தையும் ஊக்கத்தையும் ஊட்டினுர்.

(14-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவியல்:

# கற்பு நெறி தவருத பறவை

## இறக்கைகள் இருந்தும் பறக்க முடியாதது

# 30 மைல் வேகத்தில் நீந்திச் செல்கிறது

# 'பென்குவின்' பறவை தனி ரகம்!

தென் துருவத்திலே மட்டும் வாழும் பென்குவின்—முழுப் பெயர் அடெலி பென்குவின்—ஒரு விந்தையான பறவையாகும். "தென் துருவத்துக் கோமாளி" என்றும் இதற்குப் பெயர் உண்டு. ஆராய்ச்சி விஞ்ஞானிகள் பரிசீலனை செய்துள்ள மிக மிக விந்தையான பறவைகளில் இதுவும் ஒன்று.

ஜான் ஹாப்கின்ஸ் சுகாதாரப் பள்ளியைச் சேர்ந்த டாக்டர் வில்லியம் ஜே. எல். ஸ்லேடன் 12 ஆண்டுகளுக்கு மேலாக இந்த விந்தைப் பறவையைப்பற்றி ஆராய்ச்சி நடத்தி வந்திருக்கிருர். பென்குவின் பறவையைப் பற்றி அவர் பல விஷயங்களை நன்கு அறிந்து இருக்கிருர்.

### பறக்காத பறவை

பென்குவின் இறகுள்ள பறவைதான்; ஆனல் பறக்க முடியாது. பல பென்குவின்கள் சேர்ந்தால் அது பறவை "கூட்டம்" அன்று; பறவைக் "கூட்டம்" ஆகும். இந்தப் பறவைகள், முன்புறம் வெள்ளை நிறமும் பின்பக்கம் கருப்பு நிறமும் கொண்டதாகத் தூய வெள்ளை 'டை'யும், நீண்டு தொங்கும் அங்கியும் அணிந்த கனவான்கள் மாதிரி தோற்றமளிக்கின்றன.

மனிதர்களைப் போலவே இந்தப் பறவைகளும் கூடி வாழும் குணம் படைத்தவை; சேர்ந்து பழகும் தன்மையுடையவை. மிகப் பலமான குடும்ப உறவுகளும் இந்த பென்குவின் பறவைகளுக்கு உண்டு. மீன்களைப் போல நீந்துகின்றன. மணிக்கு 30 மைல் வேகத்தில் சிறு கடல் பிராணிகளைப்போல் நீந்துகின்றன. வானை நோக்கித் தாவுகின்றன. "அர்க் ஆர்க்" என்று கூச்சலிட்டுக்கொண்டு தாவுகின்றன.

தென் துருவ மண்டலத்தில் மட்டும் வாழும் இந்த அதிசயப் பிராணியைக் கூண்டிலடைத்துக் காப்பாற்றுவது மிகக் கடினம். ஆகையால் அதைப்பற்றிய ஆராய்ச்சியை அதனுடைய இயற்கையான இருப்பிடத்தில்தான் நடத்த வேண்டும்.

பென்குவினைப் பிடிப்பது எளிது. இதனல் டாக்டர் ஸ்லேடன் தமது ஆராய்ச்சிகளின்போது 338 பறவைகளைப் பிடித்து இலேசான அலுமினிய வளையம் ஒன்றை அவற்றின் கழுத்தில் மாட்டி அடையாளம் செய்தார். வேறு 1360 பறவைகளைப் பிடித்து வர்ணம் தீட்டிக் குறியிட்டார். ஒவ்வொன்றுக்கும் ஓர் அடையாள எண் இருந்தது. தொலை நோக்கிக் கண்ணுடிமூலம் இந்த எண்களை எளிதில் படிக்கலாம்.

"லின்பூல்"

இரண்டு ஆண்டுக் காலம் இந்தப் பறவைகளின் நடமாட்டத்தை டாக்டர் ஸ்லேடன் கவனித்து வந்த காரணத்தால், பென்குவின் பறவைகளைப்பற்றி மக்களிடையே இருந்து வந்த சில தவருனக் கருத்துக்களைக் களைவதற்கு சாத்தியமாயிற்று. அத்துடன் சில புதிய தகவல்களையும் தந்துள்ளார்.

### குஞ்சு பொரிக்கும் காலம்

பென்குவின் பறவைகள் உணவுக்காக மாரிக் காலத்தைக் கடலிலேயே கழிக்கின்றன என்ற உண்மையை டாக்டர் ஸ்லேடன் கண்டு கொண்டார். சிறு கடல் பிராணிகளைத்தான் பென்குவின்கள் புசிக்கின்றன. வசந்த காலத்தில் அவை முட்டையிட்டுக் குஞ்சு பொரிப்பதற்குரிய இடத்திற்கு 200 மைல் தூரம் வரை கூடச் செல்கின்றன. சிலசமயங்களில் பனிக்கட்டிகள்மீது இவை 60 மைல் வரையிலும்கூட ஆடி அசைந்து நடந்து செல்ல வேண்டியிருக்கும். ஒவ்வொரு ஆண்டிலும் இந்தப் பறவைகள், முட்டையிடுவதற்குப் பழைய இடத்திற்கே திரும்பி வருகின்றன. பென்குவின் பறவைகள் பெண்ணும் சரி ஆணும் சரி கற்பு நெறி தவறுவதில்லை. கடலிலிருந்து திரும்பி வருகையில் வழக்கமாகக் குஞ்சு பொரிக்கும் இடம் இன்னும் பனிக்கட்டியால் மூடப்பட்டிருந்தால்கூட, இந்த இடத்தை விட்டுப் போவதில்லை.

மூன்று வாரங்களில் இரண்டு முட்டைகளை இடுகிறது பென்குவின். ஆணும் பெண்ணும் வாரக்கணக்கில் உணவில்லாமல் இருப்பதால் அடைகாக்கும் பணியை ஆணும் பெண்ணும் மாறி மாறிச் செய்கின்றன. ஆண் இரை தேடகடலுக்குச் செல்கையில் பெண்ணும், பெண் இரை தேடப் போகையில் ஆணும், அடைகாக்கின்றன. இரண்டு வாரத்திற்கொரு தடவை பணியை மாற்றிக் கொள்கின்றன. 35 நாள் வரை அடைகாக்க வேண்டியிருக்கிறது.

குஞ்சுகளுக்கு இறக்கை முளைக்கும்வரை பெற்ருேர்கள் தாம் உணவு அளித்து பராமரிக்கின்றன. தங்களுடைய குஞ்சுகளை மட்டும் தான் பெற்ருேர்கள் கவனித்துக்கொள்கின்றன என்பதையும் டாக்டர் ஸ்லேடன் கண்டுகொண்டார். 8 அல்லது 9 வாரம் ஆனதும் குஞ்சுகளைப் பெரிய பறவைகள் கைவிட்டுவிடுகின்றன.

குஞ்சுகளுக்குத் தாய்ப் பறவையும், தந்தையும் நீந்தக் கற்றுக்கொடுக்கின்றன என்பது சில ஆராய்ச்சியாளர்களின் கருத்து. ஆனல், இவை தாமாகவே நீந்தக் கற்றுக்கொள்கின்றன என்று டாக்டர் ஸ்லேடன் கண்டு கொண்டார். முதன் முதலாக அவை நீந்த முயற்சிப்பது விகாரமாக இருந்தாலும் பார்க்க வேடிக்கையாக இருக்கும் என்கிருர் டாக்டர் ஸ்லேடன்.

### ஆராய்ச்சி ஏன்?

பென்குவின் பறவைகளைப் பற்றி ஆராய்ந்து அறிவதற்கு இவ்வளவு சிரமம் எடுத்துக்கொள்வானேன்? நீர்ப் பறவைகளுக்கும்,வேறு சில பறவைகளுக்கும், சில சமயம் மனிதனுக்கும்கூட காணப்படும் 'ஆஸ்பெர்கில்லோஸிஸ்' என்ற நோய்க்கு சிகிச்சை கண்டுபிடிப்பதில் முனைந்திருக்கிருர் டாக்டர் ஸ்லேடன். பென்குவின் பறவைகள் எவ்வாறு வெப்பத்தை வெளியிடாமல் வைத்திருக்கின்றன. என்பதைப்பற்றி அவர் ஆராய்ச்சி செய்தார். கால்வழியாக வெப்பம் குறைந்து போவதைத் தடுக்கக்கூடிய ஒப்பற்றதொரு ரத்தக் குழாய் அமைப்பு பென்குவின் பறவைக்கு இருப்பதைக் கண்டார்.

உப்புத் தண்ணீரைக் கொண்டு மட்டும் இந்தப் பறவைகளால் எப்படி உயிர் வாழ முடிகிறது என்பதையும் அவர் கண்டுபிடிக்க முயற்சிசெய்கிருர். நடுங்கும் குளிரில் இவை பிழைத்திருக்கும் அதிசயம்பற்றியும் சில விவரங்களை அவர் தெரிந்து கொள்வார். சாதாரண ஜலதோஷம் சம்பந்தமான ஆராய்ச்சிக்கும் அவர் பென்குவினைப் பயன்படுத்துகிருர்.

—சிவாஜி

# பெண்ணுலகின் முத்து

"யுவன்"

வட்டமுக வெட்டழகு
வஞ்சி அபரஞ்சி,
ஒட்டினளவ் வேலியதன்
ஓரமதில் ஒஞ்சி,
"மொட்டனைய நெஞ்சு மரப்
பட்டையிலுரஞ்சிக்
கெட்டுவிடும்" என்ற என்
கிண்டலுக்கஞ்சி!

அன்ன நடை, மின்னலிடை
கன்னங்கனி அந்த
மின்னொளியாள் கண்விழியில்
மேவு மெழில்; சொந்தப்
புன்னகையைப் பொன் நகையாய்ப்
பேணுமவள் இந்த
மண்ணுலகு மாதரசி
பெண்ணுலகின் முத்து!

# இஸ்லாமியரும்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பேசிய மொழி தமிழ் மொழிதான் என்பதும், நாகரிகத்திலும் பண்பாட்டிலும் சிறந்து விளங்கியவர்கள் முதன் முதலில் தமிழரே யென்பதும் ஆராய்ச்சியாளர் கண்டறிந்த உண்மையாகும். தெலுங்கு கன்னடம் மலையாளம் துளு முதலாம் மொழிகளனைத்தும் தமிழிலிருந்தே தோன்றியன வென்பதும், நம் நாட்டு மொழி கலை கலாச்சாரம் நாகரிகம் பண்பாட்டென்பன கிழக்கிலும் மேற்கிலுமுள்ள பிறநாடுகளில் சென்று பரவிய பின்னரே அந்நாடுகள் நாகரிகமும், முன்னேற்றமும் அடையத் தொடங்கின வென்பதும் வரலாற்றாசிரியர்களின் தீர்க்கமான முடிவாகும்.

### ஈழம் அடைந்த இழிநிலை

இவ்வாறு பரந்து பட்ட நம் தமிழ்நாடு அயல் நாட்டாரின் படையெடுப்புகளாலே குறுகித் தென்னிந்தியாவையும், மற்றுஞ் சில இடங்களையும் மட்டும் அடக்கிய பிரதேசமாக மாறியுள்ளது. அயல் சாதியாரின் மொழி, மதம் கலை கலாச்சாரங்களை அடிமைப்படுத்தி அவற்றின் வளர்ச்சியைக் குன்றச் செய்தன. அன்னியரின் போலி நாகரிகத்திலும் பழக்க வழக்கங்களிலும் மூழ்கி நம்மவர் நமது பெருமை மிக்க நாகரிகம், பழக்க வழக்கம் என்பவற்றை மறந்தனர். தாய் நாடாகிய திராவிடத்திலும், சேய் நாடாகிய ஈழத்திலும் அன்னியரின் ஆதிக்கம் கூடக்கூட, அவர்களின் தொகை பெருகப் பெருக நாடு இனம் மொழி அபிவிருத்தியடையாது தாழ்த்தப்பட்ட நிலைக்குள்ளாகியது. அயல் நாட்டாரின் அடிமையாட்சியையொழித்துச் சுதந்திரம் பெற்ருேர். மொழியுரிமை, இன உரிமை, மத உரிமை, தொழிலுரிமைகளைப் பெற்றுச் சுபீட்சமாக வாழ்வு நடத்தலாம் என்று எதிர்பார்த்திருந்த தமிழர் சமுதாயம், ஆங்கிலேயரின் சூழ்ச்சியான சுதந்திர ஆட்சித் திட்டத்தால் பெரும்பான்மை மக்களின் நெருக்குதலுக்காளாகித் தன்மானமிழந்து, தலைகவிழ்ந்து அடங்கி யொடுங்கி அடிமையாக வாழவேண்டிய பரிதாப நிலையேற்பட்டுள்ளது.

### கல்லடி, பொல்லடி கற்பழிப்பு

தனிச் சிங்களம் ஆட்சிபீடமேறிய பின்னர் முன்னொருகால் ஈழ நாடு முழுவதையும் ஒரே குடைக் கீழ்க் கட்டியாண்ட தமிழினம், இந்நாட்டின் விடுதலைக்கும், முன்னேற்றத்திற்கும் காரணமாக விருந்த தமிழினம் கல்லெறிக்கும் பொல்லடிக்கும் ஆளாகிக் கஷ்டநஷ்டங்களையனுபவித்ததையும், கொலை கொள்ளை கற்பழிப்பு முதலாம் கொடிய செயல்களுக்கிலக்காகி மாண்டு மடிந்ததையும் நாம் மறக்க முடியாதவர்களாயிருக்கின்ருேம்.

### ஒற்றுமையின்மை

எத்தனை நெருக்கடிகளேற்பட்டபோதிலும் தெய்வத் தமிழன்னை யென்றுமே அழிந்தொழியமாட்டாளென்பது உலகறிந்த உண்மை. கஷ்ட நஷ்டங்களையனுபவித்த தமிழ் மக்கள் கடந்த காலத்தில் நல்லதோர் படிப்பினையைக் கற்றுக் கொண்டார்கள். தற்சமயம் தமிழ் மக்களிடையே தன்மானமும் தமிழ்ப் பற்றும் தலைதூக்கியிருப்பது பெரிதும் பாராட்டப்படுதற்குரியது. இலங்கைத் தமிழரிடையே இத்தகைய இழிநிலையேற்படுவதற்கு இன்னுமோர் முக்கிய காரணமும் உளது. அதுதான் ஒற்றுமையின்மை யென்பது அனைவர்க்கும் சொல்லாமலே விளங்கும்.

தமிழருள்ளும் தாழ்த்தப்பட்டவர் உயர்குலத்தவரென்ற வேறுபாடு. யாழ்ப்பாணத்தான் மட்டக்களப்பான் மலைநாட்டான் என்ற விகற்பம். இஸ்லாமியர் கத்தோலிக்கர் இந்துக்கள் என்ற வித்தியாசம். இப்படியாக எங்கே பார்த்தாலும் வேற்றுமை. தமிழ் வளர்க்கும் சங்கங்கள், வித்தியா நிலையங்கள், வாசிகசாலை நிலையம் என்பவற்

(10-ம் பக்கம் பார்க்க)

மொரிஸன்
பம்புகள்
5/6



[illegible]
1½, 2, 2½ அங்குல அளவுகளில் கிடைக்கும்.
ஏக விநியோகஸ்தர்கள்:
கே. என். அப்துல் காதர் ராவுத்தர்
அன் கம்பெனி லிமிட்டெட்.
312, [illegible] ரோடு தெற்கு, கொழும்பு-10.
டெலிபோன்: 2956. தந்தி: MEDAL
[illegible]
ராஜா ஸ்டோர்ஸ், 9/B, [illegible] ரோடு,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்

SUTANTIRAN

1960 ஜூன் மாதம் 5-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு - 12.
தொலை பேசி எண் : 3411. த. பெ. 1183


## யார் அந்த அபேட்சகர்கள்?

சிங்களப் பகுதிகளில் ஐக்கிய தேசீயக் கட்சி நடத்தி வரும் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கட்சியின் தலைவர் திரு. டட்லி சேனநாயகா ஒருஅந்தரங்கமான செய்தியைச் சிங்களப் பொது மக்களுக்கு மிகுந்த அக்கறையோடு எடுத்துச் சொல்லி வருகிறார்.

அவர் கூறும் அந்தச் செய்தி பின்வருமாறு:—

"சமஷ்டிக் கட்சியினரின் நியாயமற்ற நான்கு கோரிக்கைகளையும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ்ப் பொது மக்கள் ஆதரிக்கவில்லை. யு. என். பி. அரசாங்கம் அமைப்பதற்கு சமஷ்டித் தலைவர்கள் ஆதரவு கொடுத்திருக்க வேண்டும் என்பதே அவர்களுடைய கருத்தாகும். இதனால் வடக்கு கிழக்கு மாகாணங்களில் சமஷ்டிக் கட்சி பெரிய ஒரு சூறுவளியில் சிக்கித் தத்தளிக்கிறது.

"ஜூலை 20-ந் தேதி தமிழ்ப் பொது மக்களின் கோபாவேசத்துக்கு இலக்காகாமல் சமஷ்டிக் கட்சியின் விடு தப்ப முடியுமா என்பது சந்தேகம்.

"எப்படியோ வடக்கு கிழக்கு மாகாணங்களில் சமஷ்டிக் கட்சியை எதிர்க்க யு. என். பி. கட்சி ஏற்பாடு செய்ததையிட்டு அப்பகுதி மக்கள் பெரு மகிழ்ச்சி யடைந்துள்ளனர். சமஷ்டிக் கட்சியை நிராகரித்து யு. என். பி. நிறுத்தியுள்ள அபேட்சகர்களை ஆதரிக்கச் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டுத்தான் அவர்கள் களிப்படைந்துள்ளனர். வடக்கு கிழக்கு மாகாண மக்களுக்குத் தேவைப்பட்டது எல்லாம் சமஷ்டிக் கட்சியை எதிர்த்துத் தங்கள் வாக்குகளைக் கொடுப்பதற்கான ஒரு மாற்றுக் கட்சி தான். சமஷ்டிக் கட்சிக்கு எதிரான மாற்றுக் கட்சியை யு. என். பி. கொடுத்திருக்கிறது. யு. என். பி. நிறுத்தியுள்ள அபேட்சகர்கள் வென்று வருவது நிச்சயம். அப்படி அவர்கள் வென்று வந்தால் நிபந்தனை எதுவும் இன்றி யு. என். பியை ஆதரிப்பார்கள். யு. என். பி. ஒரு அரசாங்கத்தை அமைத்து சிங்கள ஜாதியையும் சிங்கள நாட்டையும் அழிவிலிருந்து பாதுகாக்கும்"

மேற்கண்டவாறு திரு. டட்லி சேனநாயகா பல இடங்களில் பேசி வருவது மட்டுமல்லாமல் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆங்கிலப் பத்திரிகையான U. N. P. யின மே 27-ந் தேதி இதழில் 4-ம் பக்கத்தில் ஆசிரியத் தலையங்கத்துக்கு அருகாமையில் "சமஷ்டிக் கட்சிக்கு பெரும் எதிர்ப்பு" என்ற சிறு தலைப்பின் கீழ் இதே சாரப்பட ஒரு பந்தி எழுதப்பட்டு மிருக்கிறது.

திரு. டட்லியின் பேச்சு—U. N. P. பத்திரிகையின் எழுத்து—இவை இரண்டையும் அவதானிக்கும் எந்த ஒரு தமிழ் பேசும் பெருமகனும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஐக்கிய தேசியக் கட்சி நிறுத்தியுள்ள அந்த 'ஆவி அபேட்சகர்கள்' (dummy candidates) யார்? வென்று வந்தால் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளைப் பலியிட்டு ஐக்கிய தேசியக் கட்சியை நிபந்தனையின்றி ஆதரிக்கப்போகும் அந்த இனத் துரோகிகள் யார்?—என்று ஆராய்ந்து பார்க்கவே தலைப்படுவான்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் 22 தேர்தல் தொகுதிகள் உள்ளன. இவற்றில் இரண்டு தொகுதிகள் இரட்டை அங்கத்தவர் தொகுதிகள். எனவே மொத்தம் உள்ள ஸ்தானங்கள் 24 ஆகும். திட்ட மிடப்பட்ட சிங்களக் குடியேற்றத்தால் முற்றும் சிங்களத் தொகுதியாகி விட்ட அம்பாரையை நீக்கினல் மீதமுள்ள 23 ஸ்தானங்களில், ஐக்கிய தேசியக் கட்சி மூதூர், மட்டக்களப்பு ஆகிய இரண்டு இரட்டைத் தொகுதிகளில் மட்டுந்தான் முறையே ஜனுப்களான முகம்மது அலி, மாக்கான் மாக்கார் ஆகிய இரண்டு முஸ்லிம் அபேட்சகர்களை வெளிப் படையாக நிறுத்தியுள்ளது.

இந்த இரண்டு அபேட்சகர்களை மட்டும் நிறுத்திவிட்டு "வடக்கு கிழக்கு மாகாணங்களில் சமஷ்டிக் கட்சியை எதிர்க்க யு. என். பி. ஏற்பாடு செய்ததையிட்டு அப்பகுதி மக்கள் பெருமகிழ்ச்சி யடைந்துள்ளனர்" என்று பெருமை அடித்துக் கொள்வது பொருந்துமா? ஒரு போதும் பொருந்தாது. எனவே இரண்டு பேர் வெளிப்படையாகப் போட்டியிட, மற்றும் பலர் மறைமுகமாகப் போட்டி யிடுகிறார்கள் என்பது பெறப்படுகிறது.

அப்படிப் போட்டி யிடுபவர்கள் யார்? உதிரிகளா அல்லது ஏதாவது கட்சியை சார்ந்தவர்களா?

"சமஷ்டிக்கட்சிக்கு எதிரான மாற்றுக்கட்சியை யு. என். பி. கொடுத்திருக்கிறது" என்று திரு. டட்லி கூறுகிறார். அப்படியானல் அந்த மாற்றுக் கட்சி வேறு எதுவுமல்ல, பத்து அபேட்சகர்களை நிறுத்தி யிருக்கும் தமிழ் காங்கிரஸ் கட்சி தான் என்பது துலாம்பரமாக நிலைநாட்டப் படுகிறதல்லவா?

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழ் காங்கிரஸ் கட்சி ஐக்கிய தேசியக் கட்சியின் முகமூடியாக—காட்டிக்கொடுக்கும் கைக்கூலியாகத்தான்—போட்டியிடுகிறது என்றும், ஐக்கிய தேசியக் கட்சி கொடுத்த கொள்ளைப் பணத்தைக் கொண்டே தமிழ் காங்கிரஸ் அபேட்சகர்கள் பலர் தேர்தலை நடத்தப்போகிறார்கள் என்றும், நாம் முன்பே சூசகமாகக் குறிப்பிட்டு வந்திருக்கிறோம். இப்போது 'நுணலும் தன் வாயால் கெடும்' என்றபடி நுணலின் வாயாலேயே உண்மை வெளிப்பட்டுவிட்டது!

அந்தரங்கத்தை அம்பலமாக்கிவிட்டார் திரு டட்லி. மூடுதிரையை ஒடுதிரையாக்கிவிட்டது U. N. P. பத்திரிகை. இன்னுமா தமிழ் பேசும் மக்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் ஏஜண்டான தமிழ் காங்கிரஸை நம்பப்போகிறார்கள்?

# தேர்தலுக்கு தேர்தல்

## பொன்னம்பலனாரின் புதுவேஷம்

## ஆடி இருபதில் எல்லாம் 'அவுட்' ஆகும்

சாவகச்சேரியில் நடைபெற்றதேர்தல் கூட்டமொன்றில் திரு. பொன்னம்பலம் பேசியதாக "டைம்ஸ் ஒவ் சிலோன்" மாசி 17ம்தேதிஒரு செய்தியை வெளியிட்டது.

"தமிழ் தலைவர்களை ஒற்றுமைப்படுத்த நடைபெற்ற கூட்டங்களில் திரு செல்வநாயகம் முதலில் தேர்தல் நடைபெறட்டும் பின்னர் ஒற்றுமைக்கு முயற்சிப்போம் என்று கூறினார். தமிழரசுக் கட்சியின் பிடிவாதப் போக்கால் தமிழ் பேசும் மக்கள் இப்பொழுது பலமிழந்து விட்டார்கள். அவர்கள் மொழி தாழ்ந்த நிலைக்கு மாறி விட்டது" என்பது செய்தி.

இப்படிப் பேசிய திரு பொன்னம்பலம் பங்குனித் தேர்தலில் தமிழரசுக் கட்சியின்கீழ் தமிழ் மக்கள் திரண்டு ஒன்றுபட்டிருப்பதைக் கண்டு ஒதுங்கியிருத்தல் நியாயமான தொன்றன்றோ?

இதே கூட்டத்தில் இன்னுமொரு கருத்தை வெளியிட்டார் பொன்னம்பலம். "1956 தேர்தலில் தமிழ்ப் பிரதேசங்களில் போட்டி தவிர்த்து அபேட்சகர்களை நிறுத்துவதற்கு நீதிபதி சி. நாகலிங்கம் போன்றோர் எடுத்த முயற்சி திரு செல்வநாயகத்தாலும் அவர் சகாக்களாலும் தோல்வியுற்றது" என்றார். "இந்த இக்கட்டான நிலையிலுங் கூடத் தமிழ்த் தலைவர்களிடம் ஒற்றுமை ஏற்படுமானல் அவர்கள் இழந்த உரிமைகளைப் பெறுவது மாத்திரமல்ல அடுத்து வர இருக்கும் ஆட்சியாளர்களை ஆட்டி வைப்பவர்களாகவும் அவர்கள் விளங்குவார்கள்" என்றார்.

**"புத்தொளி"**

மூன்று மாதங்களுக்கு முன் இப்படி பிரசாரஞ் செய்த பொன்னம்பலம் ஆடி மாதம நடைபெற இருக்கும் தேர்தலில், தமிழ்ப் பிரதேசங்களில், முன் சென்ற பிரதிநிதிகளையே மீண்டும் அனுப்ப வேண்டுமென்று டாக்டர்களும் சமூக சேவையாளர்களும் கல்லூரி தலைவர்களும் விடுத்த வேண்டுகோளை நிராகரித்த நிஷ்டூரத்தை என்னென்பது. உண்மையில் தமிழ் மங்களின் ஒற்றுமையை அவர் விரும்பியிருந்தால் இந்தத் தேர்தலில் தம் கட்சியினரைப் போட்டியிட நிறுத்தியிருக்க மாட்டாரல்லவா?

தமிழ்மக்களை ஏமாளிகள், வெறுங் கோமாளிகள் என்றல்லவா அவர் எண்ணுவதாகத் தெரிகிறது.

பங்குனி மாதத் தேர்தலுக்கு இரு தினங்களுக்கு முன் நல்லூரில் நடைபெற்ற இறுதிக் கூட்டத்தில் இவ்வாறு கூறினார் பொன்னம்பலம் என்று பங்குனி 18-ந் தேதி "டைம்ஸ் ஒவ் சிலோன்" ஒரு செய்தியை வெளியிட்டது.

"Mr Ponnampalam said the only way to solve the Lang-

(13ம் பக்கம் பார்க்க)

நம்பினால் நடக்கப்போவது இதுதான்: சிங்கள ஜாதியையும், சிங்கள இனத்தையும் அழிவிலிருந்து பாதுகாப்பதற்காகத் தமிழ் இனத்தையும், தமிழ் மொழியையும் பலியிட்டு, நிபந்தனை எதுவுமின்றி டட்லிக்கு ஆதரவளிப்பார் தனிப்பெருந் தலைவர் திரு ஜீ. ஜீ. பொன்னம்பலம். அதனால் அவர் அடையப்போவது ஒரு அற்ப மந்திரிப் பதவி. தமிழ் பேசும் இனம் அடையப்போவது மீள முடியாத அடிமைத் தனம்!

இந்த முடிவை அடைவதற்குத் தமிழினம் தயாரா? ஜூலை 20 தீர்மானிக்கட்டும்.

## ஜீ. ஜீ. யை....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"அவர் தேர்தலில் வென்று வந்தால் அவரை ஒரு மந்திரியாக்கி அவரைக் கொண்டே தமிழ் மக்களின் நியாயமற்ற சமஷ்டிக் கோரிக்கையையும், சமஷ்டிக் கட்சியையும் நசுக்கி விடுவோம். பொன்னம்பலம் ஒருவர் தான் எங்களோடும் உங்களோடும் ஒத்துழைக்கக் கூடிய ஒரே ஒரு தலைவர் ஆவர். எனவே யாழ்ப்பாணத்தில் அவரையும், கொழும்பு தெற்கில் என்னையும் தமிழ் மக்களாகிய நீங்கள் தேர்ந்தனுப்ப வேண்டும்."

### இளைஞர்கள் பரபரப்பு

இவ்வாறு திரு. ஜயவர்தன பேசியதும் கூட்டத்தின் பின்வரிசையிலிருந்த இளைஞர் பலர் பரபரப்படைந்தனர். சிலர் கேள்விகளைக் கேட்க விரும்பினர். அதற்கிடையில் திரு. ஈ. இராசையா என்பவர், "கேள்விகளுக்கு இடமில்லை" என்று கூறிக் கொண்டே திரு. ஜே. ஆருக்கு நன்றி தெரிவித்துப் பல்லாண்டு பாடினர். கூட்டம் முடிந்தது.

### இவர் தான் அவர்

திரு. ஜே. ஆரைப் பிரேரித்துத் தேர்தல் நியமனப் பத்திரம் ஒப்பமிட்ட அட்வகேட் பி. நவரத்தின ராஜா என்பவர் "டைம்ஸ் ஒவ் சிலோன்" பத்திரிகையின் டைரக்டர்களில் ஒருவர் என்பதும்,பண்டாரநாயகா-செல்வநாயகம் ஒப்பந்தம் ஏற்படுவதற்கு திரு. ஸ்டான்லி டி சொய்ஸாவின் தூண்டுதலுக்கிணங்க திரு. பண்டாரநாயகாவின் வேண்டுதலையேற்று திரு செல்வநாயகம் வீட்டுக்குத் தூது நடந்த அதே நவரத்தின ராஜா தான் என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

[திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் தமிழ் காங்கிரஸுக்கும் யு. என். பி. கட்சிக்கும் உள்ள அந்தரங்கத் தொடர்பை அறிவதற்கு ஆசிரியத் தலையங்கத்தையும் படிக்கவும்.]

## வானொலியில்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சலார் குறைக்கப்படுகிறது. இப்படிஎல்லாம் காபந்துஅரசாங்கம் நன்மை செய்துவருகிறது' என்று தினந்தினம் வானொலியில் சொல்லி வருவதன் மூலம் அவர்கள் செய்வது என்ன? செய்வது யு. என். பி. பிரசாரந்தான்! தாங்கள் மட்டும் வானொலியை கபடத்தனமாகப் பாவித்துக் கொண்டு ஏனையோருக்கு மறுக்கிறார்கள்.

"உண்மை ஜனநாயகம் செயல்பட வேண்டுமானல் மக்கள் இரண்டு பக்கத்து நியாயத்தையும் அறிந்து வாக்குப் போட வேண்டும். மறுபக்கத்து நியாயத்தை எடுத்துக் காட்ட யு. என். பியின் அடிவருடிகளான லேக் ஹவுஸ், டைம்ஸ் ஒப் சிலோன் பத்திரிகைகள் மறுக்கின்றன. அதே சமயம் வானொலியும் மறுக்கப்பட்டு விட்டது. இந்த இலட்சணத்தில் யு. என். பி. ஜனநாயகத்தைக் காப்பதற்காகப் போராடுவதாகச் சொல்வது வேடிக்கையாக இருக்கிறது".

மேற்கண்டவாறு டாக்டர் நாகநாதன் கூறி முடித்தார்.

## யு. என். பிக்கு மூன்று....

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

லாவதில் வாக்குகள் கூடுமானல் அதால் யு. என். பி. லாபமடையும். இரண்டாவதில் கூடுமானல் யு. என். பி. நஷ்டமடையும்.

### ஒரு உதாரணம்

உதாரணமாக, வெற்றி பெறும் யு. என். பி. அபேட்சகர்களதும் இரண்டாவதாக வருபவர்களதும் வாக்குகள் 71 சத விகிதமாக இருக்க, அந்தக் கட்சி தனது மொத்த வாக்குகளை 5 சத விகிதம் அதிகரிக்குமானல் அட்டவணைகள் 'அ'விலும் 'ஆ'விலும் உள்ள கலம் 2-6ல் காட்டப்பட்டபடி அதிக ஸ்தானங்களைப் பெறும். அதாவது ஒரு 35 சத விகிதத்துக்கு அதிகமான வாக்குகள் ஒரு ஸ்தானத்தைக் கொடுக்கும். கடந்த தேர்தலில் 31 சத விகித வாக்குகள் பெற்ற யு. என். பி. அபேட்சகர் ஜூலை தேர்தலில் 36 சத விகித வாக்குகளும் 47 சத விகிதம் பெற்றவர் 52 சத விகிதமும் பெறுவர். இப்படியே கூடிக் கொண்டு போகும். அட்டவணை 'இ' இதை நன்குவிளக்குகிறது.

### ஒரு யூகம்

அரசியல் ஆர்வம் உள்ள வாக்காளனுக்கு யார் எப்படித் தேர்தலில் வருவார்கள் என்று யூகித்திருப்பது நல்லதோர் பொழுது போக்கு. என்னுடைய யூகம் இது தான். யு. என். பிக்கு 5 சத விகித வாக்குகள் அதிகமாகக் கிடைக்கும் என்று வைத்துக் கொண்டாலும் ஒற்றை அங்கத்தவர் தொகுதிகளில் 29-க்கு அதிகமாக அதனல் ஒரு ஸ்தானத்தைக் கூடப் பெற முடியாது. நிலமை வேறு விதமாகி, யு. என். பியினர் ஆகப் 13 ஒற்றை அங்கத்தவர் தொகுதிகளில் வெற்றியீட்டுவதோடு நின்று விட நேர்ந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அடுத்த தேர்தலுக்குப் போவது தனக்கு வெற்றி தரும் சூதாட்டம் என்று யு. என். பி. நினைத்தது நிச்சயம் தற்கொலை முயற்சியாகவே முடியப்போகிறது. ஜூலை தேர்தலில் முதலாவது இரண்டாவதாக வரும் அபேட்சகர்கள் 93 சத விகித வாக்குகளைப் பெறுவதானல் யு. என். பி. தன் முந்திய 50 ஸ்தானங்களைப் காப்பாற்றவே, எண்ணி 3 லட்சம் வாக்குகள் இப்போதுள்ளதைக் காட்டிலும் அதிகப்படியாகப் பெற வேண்டும். முடியுமா?

செ. அழகரத்தினம்

உரும்பிராய்

12-5-60

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிதம்

# யு. என். பிக்கு மூன்று லட்சம் வாக்குகள் அதிகப்படியாக வேண்டும்

## முந்திய 50 ஸ்தானங்களைப் பாதுகாக்கவே இந்த நிலைமையானால் வெற்றி இனி வெறும் கனவு

## கடந்த தேர்தல் முடிவுகளின் புள்ளிவிவரம் காட்டும் மறுக்கமுடியாத உண்மை இது

ஜூலை பொதுத் தேர்தலில் யு. என். பி அதிக ஸ்தானங்களைக் கைப்பற்றி அரசாங்கத்தை அமைக்குமா? முடியாது. முந்திய மார்ச் தேர்தலில் பெற்ற 50 ஸ்தானங்களைக் காப்பாற்றிக் கொள்ளவே அது எதிர்வரும் தேர்தலில் 3 லட்சம் வாக்குகள் முன்னரைக் காட்டிலும் அதிகப்படியாகப் பெற வேண்டும். அதுவும் முடியாது என்று அறுதியிட்டுக் கூறுகிறது கடந்த தேர்தல் புள்ளி விவரம். உரும்பிராய் திரு செ. அழகரத்தினம் சுதந்திரனுக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் புள்ளி விவரம் சகிதம் விஷயத்தை அலசிக் காட்டுகிறார். இனிப் படியுங்கள்.

—ஆசிரியர்.

கடந்த மார்ச் 1960 பொதுத் தேர்தல் முடிவுகளைச் சரிவர ஆராய்ந்து பார்த்தால் ஒரு விஷயம் நன்கு தெரியவரும். அதாவது யு. என். பிக்கு எதிரான வாக்குகள் பலருக்கிடையே பிரிக்கப்பட்டுவிட்டதனால் யு. என். பி. சாதாரணமாகத் தனக்குக் கிடைக்கக் கூடியவற்றைக் காட்டிலும் அதிகமான ஸ்தானங்களைப் பெறலாயிற்று. அம்பாறை நீங்கலாக வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் யு. என். பிக்கு கிடைத்த மொத்த வாக்குகள் 911,000. அதாவது 33 சதவிகிதம். இதற்கு யு. என். பிக்கு கிடைத்த ஸ்தானங்கள் அதிகம் என்றே சொல்ல வேண்டும்.

யு. என். பிக்கு 3 தொகுதிகளில் சரியான வெற்றி கிடைத்தது. 10 தொகுதிகளில் யு. என். பி. அபேட்சகர்கள் மூன்றாவது, நான்காவது இடங்களைப் பிடித்தார்கள். மற்ற எல்லாத் தொகுதிகளிலும் இரண்டாவதாக வந்தார்கள். இதனால் யு. என். பி ஆதரவாளர்கள் நாட்டில் பரந்து இக்கிறார்கள் என்பது தெரிகிறது. இதுதான் யு. என். பியின் பலம். பலவீனமும் இதே தான்.

பலவீனம் என்று சொல்வதற்குக்காரணம், ஒவ்வொரு தொகுதியிலும் யு. என். பிக்கு எதிரான வாக்குகள் பிறிது ஒரு அபேட்சகருக்கு அப்படியே போயிருக்குமானால் யு. என். பி 3 இடங்களில்தான் வெற்றி பெற்றிருக்கும்; 46 இடங்களில் அல்ல. (ஒன்றுக்கு மேற்பட்ட அங்கத்தவர்கள் தொகுதிகள் அங்கத்துவவாரியாக இங்கு கணக்கில் எடுக்கப்படவில்லை).

பலம் என்று சொல்வதற்கு காரணம், யு. என். பி. தனக்குக் கிடைக்கக் கூடிய வாக்குகளின் விகிதாசாரத்தை அதிகரிக்குமானால் அது ஒன்றுதான் 100க்கு மேற்பட்ட ஸ்தானங்களைக் கைப்பற்றக் கூடிய கட்சியாக இருக்கும்.

சிறீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு ஒரு சில பகுதிகள் நீங்கலாக மேற்கு, தெற்கு மாகாணங்களில் ஆதரவு இல்லை. இடதுசாரிகளுக்கு மத்திய, வட மத்திய, ஊவா மேல் மாகாணங்களில் ஆதரவு இல்லை.

யு. என். பி. வெற்றிபெற்ற 46 தொகுதிகளில் சிறீ லங்கா சுதந்திரக் கட்சி 23 தொகுதிகளில் இரண்டாவது இடத்துக்கு வந்திருக்கிறது. எஞ்சியுள்ள 23 தொகுதிகளில் இடதுசாரிகள் இரண்டாவது இடத்துக்கு வந்திருக்கிறார்கள்.

யு. என். பி. அல்லாதவர்கள் வென்ற தொகுதிகளில் எல்லாம் அநேகமாக யு. என். பி. இரண்டாவது இடத்துக்கு வந்திருக்கிறது. இதிலிருந்து என்ன தெரிகிறது? தேர்தலில் ஒவ்வொரு தொகுதியிலும் நேரடிப் போட்டி இருக்குமானால் ஒரு பக்கத்தில் யு. என். பி.யும் மறுபக்கத்தின் ஒரு பகுதியில் இடதுசாரிகளும் மிகுதிப் பகுதியில் சிறீலங்கா சுதந்திரக் கட்சியினரும் இருப்பார்கள். ஜூலைப் பொதுத் தேர்தலில் நேரடிப் போட்டி இருக்குமா? அல்லது மார்ச் பொதுத் தேர்தலைப்போல இதிலும் மூன்றாவது, நான்காவது என்று இப்படியே உள்ள வெற்றியீட்டாத அபேட்சகர்களுக்குப் போட்டு வாக்குகள் வீணாக்கப்படுமா?

மார்ச் தேர்தலில் 71 சதவிகித வாக்குகளே வெற்றி பெற்ற அபேட்சகர்களுக்கும் இரண்டாவதாக வந்தவர்களுக்கும் அளிக்கப்பட்டிருக்கின்றன. 29 சதவிகிதம் மற்றவர்களுக்கு வீணாக்கப்பட்டிருக்கிறது.

மார்ச் தேர்தல் நடந்து 4 மாதங்களில் மறுதேர்தல் வருவதால் வெற்றிபெற்ற அபேட்சகர்களின் வாக்குகளில் மிக மிகக் குறைவான தொகையையே பிடுங்கிக் கொள்ள முடியும். இரண்டாவதாக வந்தவர்கள் விஷயத்திலும் அப்படித்தான். வெற்றி பெற்றவர்களாலும் இரண்டாவதாக வந்தவர்களாலும் எடுக்கப்பட்ட 71 சதவிகித வாக்குகளில் 68 சதவிகிதத்தை அவர்களுடைய கட்சிகளோ அல்லது அவர்களைச் சேர்ந்தவர்களோதான் இனியும் பெறுவார்கள் என்று நம்பிக்கையாகச் சொல்லலாம்.

68 சதவிகித வாக்குகள் போனால் மீதமுள்ளது 32 சதவிகிதம். இது முந்திய தேர்தலில் 29 சதவிகித வாக்குகள் வீணாகப் போனது போல 3ம், 4ம், 5ம் ஆட்களுக்கு போகுமா?

ஆம், 15 சதவிகிதமானோர் அப்படித்தான் செய்வார்கள். காரணம் அவர்கள் பழுத்த யு. என். பி.க்காரராகவோ, சுதந்திரக் கட்சிக்காரராகவோ, கொம்யூனிஸ்டுக் கட்சிக்காரராகவோ, வேறு கட்சிக்காரராகவோ இருப்பார்கள். 15 சதவிகிதமானோர் தமது தொகுதியில் தமது கட்சிக்கு இடமில்லை என்பதை அறிந்ததும் சும்மா வாக்களியாமலே இருந்துவிடுவார்கள். (32 சதவிகிதத்தில் இது இரண்டுமாகச் சேர்ந்து 30 சதவிகிதம் ஆகிறது. இந்த 30 சதவிகிதம் மொத்தமுள்ள வாக்குகளில் 9.6 சதவிகிதமாகும்.

32 சதவிகிதத்தில் எஞ்சியுள்ள 70 சதவிகிதம் முந்தியதேர்தலில் வெற்றிபெற்றவருக்கோ அல்லது இரண்டாவதாக வந்தவருக்கோ போகும். இதிலிருந்து ஒரு விஷயம் புலனாகிறது. அதாவது ஜூலை தேர்தலில் வெற்றிபெறுபவர்களும் இரண்டாவதாக வருபவர்களும் முந்திய தேர்தலில் போல் 71 சதவிகிதம்அல்ல-கூடுதலாக வாக்குகள் பெறுவார்கள். 90 சதவிகிதம்வரை அவர்கள் கிடைக்கப்பெறலாம். சிறீலங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, கொம்யூனிஸ்டு கட்சி ஆகியவற்றிற்கிடையே தேர்தல் ஒப்பந்தம் இருக்கும்பட்சத்தில் முன்னர் சொன்னது கண்டிப்பாக நடந்தே தீரலாம்.

எம். ஈ. பி.யைப்பற்றி என்ன? இந்தக் கட்சிக்காரர் 10 பேர் வென்றார்கள்; 14 பேர் இரண்டாவதாக வந்தார்கள்; 6 பேர் 20 சதவிகிதவாக்குகளும் 11 பேர் 10 தொடக்கம் 20 சதவிகிதம் வரையுள்ள வாக்குகளும் பெற்று மூன்றாவதாக வந்தார்கள். கடந்த தேர்தலில் இந்தக் கட்சிக்காரர் எல்லோருமாகச் சேர்ந்து 10சதவிகித வாக்குகள் பெற்றார்கள். ஜூலை தேர்தலில் இந்த அளவுதானும் அல்லதுஇதற்குக் கிட்டத்தானும் வருவார்கள் என்று சொல்லக் கூடிய நிலைமை இல்லை.

சிலவேளைகளில் கடந்த தேர்தலில் இரண்டாவதாக வந்த எம். ஈ. பி. அபேட்சகர்கள் முன்னர் சுதந்திரக் கட்சி அபேட்சகர்களைப் போடாத தொகுதிகளில் அல்லது சுதந்திரக் கட்சி அபேட்சகர்கள் நல்லபடியாக வாக்குகளைப் பெறாத தொகுதிகளில் சுதந்திரக் கட்சியோடு இணைந்து நிற்கலாம். அப்படி இல்லாவிட்டாலும் நல்ல ஆதரவுஉள்ள எம். ஈ. பி. அபேட்சகர்கள் சுமார் 20 பேர் வரையில் தான் இருப்பார்கள். இந்த இருபது பேர் போட்டியிடும் 20 தொகுதிகளிலும் எம். ஈ. பி.க்கு சுதந்திரக் கட்சியினரதும் அதைச் சேர்ந்தவர்களதும் எதிர்ப்பு இருப்பதானால் வெறும் பெயரளவில்தான் அது இருக்க முடியும். ஆகவே போட்டி யு. என். பி.க்கும் எம். ஈ. பி.க்குமிடையேதான் நடக்கும்.

### அட்டவணை விளக்கம்

கீழே தரப்படும் அட்டவணைகள் 'அ'வும் 'ஆ'வும் கடந்த மார்ச் தேர்தல் நிலைமையை தெளிவாக அறிந்து கொள்ள உதவுவனவாயிருக்கும்.

கடந்த தேர்தலில்வெற்றி பெற்றவர்களும இரண்டாவதாக வந்தவர்களும் பெற்ற 71 சதவிகித வாக்குகள், கட்சி ஒன்று 35 சதவிகிதத்துக்குமேல் எவ்வளவு வாக்குகள் பெற்றதோ அவ்வளவுக்கு அவற்றிற்கு அதிகப்படி ஸ்தானங்களைக் கொடுத்தன. 35 சதவிகிதத்துக்குமேல் வாக்குகள் பெற்ற எல்லாத் தொகுதிகளிலும் நிலைமை அப்படியில்லை. ஒரு தொகுதியில் 42 சதவிகிதம் வாக்குகள் பெற்ற அபேட்சகர் ஒருவர் தோற்றார் என்றால் இன்னொரு தொகுதியில் 28 சதவிகிதம் வாக்குகள் பெறும் அக்கட்சியைச் சேர்ந்த மற்றொருவர் வெல்கிறார் என்பது நிச்சயம்.

### கிடைத்த ஸ்தானங்களும் கிடைக்க வேண்டியவையும்

ஆகவே அட்டவணை 'அ'வில் உள்ள கலம் 2-5படி யு. என். பி. 33 ஸ்தானங்களையும் அட்டவணை 'ஆ'வில் உள்ள கலம் 2-5படி 14 ஸ்தானங்களையும், ஆக மொத்தம் 47 ஸ்தானங்களைப் பெறுகிறது. (உண்மையில் அவர்கள் பெற்றது ஒன்று குறைய, அதகவது 46. இது எப்படி என்பதை விளக்கப் புகின் கடிதம் நீண்டுவிடும்) மற்ற நான்கு கட்சிகளும் 66 ஸ்தானங்களைப் பெறுகின்றன. (உண்மையில் அவற்றுக்குக் கிடைத்தவை 67 ஸ்தானங்கள்)

### இரண்டு விஷயங்கள்

ஜூலை பொதுத் தேர்தல் முடிவுகள் இரண்டு விஷயங்களைப் பொறுத்திருக்கின்றன.

ஒன்று-யு. என். பி. தனது 33 சதவிகித வாக்குகளைக் காட்டிலும் அதிகமாகப் பெறுமா? (இதில் அம்பாறை நீங்கலாக வடக்கு கிழக்கு மாகாணங்கள் சேர்க்கப்படவில்லை.)

இரண்டு-வெற்றியீட்டியவர்களாலும் இரண்டாவதாக வந்தவர்களாலும் பெறக்கூடியதாக இருந்த 71 சதவிகித வாக்குகள் திரும்பவும் அப்படியேஇருக்குமா? அல்லது கூடுமா? முத

(8-ம் பக்கம் பார்க்க)

| கட்சி | வாக்குப் பதிவு 50%மேல் | வாக்குப் பதிவு 45%50% | வாக்குப் பதிவு 40%45% | வாக்குப் பதிவு 35%40% | வாக்குப் பதிவு 30%35% | வாக்குப் பதிவு 30%கீழ் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| **அட்டவணை 'அ' வெற்றி பெற்றோர்** | | | | | | | |
| யு. என். பி. | 3 | 10 | 9 | 11 | 9 | 4 | 46 |
| சுதந்திரக்கட்சி | 16 | 7 | 5 | 7 | 7 | 4 | 46 |
| சமசமாஜி | 1 | 2 | 1 | 2 | 1 | 2 | 9 |
| கொம்யுனிஸ்டு | 1 | — | 1 | — | — | — | 2 |
| எம். ஈ. பி | 3 | — | 3 | 2 | — | 2 | 10 |
| **அட்டவணை 'ஆ' இரண்டாவதாக வந்தவர்கள்** | | | | | | | |
| யு. என். பி. | — | — | 7 | 7 | 15 | 36 | 65 |
| சுதந்திரக்கட்சி | — | — | 1 | 6 | 3 | 14 | 24 |
| சமசமாஜி | — | — | — | 3 | — | 4 | 7 |
| கொம்யுனிஸ்டு | — | — | — | — | — | 4 | 4 |
| எம். ஈ. பி. | — | — | 1 | 3 | 2 | 3 | 14 |

### அட்டவணை 'இ'

| இலக்கம் | யு. என். பியின் வாக்குகளின் விகிதம் | மொத்த வாக்குகள் | வெல்பவர்களும் இரண்டாவதாக வருபவர்களும் பெறும் வாக்குகள் விகிதம் | யு. என். பி. வெற்றி பெறக்கூடிய ஸ்தானங்கள் | | |
|---|---|---|---|---|---|---|
| 1. | 33% | 900,000 | 71% | அட்டவணை 'அ' 'ஆ' வில் உள்ள கலம் 2-5 படி | | 47 |
| 2. | 33% | 900,000 | 81% | மேற்படி | 2-4 | 29 |
| 3. | 33% | 900,000 | 91% | ,, | 2-3 | 13 |
| 4. | 38% | 1035,000 | 71% | ,, | 2-6 | 71 |
| 5. | 38% | 1035,000 | 81% | ,, | 2-5 | 47 |
| 6. | 38% | 1035,000 | 91% | ,, | 2-4 | 29 |
| 7. | 43% | 1170,000 | 71% | | | 103 |
| 8. | 43% | [illegible] | 81% | ,, | 2-6 | 71 |
| 9. | 43% | 1170,000 | 91% | ,, | 2-5 | 47 |

கே. பாலச்சந்திரன் அளிக்கும்
நாடக விழாவில்
"அழாதே கண்ணே"
என்ற நாடகம்
8-ம் தேதி நடைபெறும்.
ரொசாரியோ பீரிஸ்-ஆனந்தி சுப்பிரமணியம்-திரு.சோதிநாதன்-வி. சோமசுந்தரம் ஆகியோர் நடிக்கின்றனர்.
இடம்:
லயனல் வென்ட் தியேட்டர்
டிக்கட் விபரம் ரூபா.
5, 3, 2.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதல்

சிறுகதை — எழுதியவர்: மு. தளையசிங்கம்

நல்லசிவம் நடந்து கொண்டே இருந்தான். நடக்கும்போது தான் சும்மா நடக்க முடிகிறதா? அந்த நெஞ்சம் இருக்கிறதே அது ஒரு கீறல் விழுந்த கிராமபோன் றெக்கோர்ட் டேதான். சதா அதையே திருப்பித் திருப்பிக் கிண்டிக் கீறிக் கொண்டிருந்ததே!

எங்கு போகிறான் எப்படிப் போகிறான் என்று ஒன்றும் தெரியாமல்கால்போன போக்கில் அவன் நடந்து கொண்டிருந்தான். ஆனால் அவனுடைய மனமோ அந்த ஒரு திசையை மட்டுமே நோக்கி, அதை மட்டுமே சுற்றிச் சுற்றி, அளந்து அளந்து அனுபவித்துத் தவழ்ந்து கொண்டிருந்தது.

வாணி—அவள் அவனுடைய காதலி. அதாவது அவன் காதலிக்கும் பெண். அவனைக் காதலிக்கும்பெண்ணல்ல. அதை இனித்தான் அறியவேண்டும். அவனை அவள் காதலிக்கிறாள் என்று அவன் நினைத்துக் கொண்ட காலமும் ஒன்று இருக்கத்தான் செய்தது. அவனுடன் அவள் அப்போது குழைத்து குழைந்து கதைப்பாள். குறு குறுத்துச் சிரிப்பாள். ஆனால் அதெல்லாம் அப்போது. ஏனோ இடையில் திடீர் என்று அவை எல்லாம் நின்று விட்டன. இப்போ ஏனோ ஒரு புரியாத புது மௌனம். அதற்காக வேண்டித்தான் அவன் அந்தக் கடிதத்தை எழுதினான். அந்தக் கடிதத்தைப்பற்றித் தான் அவன் மனது சதா கிண்டிக் கிளறிச் சிந்தித்துக் கொண்டு இருந்தது.

அவளுக்கு அது கிடைத்திருக்கும்.

கையில் அதை எடுத்திருப்பாள்.

உடைத்திருப்பாள்.

புதிய எழுத்து!

ஒருவித ஆவல்—பட பட வென்று படித்திருப்பாள்.

அவனின் உள்ளக் குமுறலை அவள் புரிந்திருப்பாளா? அந்தக் குமுறலின் சின்னமாகக் குவிந்துவிட்ட அந்த எழுத்துக்களை அவளின் மனம் தெரிந்திருக்குமா? சோகமும் பாசமும் கலந்த அவளின் ஆசைக் குரலைப் புரிந்துகொண்டு அந்தஎழுத்துக்களுக்கு அவள் உள்ளத்தால் ஒலி கொடுத்திருக்க முடிந்திருக்குமா?

நல்லசிவத்தின் மனத்தில் திடீரென்றுஒரு ஏக்கமேகம், ஒரே இருள்.

ஒரு கணந்தான்.

அதற்குள் பட்டென்று மின்னியது ஒரு வெளிச்சம்.

'ஏன் இருக்க முடியாது?'

ஒரு நப்பாசை. வாழ்வுப் பாதையில் மனிதனைத் தொடர்ந்து ஓடவைக்கும் அந்த நம்பிக்கை.

அவளுக்கும் ஒரு இதயம் இருக்கிறதல்லவா? அவளும் அப்படித்தான் படித்திருப்பாள்.

"வாணி!"

கடிதத்தில் அவன் எழுதிய முதல் வார்த்தை. அதுபோதும் அவனின் ஆசையைக் காட்டுவதற்கு. அவனுக்கும் அவளுக்குமிடையே இப்போ நிலவும் அந்த இறுகிய மௌனத்துக்கு முன்—அந்தக் கம்பனியில்அவள் டைப்பிஸ்டாய் வேலை பார்க்க வந்த தொடக்கத்தில்—குழைந்து குழைந்து அவள் அவனுடன் கதைத்த காலத்தில் அப்படித்தான் அவன் அவளைக் கூப்பிடுவான். அந்தப் பெயர் அவளை மட்டுமல்ல அன்றைய நினைவுகளையும் சேர்த்து அழைக்கும் பெயர். அவளுக்கும் அந்த நினைவுகளை அது நினைவூட்டாதா?

"ஆமாம் அப்படித் தான் கூப்பிடவேண்டும்"

கடிதத்தின் அடுத்த அடிகள் தொடர்ந்து ஓடின அவன் மனதில்.

"'அன்பே' என்றோ 'கண்ணே' என்றோ அடைமொழி ஏதும் இல்லாமல் அப்படித்தான் அழைக்க வேண்டும். உன் மனம் எங்கு நிற்கின்றது, உன் எண்ணங்கள் எப்படி இருக்கின்றன என்று எனக்குத் தெரியாது. அவற்றைத் தெரிந்து கொள்ளத்தான் இதை எழுதுகிறேன்"

ஒரு நீண்ட மூச்சு.

பழைய நினைவுச் சிக்கலுக்குள்ளே ஒரு புதிய எண்ணக் கோடு.

அந்த இடத்தில் அவள் எப்படி இருந்திருப்பாள்? அவள் நெஞ்சு என்ன நினைத்திருக்கும்?

ஆனால் அவை வெறும் கேள்விகளாகவே நின்றன. அவற்றுக்குப் பதில் காண வேண்டும் என்ற எண்ணம் நல்லசிவத்திற்கு இருக்கவில்லை. தொடர்ந்து தன் கடிதத்தை அசைபோட்டுக் கொள்வதில் அவன் மனதிற்கு இருந்த ஆசைகலந்த புதிய வேகம் அவற்றை எல்லாம் பதில் கொடுக்காமலே அடித்துக் கொண்டு போய் விட்டது.

"எனக்கு முன்னே மேசையில் ஏதோ ஒரு கடிதம் எழுதாமல் கிடக்கிறது. அடுத்த பதினைந்து நிமிடங்களுக்குள் அதை முடித்துத் தரவேண்டும் என்பது மனேஜரின் கட்டளை. இந்த மனேஜருக்கு ஏனோ என் மேல் ஓர் இனந்தெரியாத ஆத்திரம்! ஆனால் மனேஜர் சொல்லி விட்டார் என்று மனம் கேட்கிறதா? சதா உன்னையே நினைத்துக் கொண்டிருக்கும் அதற்கு வேறு ஒன்றும் தெரிவதில்லை. திடீரென்று அதற்கு ஒரு யோசனை வருகிறது—கட்டாயம்உனக்கோர் கடிதம் எழுதவேண்டுமென்று கால் கடுக்கத் துள்ளுகிறது. என்ன சொன்னாலும் கேட்கமாட்டாத துள்ளல்! எழுதித்தான் ஆக வேண்டும். அதனால்தான் இதை உனக்கு எழுதுகிறேன்!

"இதெல்லாம் உனக்குப் புரியாது. அது உன் தவறுமல்ல. என் பைத்தியம் காரணமாய் எழுதுகிறேன். எப்படியாவது உன் எண்ணத்தை அறியவேண்டும் என்ற ஆவல். ஆபீஸ் உத்தியோகம்—ஏன், வாழ்வு கூட—அதில்தான் தங்கியிருப்பது போல் இருக்கிறது. எனவே தயவு செய்து பதில்தரவும் தபால்மூலம்."

எண்ண ஓட்டத்தில் ஒரு சிறு தடை.

அடுத்தது என்ன?

ஆமாம் அதுவேதான்!

எப்படி மறக்க முடியும்? அழியாத வகையில் இதயத்தில் எழுதி வைக்கப்பட்டிருக்கும் அந்த காட்சியை அல்லவா கடிதத்தில் அதையடுத்து அவன் படம்பிடித்துக் காட்டியிருக்கிறான்!

'உனக்கு நினைவிருக்கும் சென்ற மாதம் உன்னை நான் சந்தித்தது. கம்பனிக் கட்டடத்தின் வலது பக்கம்—அந்தப் படிக்கட்டுகளுக்குமேல்-சுவரோடு சாத்தி வைத்த சித்திரமாய் நீ பேசாமல் நின்றுகொண்டிருந்தாய். பற்களிடையே உதட்டின் பரதவிப்பு—கண்ணிமைகளில், கண்ணீரால் கனப்பது போல், தொடர்ச்சி கொண்ட ஒரு வெட்டல்—ஆசையோடோ ஆத்திரத்தோடோ நீகேட்டுக்கொண்டிருந்தாய். தட்டுத்தடுமாறிமென்று விழுங்கி நான் சொல்லிக் கொண்டிருந்தேன். சட்டென்று உனக்கு என்ன தோன்றியதோ தெரியாது. "மன்னிக்கவும், நல்லசிவம். பதில் தரும் நிலையில் நான் இப்போ இல்லை" என்று சொல்லிப் பறந்துவிட்டாய். நினைவிருக்கிறதுதானே? இப்போதும் அதே கேள்வியைத்தான் கேட்கிறேன். பதில் தருவாயா? விளையாட்டாகக் கொள்ளவேண்டாம். கண்ணியம் குறைவதாகவும் நினைக்க வேண்டாம். உன்னை நான் உயிருக்கு மேலாகக் காதலிக்கிறேன்—நீ விரும்புகிறாயா?—பதில் கட்டாயம்—காத்திருப்பேன்.

இப்படிக்கு<br>அன்புள்ள<br>நல்லசிவம்

"மிஸ்டர் நல்லசிவம்!"

நினைவு வெள்ளத்தில் ஆழ்ந்து சென்ற நல்லசிவத்தைத் தூக்கி எடுத்து வெளியே வீசியது அந்தக் குரல்.

திடுக்கிட்டு நின்றான் நல்லசிவம்.

இதயத்தின் ஆழத்தில் நினைவாய் ஓடிய அதே சொல்லுக்கு 'மிஸ்டர்' என்று கூடவே ஒரு அடைமொழி கொடுத்து அத்தனை பெரிதாக அழைப்பதற்கு அங்கே யார் இருக்கிறார்கள்?

ஆவலோடு திரும்பிப் பார்த்தான் நல்லசிவம்.

அவள் வந்து கொண்டிருந்தாள். அதோ அவள்!

வாணி!

நல்லசிவம் என்ன கனவா காண்கிறான்? அவன் கண்களைக் கசக்கி விட்டுக்கொண்டான்.

நிஜமான காட்சியேதான்.

'பற்களிடையே உதட்டின் பரதவிப்பு' கம்பனிக் கட்டடத்தின் சுவரோரம் கண்ட அதே காட்சி!

நல்லசிவத்தின் உள்ளத்தில் உவகை பொங்கிக் குமுறியது. கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தது என்பது இன்னும் பழைய மொழி ஆகவில்லைத்தான்.

ஆவலோடு பார்த்து நின்றான்.

அந்த அழகு நடை! சற்று விறு விறுப்புக் கவர்ந்திருந்தாலும் எத்தனை கொள்ளை அழகு! பசி பட்டினி எதுவும் இன்றிப் பார்த்துக் கொண்டே நிற்கலாம் போல் இருந்தது.

ஆனால் அந்தக் கண்கள்? முந்திய நளினம் குலைந்து அதில் ஏன் அந்தக் கடுகடுப்பு?

"மிஸ்டர் நல்லசிவம்!" கண்ணில் தெரிந்தது கடுகடுப்பேதான் என்பதை உத்தியோக பூர்வமாக ஊர்ஜிதம் செய்தது அழுத்தம் நிறைந்த அந்தக் குரல்.

"வாணி!... நான் எழுதிய கடிதம் உனக்கு கிடைத்ததா?"

(13-ம் பக்கம் பார்க்க)


# ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

ANANDA MEDICAL HALL TRADE MARK ஆனந்தா 174, SEA STREET, COLOMBO

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கைகணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சில காலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரிது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.

இத்துடன், "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.


# இஸ்லாமியரும் மொழியால் தமிழரே

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

றிலும் இதே பிற்போக்குக் கொள்கை. சங்கங்கள், மன்றங்கள் என்பவற்றிலும் ஒரு பதவிப் பித்தும் பொறாமையும் பூசலும்.

## சகோதரத்துவ உணர்ச்சி வேண்டும்

இலங்கையில் வாழும் இருபத்தைந்து இலட்சம் தமிழ் மக்களும் தன்மானத்தோடும் உரிமைகளோடும் சுதந்திரமாக வாழ வேண்டுமானால், தமிழ் மொழி கலை கலாச்சாரங்கள் வளர்ச்சியடைய வேண்டுமானால், தமிழர் தம் நாகரிகம் பழக்க வழக்கங்கள் அபிவிருத்தியடைய வேண்டுமானால் இலங்கையின் எந்தப் பகுதியில் வாழுந் தமிழராயிருந்தாலுஞ் சரி, எந்த மதத்தைச் சேர்ந்தவராயிருந்தாலுஞ் சரி, எந்த இனத்தவராயினுஞ் சரி, எல்லோரும் ஒரே தமிழ்த் தாயின் மக்கள், சகோதரர்கள் என்ற எண்ணம் தமிழ்ப் பெரியார்களிடத்தும் அறிஞர்கள் கலைஞர்களிடத்தும் அரசியல்வாதிகளிடத்தும் ஏற்படவேண்டும். தமிழர் தங்களுக்கிடையேயுள்ள வேற்றுமைகளை விட்டொழித்து ஒற்றுமை பூணவேண்டும்.

## பாகுபாடு காட்டக்கூடாது

தமிழ் வளர்க்கும் பத்திரிகைகளை, வித்தியா நிலையங்களை, நாடக நடன இசை மன்றங்களை, இலக்கிய எழுத்தாளர் சங்கங்களை, வானொலி நிலையத் தமிழ் பிரிவைத் தமிழரனைவர்க்கும் எவ்வித வேறுபாடுமின்றி நன்மை பயக்கும் முறையில் நல்லெண்ணத்தோடு நடாத்த ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும். கலைஞர்கள் எழுத்தாளர்கள் நடிகர்கள் அறிஞர்கள் ஆராய்ச்சியாளர்கள் நாட்டின் எந்தத் திசையில் வாழ்ந்தாலும் அவர்களை ஆதரித்துக் கலை விழாக்கள், கழகங்களில் பங்கு கொள்ளச் செய்து ஊக்கமும் உற்சாகமும் அளிக்க வேண்டும். பொறாமை பூசல்களையொழித்துப் பொது நல நோக்கத்தோடு ஈழ நாட்டு அரசியல் தலைவர்கள், தமிழ்ப் பெரியார்கள் அறிஞர்கள் கலைஞர்கள் தொண்டாற்றுவார்களேயானால் தமிழ்த் தாய் நம் நாட்டில் மீண்டும் தலை நிமிர்ந்து வாழ்வாள் என்பதில் என்ன சந்தேகம்?

## கேவலம்

தமிழர் என்ற பதம் தனிப்பட்ட ஒரு இனத்தாரை மட்டும் குறிப்பதன்று. தமிழ் மொழியைப்பேசுபவர் அனைவருந் தமிழரேயாவர். இலங்கையிலே இஸ்லாமியரும், திராவிடரும் தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட தமிழ்ச் சகோதரர்கள். பெற்ற அன்னையைக் கைவிட்டு மாற்றாந் தாயை ஆதரிக்கும் நன்றியில்லாப் பிள்ளையின் செயலைப் போல் பட்டம் பதவிகட்காக, அற்ப சலுகைகட்காக நாம் பிறந்து வளர்ந்து பேசிப் பழகி வரும் தாய் மொழியை மறந்து அயல் மொழியை ஆதரிப்பது நீதியா? தீர்மமா? மானமுள்ள மரியாதையுள்ள நம் நடையுடை பாவனைகள் பழக்க வழக்கங்கள் நாகரிகம் பண்பாடுகளை மறந்து மேனாட்டுப் போலி நாகரிக பழக்க வழக்கங்களைக் கடைப்பிடிக்கலாமா? தமிழன் என்று கூறிக் கொண்டு ஆங்கிலத்திலுரையாடுவது எவ்வளவு கேவலம்? இவ்வாறு தமிழ்ச் சகோதரர்களில் ஒரு சாரார் தமிழைக் காட்டிக் கொடுக்கும் கயவர்களாக வாழ்கின்றனர். என்னே கொடுமை?

## தமிழ்க் கல்வி ஊட்டுங்கள்

"தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார் இங்கமரர் சிறப்புக் கொண்டார்"... என்றதை மனத்திலிருத்தித் தமிழ்ப் பெற்றோர் தம்பிள்ளைகட்குத் தமிழ்க் கல்வியைத் தாராளமாய்க் கற்பியுங்கள்! அவர்களைச் சிறந்த தமிழ் மேதைகளாக்குங்கள்! வீட்டிலும் தெருவிலும் உற்றார் உறவினர் அயலார் யாருடனும் தமிழ் மொழியிலே உரையாடுங்கள்! மேனாட்டுப் போலி நாகரிகத்தை விட்டொழித்து நம் சொந்த நாகரிகத்தைப் பழக்க வழக்கங்களைக் கடைப் பிடியுங்கள். தமிழ் உணர்ச்சியோடு வீறு கொண்டெழுந்து தன் மானங் காக்க முயலுங்கள்!

அரசியலில் பங்கு பற்றித் தமிழர் உரிமைக்காகப் போராடுங்கள்! இப்படியான அபிமானத்தோடும் உணர்ச்சியோடும் ஊக்கத்தோடும் தமிழ்ப் பணி புரிந்து தாழ்வு பட்ட தமிழ் அன்னையை அரியாசனமேற்ற ஆவன செய்யுங்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கஷ்டமான தொழில்
## பத்து சீவன்களுக்கு சோறு போடுகிறது

## நமக்கெனச் சங்கம் இல்லை
## கொள்ளையடிக்கும் சங்கமானுல்தான் எல்லோரும் முன்வருகிருர்கள் நடத்த

## பிரம்புத் தொழிலாளி சின்னத்தம்பி பேட்டி

[பேட்டி கண்டவர்: "மாலதி"]



களகு (முறம்) இழைத்து முடிந்ததும் அதற்கு வாய்மட்டை கட்டுகிருர் சின்னத்தம்பி.

அலைபாயும் கடல். கால் புதையும் பருக்கை மணல். அங்கே புதிய புதிய ஓலை வீடுகள். இதுதான் கிழக்குப்புறம். மேற்கே குவிர்ந்த தென்னந்தருக்கள். கண்ணுக்குச் செழிப்பான காட்சி. இதுதான் புதுக்குடியிருப்பு.

பிள்ளையார் கோயிலிலே பொங்கல் நடக்கிறது. அங்கே இரண்டொரு அறிமுகமான முகங்கள் ஆவலோடு பார்த்தன. 'என்ன விசேஷம்' என்று ஏதேதோ கேட்டன.

"என்ன விசேஷமிருக்கிறது? இலெக்ஷன்தான் வரப்போகிறதாமே" என்றேன். "என்ன வந்தாலும் நமது தமிழ்க் கட்சியை அசைக்க முடியாது" என்றது ஒரு குரல்.

"நான் இலெக்ஷனுக்குவரவில்லை. உங்கள் ஊர் பிரம்பு வேலைக்குப் பேர்போனதாமே! உங்களில் ஒருவரைக் கண்டு பேசத்தான் வந்தேன்"

"பேர்போனதா? இங்குள்ள அத்தனை குடும்பத்துக்கும் அதுதானே தொழில்! ஆனால் நீங்கள் வந்த வேளைதான் சரியில்லை..."

"ஏன்?"

"இந்த நேரத்திலே எல்லாரும் வயல் வேலைக்குப் போயிருப்பார்கள்..."

"இல்லையில்லை. நமது சின்னத்தம்பி அண்ணன் இழைக்கிருர்." இது மற்றக் குரல்.


ஆம். அவரின் வீட்டை நோக்கித்தான் நாங்கள் நடந்து கொண்டிருக்கிறோம்.

'கிறவல்' பரவிய பாதை மேற்கே சென்று இடப்பக்கமாகத் திரும்புகிறது. அங்கிருந்து கிழக்கு நோக்கி ஒரு மணல் ஒழுங்கை.

இதோ! உயர்ந்து வானுற நிமிர்ந்த தென்னைகள் குடைபிடிக்க, அந்த நிழலிலே, நனைந்த கிழவிபோல குந்தியிருக்கிது ஒரு குடில்—ஓலைக் குடில்தான். விருந்தை—அங்கே பன்னுங்குகளுக்கிடையே அரையை மட்டும் சிக்கனமாகத் துணியால் மூடிய ஓர் உருவம். "சின்னத்தம்பி!" எங்களோடு வந்த பெரியவர் குரல் கொடுக்கிருர். அண்ணுந்து பார்க்கிறது அந்த மனித ஜீவன். கையிலே இழைத்து முடியாத கைப்பெட்டி.

"இவர்தானு சின்னத்தம்பி?" நான் கேட்டேன். அண்ணனுயிருந்தாலும் சரி, ஆணைக்கண்டவுடனே மார்புத் துகிலைச் சரி செய்து கொள்வாள் தமிழ்ப் பெண். அதுபோல எங்களைக் கண்டதும் அவசர அவசரமாக வேட்டியை எடுத்து இடுப்பிலே சுற்றிக்கொ[illegible]கிருர் சின்னத்தம்பி.

வெயிலிலே காய்ந்து கருமை ஏறியமேனி. முகத்திலே போதாமை இழைத்த மெல்லிய [illegible]காடுகள். வாயிலே சிவப்பூட்டும் தாம்பூலம். பறந்து கிடக்கும் தலைமயிர்களோடு பின்னுக்கு முடிந்த சிறிய கொண்டை! இதுதான் அவரின் தோற்றம். திரு சின்னத்தம்பிக்கு வயது சுமார் 38 இருக்கும். ஆனுலும் இரண்டொரு மயிர்கள் வெண்மையேறித்



வித விதமான பொருட்களை உருவாக்கும் கைகள் கைப்பெட்டி இழைப்பதில் ஈடுபட்டிருக்கின்றன.

தான்விட்டன. குடும்பம் பெரியது. இவருக்கு எட்டுப் பிள்ளைகள். அவரும் மனைவியும் சேர்ந்தால் குடும்பத்தில் பத்துப் பேர். நாளொன்றுக்கு சுமார் நான்கு ரூபாய் வரைதான் உழைக்க முடியும் என்று கூறும் இவரின் குடும்பத்தின் நிலையை இன்னும் எப்படித்தான் கூறுவது? பிரம்புத் தொழில் தமது பரம்பரைத் தொழில் எனக் கூறிக்கொள்ளும் இவர் வயல் வேலைகளிலும் ஈடுபடுவதாகக் கூறுகிருர். அதாவது—கமம் (சிறுபோகம்) செய்யும் காலத்தைத் தவிர மற்ற நாட்களில் பிரம்பு வேலைதான் சோறு தருகிறது.

கடகம்; கைப்பெட்டி; முறம்; பிரம்புக் கூடைகள் ஆகியவற்ருேடு புதிய ஒரு சில பொருட்களையும் இழைக்கிருர். பூத்தட்டுகள்; கையிலே தூக்கிச் செல்லக் கூடிய கூடைகள் முதலிய வற்றையும் செய்வதாகக் கூறினுர். ஆயினும் வருமானத்துக்குரிய கடகம், கைப்பெட்டி, முறம், மரக்கால் முதலியன முக்கியமானவை. பொதுவாகக் கூறப்போனுல் கமத்தொழிலுக்கு வேண்டிய உபகரணங்களையே இவர் உருவாக்குகிருர். [illegible] உறுகாமம் வரை சென்று,

இழைப்பதற்கு வேண்டிய பிரம்புகளை வெட்டி வருகிருர்கள். தேவைக்குத் தகுந்தபடி தனித்தும் கூட்டம் கூட்டமாகவும் சென்று, வாரக்கணக்கில் தங்கி, தேவையான பிரம்பை லொறிகளில் ஏற்றி வருவதுமுண்டு. பிரம்படிப்பது (பிரம்பு வெட்டுதல்) இலகுவான காரியமல்ல. தூண்டில் போன்ற பிரப்பம் முட்கள் ஈவிரக்கமில்லாமல் உடலையெல்லாம் பதம் பார்த்து விடும்.

இந்தப் பிரம்புகளை வீட்டுக்குக் கொணர்ந்ததும், செய்யும் பொருள்களுக்கு தேவையான நீளத்தில் துண்டு துண்டாக நறுக்கி, பிளந்து முற்றத்திலே போடுகிருர்கள். அவை உலர்ந்ததும் எடுத்து, தண்ணீரில் நனைத்து, அளவாகச் சீவி எடுக்கிருர்கள். சீவியானதும் அடிப்போட்டு இழைக்கத் தொடங்குகிருர்கள். இழைப்பிலும் பல முறைகளுண்டு. கடகங்களும் கைப்பெட்டிகளும் ஒருமுறையிலும் மரக்கால் வேருெரு முறையிலும் முறம் இன்னுமொரு முறையிலும் இழைக்கப்படுகிறது. செய்யப்படும் பொருள்களுக்கேற்ப பிரம்புகள் ஏற்கனவே பிளக்கப் பட்டுவிடுகின்றன.

இந்தப் பிரம்புப் பொருள்களிலும் பல தினிசுகள் உண்டு. திரு சின்னத்தம்பி வேண்டிய பிரம்புகளைத் தயார் செய்துகொண்டால் நாளொன்றுக்கு முறமென்ருல் பத்தும், கைப்பெட்டியானுல் மூன்றும் கடகமானுல் இரண்டும் மரக்காலானுல் ஒன்றும் இழைத்து முடிக்கக்கூடியவர். மேற்படி பொருட்கள், இழைப்பதுடன்பூர்த்தியாவதில்லை. மரக்கால் ஒன்றைத் தவிர ஏனையவைகளுக்கு வாய்மட்டைகள் வேறு கட்ட வேண்டும்; வாய்க்கட்டிலேதான் இந்தப் பொருட்களின் ஆயுளும் பாவிப்பும் தங்கியிருப்பதாகக் கூறுகிருர்கள். இவற்றின் தினிசுக்குத் தகுந்தபடி விலைகளும் அமைந்துவிடுகின்றன. முறம்; எழுபத்தைந்து சதத்திலிருந்து இரண்டரை ரூபா வரையும்; கடகம், ஐந்திலிருந்து பத்து ரூபாவரையும் விற்பனையாகிறது.

"பிரம்புக்கு இருபத்திரண்டு மைல் போக வேண்டும்; இழைப்பிலே கைகளும் கண்ணும் ஓயாது ஈடுபட வேண்டும்; இழைத்து மட்டை கட்டி முடிந்தால் விற்பனைக்கு ஊர் ஊராக கொண்டு அலைய வேண்டும்; "கஷ்டமான தொழில்" என்று சலித்துக்கொண்டார் சின்னத்தம்பி. "அப்படிக்கஷ்டப்பட்டுச் சம்பாதித்தாலும் ஒரு சல்லி கையில் தங்குகிறதா? பத்துச் சீவன்களுக்கு வயறு ல்ரம்ப வேண்டுமே!" என்று அவர் கூறும் போது அளவோடு பிள்ளைகளைப் பெற வழி தெரியவில்லையே என்ற ஏக்கம் பிரதிபலித்தது. இதற்கு நான் என்ன சொல்வது? குடும்பக் கட்டுப்பாடு வேண்டுமென்பதா? நமது சமுதாயத்தின் பெருக்கத்துக்குத் தடைவிதிப்பதா? இல்லை. வருவாயைப் பெருக்க வழி தேட வேண்டும். ஒருவரல்ல; உழைக்கும் தரம் அடைந்த ஒவ்வொருவரும் உழைக்க வேண்டும். வீடுதோறும் கைத்தொழில் பெருகவேண்டும் என்பதைத்தான் திருப்பித் திருப்பிக் கூற முடியும்.

"வயிற்றை நிரப்பினுல் போதுமா—வருத்தம் வேதனை வந்தால் யாரை எதிர்பார்ப்பது? கையிலிருக்க வேண்டாமா? அது தான் போகட்டும். உடுபுடவையென்ன, விளக்கெண்ணெயென்ன? தட்டுப்பாடு இல்லாமல் வாழத்தான் முடிகிறதா?" என்று அலுத்துக்கொண்ட சின்னத்தம்பியின் வார்த்தைகளே வறுமையின் சுழிவு நெளிவுகளை நிழலிட்டன.

பல தொழிலாளர்களிடம் கேட்ட கேள்விகளை இவரி

(13-ம் பக்கம் பார்க்க)



களைக்காலச் சீவி எடுத்தால் பின்னர் விரும்பியதை இழைக்க வேண்டியதுதான். களகுக்கு வேண்டிய பிரம்புகளை இவர் சீவிக்கொண்டிருக்கிருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் நாடக விழா:

# நாடகத்தை விழுத்தவும் எழுப்பவும் முடியும் பத்திரிகைகளால்

## வானொலி நாடகப் பொறுப்பாளர் சண்முகநாதன் சொன்னது

**பத்திரிகைகள் நினைத்தால் நாடகத்தை எழுப்பவும் முடியும்; விழுத்தவும் முடியும் என்று இலங்கை வானொலி நாடகப் பகுதிப் பொறுப்பாளர் திரு. சண்முகநாதன் சொன்னார். தமிழ் நாடக விழாவில் இடம் பெறவிருக்கும் நாடகக் காட்சிகள் சில பத்திரிகையாளருக்கு நடித்துக்காட்டப்பட்டபோது அவர் மேற்கண்டவாறு கூறினார்.**

இம்மாதம் 4-ம் 5-ம் 8-ம் தேதிகளில் திரு கே. பாலச்சந்திரன் நடத்தவிருக்கும் தமிழ் நாடக விழாவில் "பதியூர் ராணி" என்ற சரித்திர நாடகமும், "அழாதே கண்ணே" என்ற துப்பறியும் நாடகமும், "லண்டன் கந்தையா" என்ற நகைச்சுவை நாடகமும் இடம் பெறுகின்றன.

முதல் இரண்டு நாடகங்களும் 4-ம் 5-ம் தேதிகளில் கொழும்பு லயனல் வென்ட் ஞாபகார்த்த மண்டபத்திலும் "லண்டன் கந்தையா" 8-ந் தேதி ரோயல் கல்லூரி மண்டபத்திலும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. கொழும்பு மேயர் ஜனாப் முகம்மதுவும் கொழும்பு மாநகரசபை உறுப்பினர் திருமதி குமாரன் இரத்தினமும் விழாவைத் தொடங்கி வைக்கவும் நாடகங்களுக்கு தலைமை வகிக்கவும் இருக்கின்றார்கள்.

### லண்டன் கந்தையா

மூன்று நாடகங்களிலிருந்தும் சில காட்சிகள் பத்திரிகையாளருக்கு கடந்த திங்கட்கிழமை நடித்துக் காட்டப்பட்டன. லண்டன் கந்தையா நாடகத்தில் இடம் பெறும் நந்தனார் பிரசங்கத்தை (ஆங்கிலத்தில்) லண்டன் கந்தையா, அதாவது திரு. சண்முகநாதன் (சானா) நிகழ்த்தினார். நன்றாகச் சிரிக்க முடிந்தது.

### பதியூர் ராணி

"பதியூர் ராணி" என்ற நாடகத்தில் ஜபார், காசிம், செல்வி குகதாசன் ஆகியோர் தோன்றும் நீண்ட காட்சி, நடித்துக் காட்டப்பட்டது. பதியூர் மன்னரைக் கொல்லும் காட்சி அது. ராணியே காரியத்தை முடித்து காதலனை மகிழ்விக்க முயல்கிறாள். ஆனால் அவள் நினைத்ததற்கு மாறாக முடிவு அமைந்து விடுகிறது. உணர்ச்சியோடு நடித்தார்கள். கொலைக் காட்சியில் காதல், கொலை சம்பவத்தை மூழ்கடிக்கிறது.

### அழாதே கண்ணே

"அழாதே கண்ணே" நாடகத்தின் இறுதிக் கட்டம் நடித்துக் காட்டப்பட்டது. ரொஸாரியோ பீரிஸ், நஸ்ருதீன், சோதிநாதன், ஆனந்தி சுப்பிரமணியம் ஆகியோர் தோன்றினார்கள்.

### சண்முகநாதன் பேச்சு

நாடகங்களைத் தயாரித்து வரும் இலங்கை வானொலி நாடகப் பொறுப்பாளர் திரு சண்முகநாதன் கூடியிருந்த பத்திரிகையாளரையும் மற்றவர்களையும் விளித்துப் பேசுகையில் எந்த வகையில், எத்தகைய சூழ் நிலையில், எந்த விதமான இன்னல்களுக்கிடையில், என்ன நோக்கத்துக்காக நாடக விழா நடத்தவும் நாடகங்களை நடித்துக் காட்டவும் தாம் முயன்று வருகிறோம் என்பதை விளக்கிக் கூறினார்.

அவர் சொன்னதன் சாராம்சம் வருமாறு:—

"இலாப நோக்கோடு நாம் நாடகம் நடத்தவில்லை. இலங்கையில் நல்ல நாடகங்கள் நடத்தப்பட வேண்டும்; நாடகக் கலையை வளர்க்க வேண்டும் என்பது எமது விருப்பம். அதனால் தான் இந்த முயற்சி. மூன்று நாடகங்களையும் 6 மாதமாகத் தயாரித்து வருகிறோம். செட்டிங்குகளுக்கு மாத்திரம் இதுவரை ரூபா 2000 செலவு. கையிலே காசில்லாவிட்டாலும் கடன்பட்டாவது எடுத்த கருமத்தை செய்து முடிப்பது என்பது தான் எங்கள் திட்டம்.

"நாங்கள் எவ்வளவுதான் முயன்றாலும் நாடகம் முழு வெற்றி அடைய முடியாது. பொது மக்கள் ஆதரவு தேவை. பத்திரிகைகளின் ஒத்துழைப்பு வேண்டும். பத்திரிகைகள் நினைத்தால் நாடகத்தை விழுத்தவும் முடியும்; எழுப்பவும் முடியும். இங்கு கூடியிருக்கும் பத்திரிகையாளர்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று பணிவன்புடன் வேண்டிக் கொள்கிறேன்."—இவ்வாறு திரு. சண்முகநாதன் கூறினார்.

### கவின்கலை மன்றம்

கவின்கலை மன்றத்தின் செயற்குழுக் கூட்டம் கடந்த 27-5-60-ல் மன்றத் தலைவர் திரு. கே. கே. சுந்தரராஜா தலைமையின் கீழ் மருதானையிலுள்ள பணிமனையில் நடைபெற்றது.

அவ்வமயம் திரு. அருண் மொழியால் எழுதப்பட்ட "மன்னிப்பு" என்ற நாடகத்தை மன்றத்தின் சார்பில் நடிப்பதென்று தீர்மானிக்கப்பட்டது.


இந்தியாவின் உயர்ந்த ரக உற்பத்தி!
மங்கையர் மனதுக்குகந்தது
உஷா தையல் மெஷின்களே




- ஒருவரின் ஆயுள் கால முழுவதும் உழைக்கக் கூடிய வெகுமதி.
- மாதத் தவணைக் கட்டணங்களில் பெற்றுக் கொள்ளலாம்.
- இலங்கை பூராகவும் விற்பனையாகிறது.
- உங்கள் உள்ளூர் விற்பனையாளர்களைக் கேளுங்கள்.

சோல் ஏஜண்டுகள்:
ரெய்மூ சன்ஸ் லிமிட்டெட்,
88 A, மெயின் வீதி, கொழும்பு-11.
போன்: 4243, 5060.
கல்கத்தாவிலுள்ள இந்தியன் என்ஜினியரிங் எக்ஸ்போர்ட் புரொமோஷன் கவுன்ஸிலால் நடாத்தப்படுவது.



★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா

கண்ணைக் கவரும் வண்ணங்களிலும்
கருத்தைக் கவரும் வடிவங்களிலும் சிறந்த பாவனையிலும் உறுதியான சாயத்திலும்
முன்னணி வகிக்கிறது
லதா
கேம்பிரிக்
சட்டை, ஜாக்கெட், கவுண் பாவாடை கிமோனு முதலியவைகளுக்குச் சிறந்தது.
இலங்கை முழுவதிலுமுள்ள புடைவை வியாபாரிகளிடம்
கிடைக்கும்.
ஏக விநியோகஸ்தர்கள்:
குண்டன் மால்ஸ்,
26, கெய்ஸர் வீதி, கொழும்பு.


நாடக விமர்சனம்:

# வா கோட்டடிக்கு

**ராஜ்** நகைச் சுவை நாடக மன்றத்தாரின் 13-வது தயாரிப்பான "வா கோட்டடிக்கு" என்ற நகைச் சுவை நாடகம் கடந்த சனிக்கிழமை மம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது.

### 12 நாடகங்கள்

இந் நாடக மன்றத்தாரின் முந்திய நாடகங்கள் பின்வருவனவாகும்: கொழும்பிலே வேலணையை, கபடக் கலியாணம், சிரிக்காதே, போன மச்சான் திரும்பி வந்தான், மோட்டுச் சுப்பு, பேசும் ஊமை, பணமா பாசமா?, நாடகமே உலகம், என்ன உலகமடா?, கலியாணத் தரகன், ஒட்டி நின்டு கேட்காதே—ஒளிச்சு நின்டு பார்க்காதே, சிங்கப்பூர் மருமகன்.

இந் நாடகங்கள் அனைத்துமே யாழ்ப்பாணப் பழக்க வழக்கங்களை அடிப்படையாகக் கொண்டவை. பேச்சும் யாழ்ப்பாணப் பேச்சுத் தான். செந்தமிழும் கொச்சைத் தமிழும் சேர்ந்த தனியானதோர் உரை நடை. நடிகர் நடிகைகளும் பெரும்பாலும் ஒரே ஆட்கள். அவர்கள் தாங்கி நடிக்கும் பாத்திரங்களும் ஏறக்குறைய ஒரே மாதிரியானவை.

### சாட்டையடி

இந்த நிலையில் 13-வது நாடகத்தையும் அதே பாணியில் வழங்குவதானால் நாடகத்தின் தரத்தைப் பற்றிக் கேட்க வேண்டியதில்லையே. அரசியல் 'சூடு'கள் அதிகமாக இல்லாத போதிலும் யாழ்ப்பாண மக்களில் ஒரு சாராரின் விசித்திர பழக்க வழக்கங்களுக்கு 'சாட்டையடி' கிடைத்தது. முக்கியமான விஷயம் முதலிருந்து கடைசி வரை சிரித்தபடியே நாடகத்தை ரஸிக்க முடிந்தது.

### கந்தப்பு

ராஜ் நகைச் சுவை நாடக மன்றத்தின் முக்கியஸ்தரும் நாடகத் தயாரிப்பாளரும் டைரக்டருமான திரு இராஜரத்தினம் (ராஜ்) கந்தப்புவாக மேடையில் தோன்றினால் மண்டபத்துள் கலகலப்புக்கும் மகிழ்ச்சி ஆரவாரத்துக்கும் கேட்க வேண்டியதில்லை.

### நடிப்பு

சாத்திரியராக திரு. மு. திருநாவுக்கரசுவும், சந்திரனாக திரு. கே. பாலேந்திராவும், செல்லப்பாவாகத் திரு. பெ. பரமானந்தமும், தோன்றி பாராட்டும்படியாக நடித்தார்கள். சிறுவன் ஜெ. ஜெயகுமார் அசட்டுப் பயலாகச் சில சமயங்களிலும் சுட்டிப்பயல் அரிச்சந்திரனாகச் சில சமயங்களிலும் என்ன போடு போட்டான்! அப்பன் கந்தப்புவிடம் அவன் பணம் கேட்ட கட்டம் அபாரம். வழக்கறிஞராகத் திரு செ. மதிதனையான் நடித்தார். பேச்சு எப்படி இருந்த போதிலும் தோற்றமும் பாவமும் மேடையில் அசல் வழக்கறிஞரையே பார்த்த மாதிரியான உணர்வைத் தந்தன.

மூத்தண்ணை கனகசபையையும் அவருடைய கைகட்டும் பாவனையையும் எளிதில் மறந்து விட முடியாது.

### நடிகைகள்

பெண்களில் செல்விகள் கருணேஸ்வரி, ராஜேஸ், பத்மினி போல், சிவதாணு சிவராமலிங்கம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

ஒலி, ஒளி, மேடை அமைப்பு பற்றி பிரஸ்தாபிப்பதற்கு எதுவும் இல்லை.

ஒப்பனை நன்றாக இருந்தது. பக்கவாத்திய இசையைக் கேட்ட ஞாபகம் இருக்கிறது. அவ்வளவு தான்.

### நடனம்

செல்வி விஜயலட்சுமி மகாதேவாவும் செல்வி சத்தியவதி சிங்கமும் நடனமாடினார்கள். நாடகம் அளித்த இன்பத்தை நடனம் அளிக்காதபோதிலும் ஏதோ மாற்றம் இருந்ததே என்ற திருப்தி. ஆயினும் அந்த நாடகத்துக்கு நடனங்கள் இரண்டு அவசியந்தானா? சிரிக்கவைக்கும் சுவையான நாடகத்தை உருவாக்கித் தந்த ராஜ் தான் பதில் கூற வேண்டும்.

—கே. கே. ஆர்.

## உடனடி....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டுமென்பதைத் தமிழ் அரசுக் கட்சி ஆதரிக்கின்றது. தமிழ் மொழி அடக்கி ஒடுக்கப்படுவதையே இக்கட்சி எதிர்க்கிறது.

### மொழிப் பிரச்னை என்பது என்ன?

மொழிப் பிரச்னையைப் பொறுத்தவரையில் எமது கட்சியின் நோக்கம் சிங்களத்துக்கும் தமிழுக்கும் சம அந்தஸ்துப் பெறுவதே. ஆயினும் மொழிபற்றி நாட்டில் நிலவும் குழப்பமான நிலைமை காரணமாக அப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு முதற்படியாகத் தமிழுக்குப் பிரதேச உரிமையையும் இங்கு குறிப்பிடும் ஏனைய உரிமைகளையும் வழங்கும்படி கேட்கின்றோம்.

சிங்கள மொழி பேசும் மக்களுக்குச் சிங்களம் எவ்வாறு முக்கியமோ அவ்வாறே தமிழைத் தாய்மொழியாகக் கொண்டுள்ள மக்களுக்குத் தமிழ் முக்கியமாகும். ஆனையினால்—

(அ) இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் தேசிய மொழி தமிழ் எனச் சட்ட மூலமும் பரிபாலன முறையிலும் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பரிபாலன மொழியும் நீதிமன்ற மொழியும் தமிழாக இருத்தல் வேண்டும். இப்பிரதேசங்களிலுள்ள தமிழ் பேசாத சிறுபான்மை மக்களுக்குவேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படுதல் வேண்டும்.

(இ) இலங்கை எங்கும் வாழும் தமிழ் பேசும் மக்களுக்குப் பின்வரும் உரிமைகள் சட்ட மூலம் வழங்கப்படுதல் வேண்டும்.

(1) பல்கலைக் கழக கல்வி உட்பட, எல்லா நிலைகளிலும் தமிழிற் கற்கும் உரிமை.

(2) அரசாங்க சேவையிற் சேருவதற்காய போட்டிப் பரீட்சைகள் யாவற்றுக்கும் தமிழ்மூலம் தோற்றும் உரிமை.

(3) இலங்கையில் எப்பகுதியில் வசிப்பவராயினும் அரசாங்கத்துடன் நடத்தும் கருமங்களையும் கடிதத் தொடர்புகளையும் தமிழ்மூலம் நடத்தும் உரிமை. சட்டங்கள், 'கஸெற்' அறிவித்தல்கள் அரசாங்க வெளியீடுகள் அறிவிப்புக்கள் படிவங்கள் யாவும் தமிழிலும் இருத்தல் வேண்டும்.

### ஐக்கிய இலங்கை

தமிழ் பேசும் மக்களின் சமூகநல அக்கறைகள், சரித்திர, சாதி, பண்பாடு, மொழி ஆகிய வேற்றுமைகள் கார

(13-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதல்

10-ம் பக்கத் தொடர்ச்சி

ஆசையோடு அன்பாகக் கேட்டான் அவன். பாவம், நல்லசிவம், அவனின் ஆசைக்கோ அன்புக்கோ அந்தக் கடுகடுப்பைப் போக்கும் சக்தி இருக்கவில்லை.

"ஆமாம் கிடைக்கத்தான் செய்தது. அதைப் பற்றிக் கேட்கத்தான் வந்தேன். ஆபீஸுக்கு வந்தால் வேலையைப் பார்த்து விட்டுப் போவதுதானே? மேசையில் கடிதம் கிடக்கிறது. மனங்கால் முளைத்துத் துள்ளுகிறது என்றெல்லாம் கண்டதும் கிறுக்கிக் கடிதமும் எழுதவேண்டுமா? மிஸ்டர் நல்லசிவம்! இனிமேல் இப்படியெல்லாம் நடந்து கொண்டீரானால் ஆபீஸில் நீர் வேலையே பார்க்க மாட்டீர்! ஆமாம் சொல்லி விட்டேன். மனேஜருக்கு இதெல்லாம் பிடிக்காது. ஞாபகமிருக்கட்டும்!"

வாணி—அவனுடன் முன்பெல்லாம் ஆசையோடு குழைந்து குழைந்து கதைத்த அந்த வாணி—அத்துடன் போய் விட்டாள்.

நல்லசிவம் பார்த்துக் கொண்டே நின்றான்.

'மனேஜருக்கு இதெல்லாம் பிடிக்காது'—நல்லசிவத்தின் மனதிலே தங்கி நின்ற ஒரே ஒலி.

மனேஜருக்கு அது பிடிக்காது. அப்போ அவருக்குப் பிடித்திருப்பது எது?

அவளுக்கும் அது பிடிக்குமா?

அப்போது அது உண்மை தானா?

எங்கோ இதயத்தின் ஓர் மூலையில் கிடந்து இத்தனை நாளும் அழுத்திய அந்தக் குரல்—அவனிடமிருந்தே அவன் மறைக்க முயன்ற அந்தச் சந்தேகம் — அப்படியானால் உண்மைதானா?

ஆமாம் அப்படித்தான் இருக்க வேண்டும். கல்யாணம் கட்டிப் பிள்ளையும் பெற்றுவிட்டால் என்ன வந்து விட்டது? மனேஜர் என்ற பதவியும் ஐந்நூறு ரூபா அதிக சம்பளமும் அவருக்குக் கிடைக்கிறதே!

நல்லசிவத்தின் மனத்தில் ஓர் விரக்தி நிறைந்த சிரிப்பு.

காதல் அவனைப் பொறுத்தவரையில் உள்ளத்தின் தூய எண்ணங்களின் அடிப்படையில் எழுந்த தெய்வீக உணர்ச்சியாக இருக்கலாம். ஆனால் அவளைப் பொறுத்தவரையில்?

கேவலம், ஒரு மாதத்திற்கு ஐந்நூறு ரூபா உழைக்கும் ஒரு சிறு மூலதனம்!

அவன் சிரிக்க மாட்டானா?

# கஷ்டமான....

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

டம் என்றால் கேட்க முடியவில்லை—துணிவு பிறக்கவில்லை.

பத்து ஜீவன்களுக்கு நாளொன்றுக்கு ஆறு ரூபாயாவது வேண்டாமா? சராசரியாக நான்கு ரூபாய் தானே உழைக்க முடிகிறது!

இவர்களுக்கென்று தனியாகச் சங்கங்கள் எதுவும் கிடையாது. அப்படியிருந்தால் விற்பனவு வசதிகள் ஏதாவது கிடைக்குமே!

இதை நான் இவரிடம் கேட்டபோது "அதை ஆரம்பித்து நடத்த யார் முன்வருகிறார்கள். வேறு ஏதாவது கொள்ளை லாபமடிக்கும் சங்கங்கள்தான் அவர்களுக்கு வாய்க்கும்" என்று குறைப்பட்டார்.

இவருக்கு எழுத வாசிக்கத் தெரியும். பிள்ளைகளைப் படிக்க வைக்க வசதியில்லை. ஆனால் ஆரம்பப் பாடசாலை அறிவு அவர்களுக்குமுண்டு.

இவருக்கு நன்றி தெரிவித்துவிட்டு நான் புறப்படு முன்பே புகைப் படக் கருவி மூன்று 'கிளிக்'களை முடித்து வைத்திருந்தது.

"போகப்போகிறீர்களா? கொஞ்சம் நில்லுங்கள். இளநீராவது குடித்துவிட்டுப் போகலாம்" என்றது அவரின் குரல். என்னாலும் ஏழாகப் பகிர்ந்துண்ணும் பண்பாடு நம் நாட்டில் எங்குதானில்லை? மட்டக்களப்பு அதற்குப் பேர்போனதாயிற்றே!

"இல்லை. மிகவும் நன்றி. நாங்கள் போய்விடுவோம்" என்றேன். எங்கள் பதிலுக்கே சின்னத்தம்பி காத்திருக்கவில்லை. மளமளவென்று தென்னையிலேறி இளநீர்களையும் பறித்துவிட்டார். இனியென்ன செய்வது. வயிறு குளிரச் சுவைத்துப் பருகிவிட்டுத் திரும்பினோம்.

# தேர்தலுக்குத் தேர்தல் . . .

(8ம் பக்கத் தொடர்ச்சி)

uage problem was for the Tamils to act as a people united to a man in their opposition to "Singhala only" and also act with circumspection and political wisdom in their campaign for Language rights."

இத்தகைய ஒற்றுமையைத் தமிழ் காங்கிரஸ் நிறுத்திய 10 பிரதிநிதிகள் வெற்றி பெறுவதால் ஏற்படுத்த முடியுமா? படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோயிலா?

ஆடி இருபது தேர்தலில் தமிழ் காங்கிரஸின் பிரேதம் தகனம் செய்யப்படுமென்பது பொன்னம்பலத்துக்குத் தெரியாமல் இல்லை.

தெரிந்தும் 'பழைய குருடி கதவைத் திறவடி' என்கிற வேஷம் எதற்கு?

யு. என். பி.க்குத் தனது ஆதரவைக் காட்டுவதற்கும் டட்லியின் ஏவலுக்கு அடிபணிந்து வாழ்வதற்கும் தான் இந்த தகிடுதத்தங்கள் எல்லாரும் ஏறிய குதிரையில் சக்கடத்தார் ஏறிச் சறுக்கி விழுந்த கதை தமிழ் பேசும் மக்களுக்குத் தெரிந்ததே.

தமிழ் மக்களின் உரிமைக் கோரிக்கைக்குக் கொள்ளி செருகும் தமிழ் காங்கிரசை ஆடி இருபதில் தமிழ் மக்கள் சாடுவார்கள் என்பது சர்வ நிச்சயமாகி விட்டது.

தமிழ் மக்கள் பிளவின்றிப், பிரிவின்றி ஒரே குடும்பமாக தமிழரசுக் கட்சியின் தலைமையில் ஒன்று படுவதைக் கண்டு தமிழ் காங்கிரஸார் வாயைப் பிளக்கப் போகிறார்கள் என்பதும் உண்மையாகி விட்டது.

# உடனடி...

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

ணமாகச் சிங்கள மக்களின் சமூகநல அக்கறைகளிலும் மாறுபட்டவையாகும்.

இத்தன்மையான பெரும் வேற்றுமைகளை அலட்சியம் செய்வதன்மூலமோ, சம்பந்தப்பட்ட தமிழ் பேசும் மக்களின் மொழி உரிமை முதலிய உரிமைகளை மறுத்து அம்மக்களை அடக்குவதன் மூலமோ எப்பொழுதாயினும் தீர்த்துவிட முடியாது.

இத்தகைய கஷ்டங்களைத் தவிர்ப்பதன்பொருட்டே, அரசியல் விற்பன்னர்கள் கூட்டாட்சி முறையை வகுத்துளர். ஓர் இனமக்கள் தாம் விரும்பிய இலட்சியத்தைத் தம் திறமைக்கேற்ப பெறுவதற்காய அரசாங்க ஒழுங்கைக் கூட்டாட்சி சிருட்டிக்கிறது.

கூட்டாட்சி முறை உறுதியான அரசு நிலவ உதவுவதோடு ஒரு இனம் மற்றொரு இனத்திற் கொண்டுள்ள சந்தேகம், நம்பிக்கையின்மை முதலிய உணர்ச்சிகளை நீக்கி, ஆக்க வழிகளிற் சென்று ஒரு நாடு முன்னேறுதற்கு உதவுகிறது.

இத்தகைய கூட்டாட்சி மூலம் ஒற்றுமைப்படும் இலங்கையிலே பொருளாதாரத்துறையில் உண்மையான முன்னேற்றமும் சமூக நலத்துறைகளில் பெரும் அபிவிருத்தியும் ஏற்படும் என்பதிற் சிறிதும் ஐயமில்லை.

எஸ். ஜே. வி. செல்வநாயகம்
25, 2க் குறுக்குத் தெரு
யாழ்ப்பாணம்
1-6-60

# ஐந்தவித்தான்

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைவனாக இருக்கும் பேறு பெற்றும், ஆசையை அடக்காத காரணத்தாலே, அழியாப் பழியை இன்றும் சுமந்து திரிகிறான். ஐந்து புலன்களினால் ஆகும் ஆசைகளை ஒழித்த கௌதமனுடைய வல்லமைக்கு ஒரு சான்றாகவும் இருக்கிறான்.

வானவர் கோனாகிய இந்திரனையே சபிக்கக் கூடிய ஆற்றல், சிறு புற்குடிசையில் வாழ்ந்த கௌதமனுக்கு எங்ஙனம் ஏற்பட்டது? அஃது அவனுடைய தவ வலிமை; ஐம்புல ஆசைகளை ஒழித்ததினால் விளைந்த ஆற்றல்.

—பா. ஆறுமுகம்.





இப்பொழுது
காண்பிக்கப்படுகிறது!
கெயிட்டி
மற்றும் 5 திரைகளில்
டி. ஆர். மகாலிங்கம்,
எம். என். ராஜம்,
தாம்பரம் லலிதா,
ஏ. கருணாநிதி
நடித்த
ஜூப்பிட்டரின்
அமுதவல்லி

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!
முருகன் ★ ராணி ★ ராஜேஸ்வரா
(ஜிந்துப்பிட்டி) (யாழ்ப்பாணம்) (மட்டக்களப்பு)
ஏ. நாகேஸ்வரராவ்—சிவராவ்—ஸ்ரீ ரஞ்சனி
கிருஷ்ணகுமாரி—ஹேமலதா—சுரபி பாலசரஸ்வதி
நடித்த
அரசாளப் பிறந்தவன்
பின்னணி பாடியவர்கள்:
டி. எம். சௌந்தரராஜன்-கண்டசாலா-பி. லீலா-பி. சுசீலா-ஜிக்கி
இசை: நாகேந்திரராவ்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வளர்மதி
## புதிய மருமக்கள்

2877 த. ஜெகதீஸ்வரன், கரவெட்டி.
2878 பொ. தருமபூபதி, கொக்குவில்.
2879 எஸ். கனகநாயகம், தாவடி.
2880 எஸ். பி. விஜேந்திரன், திருநெல்வேலி.
2881 செல்வி செல்வராணி ஜோண், மட்டக்களப்பு.
2882 ச. விவேகானந்தராசா, கல்முனை.
2883 லெ. செல்லையா, ஹாலிஹெல.
2884 வி. சக்திவேல், சித்தன்கேணி.
2885 செல்வி சி. தேவேந்திர ராணி, பருத்தித்துறை.
2886 ம. தமிழ்த்தூதன், மாச்சம்பாளையம், போத்தனூர் வழி, கோவை மாவட்டம் (தமிழ்நாடு)
2887 இரா. அறிவழகு, மாச்சம்பாளையம், போத்தனூர் வழி, கோவை மாவட்டம் (தமிழ்நாடு)
2888 எம். நாதமணி, அளவெட்டி.
2889 வ. இராசக்கோன், உரும்பராய்.
2890 செல்வி து. ஜெகதாம்பிகா தேவி, மட்டக்களப்பு.
2891 லியாகத்தலிக்கான், மட்டக்களப்பு.
2892 எஸ். தருமராஜ், மட்டக்களப்பு.
2893 செல்வி ம. பா. லோகினி, மட்டக்களப்பு.
2894 செல்வி சு. எலிசபேத் ராணி, யாழ்ப்பாணம்.
2895 செ. கனகரெத்தினம், திருகோணமலை.
2896 ஏ. இரத்தினராசா, அராலி.
2897 இ. தர்மலிங்கம், கொக்குவில்.
2898 ந. சண்முகம்பிள்ளை, யாழ்ப்பாணம்.
2899 சி. உலகநாதபிள்ளை, கொக்குவில்.
2900 பி. பீ. எம். நிஸ்வான், பாணந்துறை.
2901 செல்வி தேவி சிற்றம்பலம், சுன்னாகம்.
2902 கலிஸ்ரஸ் இம்மானுவேல், மட்டக்களப்பு.
2903 வே. நச்சினார்க்கினியசிவம், வட்டுக்கோட்டை.
2904 எஸ். மோகனதாஸ், சுன்னாகம்.
2905 அ. பத்திநாதன், ஊர்காவற்றுறை.
2906 மு. இராமர், நுவரெலியா.
2907 ச. இராஜேஸ்வரன், நுவரெலியா,




பாரதியின் பாட்டொலி:

# "தேயிலைத் தோட்டத்திலே...."

பாரதி வாழ்ந்த காலத்திலே யாவா, சுமத்திரா, கியூபா போன்ற தீவுகளிலே கரும்புத் தோட்டங்களிருந்தன. அங்கு இந்தியப் பெண்களும், ஆண்களும் அடிமைகளாக உழைக்கும் அல்லற்பட்டனர். இன்று ஈழத்திலே-தேயிலைத் தோட்டங்களிலே இன்னலுறும் இந்தியத் தொழிலாளரை அமரத்துவ நிலையிலிருந்து பாரதிபாடிய பைந்தமிழ்க் கவிதையின் பண்ணொலி இதோ கேட்கிறது!

தேயிலைத் தோட்டத்திலே அவர் இந்தியப் பரம்பரையினர் கை, கால்களும் சோர்ந்து விழும்படி வருந்துகின்றனரே! தமிழ் மாதர் தம் நெஞ்சம் விம்மிக் கொதித்துக் கொதித்து, உடலே எலும்புக் கூடாகி விட்டனர். அவர்கள் துன்பத்தைப் போக்க வழியே யில்லையா? அந்த இன்னல் களைய மருந்துமில்லையோ? செக்குமாடுகளைப் போன்று உழைத்துழைத்து ஏங்குகின்றனர்.

பெண்ணென்று சொன்னாற் பேயும் இரங்கும் என்பார்கள். தெய்வமே! உனது எண்ணம் இரங்காதா? அந்த ஏழைகள் சொரியுங் கண்ணீர் வெறும் மண்ணிற் கலந்திடுமோ? வங்காள விரிகுடாக் கடலுக்கு நடுவே இந்தக் கண்ணற்ற தீவிலே-தனி மலைக் காட்டில் பெண்கள் புழுங்குகின்றார்.

தம் நாட்டை நினைப்பாரோ எந்த நாளினிப் போயதைக் காண்பதென்றே, அன்னை வீட்டை நினைப்பாரோ? அவர்கள் விம்மி விம்மியழுங் குரல் கேட்டிருப்பாயே காற்றே! துன்பக் கேணியிலே எங்கள் பெண்கள் அழுத சொல் மீட்டும் உரைக்கக் கூடியதோ? அவர்கள் விம்மியளவுந் திறங் கெட்டுப் போய்விட்டனர்.

நெஞ்சங் குமுறுகிறார். அந்தப் பஞ்சை மகளிரெல்லாம் துன்பப்பட்டு மடிந்து-மடிந்து ஒரு தந்தமுமில்லாது-எங்கள் சகோதரர்கள் சாகும் வழக்கத்தை இந்தக் கணத்தினிலே மிஞ்ச விடலாமா? ஈழப் பெருங்குடி மக்களே! தேயிலைத் தோட்டத்திலே இவ்வாறு இன்னலுறும் எமது இந்தியச்சகோதரர்களின் வாழ்வு எமது ஒற்றுமையின் வெற்றியிற்றான் தங்கியிருக்கிறது. இதையே நாம் செய்து சுபீட்சமடைவோம். துள்ளியெழுங்கள் வளர்மதிச் செல்வர்களே! செல்விகளே!!

—சித்தாண்டிச்சபா.

வள்ளுவர் குரல்: 26

# ஐந்தவித்தான்

சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் ஐம்புலன்களிலே, ஆசைகள் முளைக்கின்றன. அவ்வாசைகளை அடக்காமல்—அழிக்காமல்—விட்டால், அவை காரணமாகப் பல தொல்லைகள் விளைகின்றன.

புலன்களை அடக்காமல், ஆசைவழியே செல்லவிட்டு அல்லற்பட்டவர்களுள் முதல்வனுக, இந்திரனைக் குறிப்பிடலாம். அவன் அகலிகைமேல் ஆசைப்பட்டு அறம் பிறழ்ந்தான். அதன் பயனாகக் கௌதம முனிவனின் சாபத்துக்கு ஆளானான். அவன் உடலிலே நிறைந்துள்ள ஆயிரம் கண்களும், ஆசை தந்த பரிசாகிய 'புண்'களேயாம்.

"ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான் இந்திரனே சாலும் கரி"

இந்திரன், அகன்ற வானத்திலுள்ள தேவர்களுக்குத் (13-ம் பக்கம் பார்க்க)

# வாழும்முறை உரைத்த......

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

பெண்களையும் தாழ்ந்த சாதியினருடன் சேர்க்கிறது பகவத் கீதை (சுலோகம் 9-32). மண் பொன் எனும் பொருள்களுடன் பெண்ணையும் சேர்த்து அடிமைப்படுத்திய சமுதாயத்தை வேரோடழிக்கும் முறையிலே திருவள்ளுவர் பெண்ணின் பெருமையை எடுத்தியம்பினர்; "பெண்ணிற் பெருந்தக யாவுள? இல்லவள் மாண்பானால் இல்லதென்?" என்றெல்லாம் வினவினர்.

"அறிஞர் சிகாமணிகள், பூதேவர், இருபிறப்பாளர், ஆசாரியர்" என்று பட்டஞ் சூட்டித் திரிந்தவர்களை நோக்கி,

"அறிவினான் ஆவதுண்டோ பிறர்நோய் தந்நோய்போற் போற்றாக் கடை"

என்று சுடச்சுடக்கேட்டார்;

"எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானும் மாணு செய் யாமை தலை"

என்று அவர்களுக்கு அறிவுரை பகர்ந்தார்.

### உலகப் பெரியோருள் முதல்வர்

பிறப்பினாலே உயர்வு தாழ்வு கற்பித்த வைதிகக் குடுக்கைகளுக்கும் இருபிறப்பினைக் கற்பித்தல் பெருமை பாராட்டிய பித்தர்களுக்கும்

"பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்"

என்றும்

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக் கல்"

என்றும் பாடங் கற்றுக் கொடுத்தார் அவர். பணம் பட்டம் பதவி முதலியவற்றாலும், சாதி, சமயம், இனம், நிறம் முதலியவற்றாலும், நாடு, மொழி, அரசியற் கொள்கை முதலியவற்றாலும் பிளவு பட்டுக்கிடக்கும் இவ்வுலகத்தை ஒன்றுகக் கொண்டு, உலக மக்கள் யாவருக்கும் பொது நெறி வகுத்த உலகப் பெரியோருள் முதல்வர் வள்ளுவரே.

### தமிழ் மறையின் சிறப்பு

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் ... அன்பு வாழ்வை—அற நெறியை—அருட்பிறனை மக்களுக்கு விளக்கிய மாபெரும் புரட்சியாளரான வள்ளுவர் இன்னும் பல்லாயிர மாண்டுகளுக்குப் பொருத்தமான வாழும் முறைகளைத் தமிழ் மறையில் பொதிந்து வைத்துளர். சுருங்கக் கூறின், எக்காலத்துக்கும் உரிய பேருண்மைகளின் களஞ்சியமாகத் தமிழ் மறை மிளிர்கிறது. இன்னும் மனித குலம் நன்கு அறியாத—அறிந்தும் போற்ற முற்படாத—உண்மைகளையும், மனிதகுலம் ஈடேற்றம் அடைதற்கு இன்றியமையாதது மேற்கொள்ள வேண்டிய வழிகளையும் அது முழு உலகுக்கும் விளக்கிக்கொண்டிருக்கிறது. "தீமையை நன்மையினலொழியத் தீமையினுல் அழித்தல் முடியாது; போர் மனப்பான்மையைச் சமாதானத்தாலன்றிப் போரினால் ஒழித்தல் சாலாது" என்று அது விளக்கும் அடிப்படை உண்மைகளை இன்னும் உலகம் முழு மனத்துடன் ஏற்றுக் கொள்ளாமையாலேயே, உலகத்தின் பல பாகங்களிலும் போட்டி பொறாமைகளும் பூசல்களும் நிகழ்கின்றன; வல்லரசுகள் தம்முள் முரண்படுகின்றன; பகைத்தீயை வளர்க்கின்றன.

### மக்கள் உள்ளத்தை அணுகினர்

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயஞ் செய்து விடல்"

"பகை நட்பாக் கொண்டொழுகும் பண்புடையாளர் தகைமைக்கண் டங் கிற்றுலகு"

எனும் இந்த அறிவுரைகளை அணுகுண்டு, நீரகக்குண்டு முதலியவற்றால் உலகம் அழிந்தொழியாமல் நிலைத்து நிற்கவேண்டுமெனின், யாவரும் இனிக்கைக் கொள்ள வேண்டியன.

வாழ்வின் துறையனைத்திலுமுள்ள ஊழல்களை நீக்கி மக்கள் நல்வாழ்வு வாழுதற்கு வேண்டிய வழிகளை எல்லாம் எடுத்துரைக்கும் வள்ளுவர் அன்பு நெறியினின்று சிறிதும் பிறழாமலே தம் புரட்சிக் கருத்துக்களை எடுத்துரைத்துளர். படிப்போர் கேட்போர் உள்ளத்தைப் பிணிக்கும் முறையில் அவருடைய வாய்ச் சொற்கள் அமைந்துள. மக்கள் உள்ளத்தை அவர் அணுகியதைப் போல வேறெவரும் அணுகவில்லை. இதுவேயே மக்கள் யாவரையும்

ஔவை அமுதம்: 29.

# இளமையிற் கல்

ஆல்விக்குக் கரையில்லை. அது வானத்தை முட்டி நிற்கும் சமுத்திரம் போல் அளவில்லாது பரந்து கிடக்கின்றன. மிகமெகப் பயணம் செய்தாலும் சமுத்திரத்தைத் தாண்ட பல மாதங்கள் செல்கிறது. கரையில்லாக் கல்விக் கடலை கடப்பதற்கு யுகம் யுகமாக முயன்றாலும் கடப்பதரிது. அதனால்தான் இளமை தொட்டே கல்விப் பயணத்தைத் தொடங்க வேண்டும் என்கிறாள் ஔவைப் பாட்டி.

இரவு நேரத்தில் நித்திரை செய்கிறோம். உறங்குவதற்கு அதுதான் உகந்த சமயம். சந்தடிகள் எதுவுமிரா. எங்கும் அமைதியாக இருக்கும். நிம்மதியாகத் தூக்கமும் வரும். இரவைப் போல் தான் இளமையும். இளமையில் எமக்குக் கவலைகள் எதுவுமிரா. படிப்பவை யெல்லாம் கல்மேல் எழுத்துப் போல் அப்படியே மனதில் பதிந்துவிடும். மனம் அமைதியாக இருக்கும். வீட்டில் அம்மா அப்பாவின் கஷ்டங்களை அறியவும் விளங்கவும் முடியாது. அதனுல் எப்போதும் கவலையற்று நிம்மதியாக இருப்போம். இதுதான் படிப்புக்கு சுந்த சமயம். வளர வளர பலவித பொறுப்புகளும் கஷ்டங்களும் எம்மேல் விழும். அப்போது படிக்க வருமா?

இருள் பரந்த வெளியைப் பார்க்கும்போது எல்லாம் இருள் மயமாகவே தென்படுகிறது. பெட்டி, மரம், யானை, பூனை என்று வேற்றுமைப் படுத்திக் காண முடிவதில்லை. சிறுவர்களின் மனமும் இளமையில் இருளைப் பார்க்கும் கண்களைப் போல் தான் இருக்கும். லௌகீக விசயங்கள் அவர்களுக்கு விளங்காது. இன்ப துன்பங்களைப் பகுத்தறிந்து நுகர அவர்களால் முடிவதில்லை. மனம் ஒரே நிலையாக, தளம்பாத, ஆழமான அகழியைப் போல் செம்மைப் பட்டிருக்கும். அகழிக்குள் விழுந்த கல்லு அடித் தளத்தில் போய் ஒன்றிக் கொள்வதைப் போல் நிம்மதியான மனத்தில் புகும் அறிவும் ஆழமாகச் சென்று இதயத்தில் ஒட்டிக்கொள்கிறது.

இளமை தொட்டே நற்பழக்கம், ஒழுக்கம், அறம் முதலியவற்றைக் கற்றுத் தேர்ந்து கொள்ள வேண்டும். கல்வினிற் பதித்த எழுத்துக்கள் ஆயிரம் ஆண்டுகளாக அற்றுப்போகாது நிலைத்திருக்கக் காண்கிறோம். இளம் இதயத்தில் இணைந்து விட்ட எல்லாம் இறக்கும் வரை அழியாது நின்று எம்மை அழகு செய்யும்.

கன்றுக்குட்டி பிறந்த உடனேயே துள்ளி விளையாடக் கற்றுக் கொள்கிறது. நாம் குழந்தைகளாய் இருக்கும் போது தவழவும், இருக்கவும், தழ்மு நடை போடவும் பயின்று கொள்கிறோம். அதுபோல் நல்ல கல்வியையும், தாய் மொழியையும் இளமையிலேயே பயின்று கொள்ளல் வேண்டும்.

"இளமையிற் கல்வி சிலையில் எழுத்து"

—ஏ. ஜீ. ஆனந்தம்.

முழு மனிதராக்கும் தமிழ் மறையைப் போன்று சிறந்த இலக்கிய நூல் இவ்வுலகில் வேறொன்றுமில்லை என அல்பேட் சுவைச்சர் போன்ற பிறநாட்டுப் பேரறிஞர்களும் போற்றுகிறார்கள்.

அழிவின் எல்லையை அணுகிக் கொண்டிருக்கும் உலகத்துக்கு இன்று உய்யும் வழியைக் காட்டுபவர் வள்ளுவரே. இவரை இப்பொழுது தமிழ்கூறு நல்லுலகம் முழுவதும் போற்றுகிறது; உலகம் முழுவதும் போற்றிப் பயனடையும் நாளும் தொலைவில் இல்லை.

வளர்மதி—சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும்.

## வளர்மதி
### சுதந்திரன் மாணவர் மன்றம்
### அங்கத்தவர் மனுப்பத்திரம்

இல. 5.

பெயர் ....................................

பாடசாலை ....................................

விலாசம் ....................................

....................................

பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம் ........................ கையொப்பம் ........................

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

### திருக்குறள் நாடக மன்றம்

"நாடகம் மூலமே மறுமலர்ச்சிக் கருத்துக்களை மக்கள் மத்தியிலே விதைத்துப் பலன் காண்பது சுலபம். அதற்காகவே எல்லா மதத்தவரும்," எல்லா இனத்தவரும், எந்தக் கொள்கையாளரும் ஒரு சேர ஏற்கும் திருக்குறளின் பெயருடன் இந்த நாடக மன்றம் ஆரம்பமாகிறது. மனிதனை மனிதனுக்கு வாழ வழி தரும் சீர்திருத்த நாடகங்களையே இந்த நாடக மன்றம் அரங்கேற்றும். ஈழத்தில் நல்லதொரு கலைப் பணியை ஆற்ற எமது நாடக மன்றம் நிச்சயம் வழி சமைக்கும்" என 23-4-60ல்அங்குரார்ப்பணஞ் செய்து வைக்கப்பட்ட திருக்குறள் நாடக மன்றத்தின் போது ஆசிரியர் புதுமைலோலன் பேசும் போது குறிப்பிட்டார்.

செயற்குழு உறுப்பினர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவராக திரு. சோ. அமிர்தலிங்கமும் (நாவலர் பாடசாலை ஆசிரியர்), செயலாளராக ஆசிரியர் புதுமைலோலனும் பொருளாளராக திரு. என். இரத்தினகோபாலும் தெரிவு செய்யப்பட்டதுடன், செயற்குழு உறுப்பினர் எண்மரும் தெரியப் பெற்றனர். இரண்டு மாதங்களுள் முதலாவது நாடகம் அரங்கேற்றுவதென்று தீர்மானிக்கப்பட்டது.

### செந்தமிழ் வளர்ச்சி மன்றம்

கிரிலப்பனை செந்தமிழ் வளர்ச்சி மன்றத்தின் அங்கத்தவர் கூட்டம் சென்ற 22-5-60-ல் கிரிலப்பனை தமிழ் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

மன்றத் தலைவர் திரு அன்ரனி பெர்னாண்டோ கூட்டத்திற்கு தலைமை வகித்தார்.

எதிர்வரும் ஆனி மாதம் 8-ம் தேதி புதன்கிழமை திருவள்ளுவர் விழா கொண்டாடுவதென முடிவு செய்யப்பட்டது. விழாவிற்கான ஏற்பாடுகள் செய்வதற்கு மூவர் குழு வொன்று நியமிக்கப்பட்டது.

இலங்கையின் பல பாகங்களிலும் கிளைகள் நிறுவுவதெனவும் முடிவு செய்யப்பட்டது. கிளைகள் சம்பந்தமான சட்ட திட்டங்கள் கூட்டத்தில் வாசிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

### இந்து இளைஞர் மன்றம்

கைதடி கிழக்கு இந்து இளைஞர் மன்ற நிர்வாக சபைக் கூட்டம் கடந்த 22-5-60-ல் கைதடி கிழக்கு ஜனசமூக நிலையத்தில் செல்வன் செ. வேலாயுதம் தலைமையில் செல்வன் அ. சிற்றம்பலத்தின் தேவார பாராயணத்துடன் ஆரம்பமானது.

அத்தருணம் காரியதரிசி, தனாதிகாரி, பத்திராதிபர் அறிக்கையின் பின் செல்வன் சே. செல்வத்துரை "தமிழின் இனிமை" என்னும் பொருள் பற்றியும் செல்வன் தி. இராஜகுலவீரசிங்கம் "திருவள்ளுவரும் திருக்குறளும்" என்னும் பொருள் பற்றியும் சொற்பொழிவாற்றிய பின் பதினெட்டு வயதுடையவருக்கு வாக்குரிமை சிறந்ததா? என்னும் தர்க்கத்தில் வாதிகளாக செல்வன் செ. கந்தசாமி செல்வன் க. ச. சிவசுப்பிரமணியம் ஆகியோரும் பிரதிவாதிகளாக செல்வன் ஆ. கந்தையா, செல்வன் த. பாலசுப்பிரமணியம் ஆகியோரும் சேர்ந்து தர்க்கிக்கப்பட்டது.

பின் சபையோர் குறிப்புரையில் மாஜி மன்ற கௌரவ தனாதிகாரி வி. ச. இராசையா, பதவியின் காரணமாக கொழும்பு சென்றமைக்கு பாராட்டு கூறப்பட்

டது. தலைவர் குறிப்புரையுடன் செல்வன் சே. செல்லத்துரையின் தேவார பாராயணத்துடன் கூட்டம் இனிது முடிவெய்தியது.

### பாரதி இளைஞர் கழகம்

வேலணை பாரதி இளைஞர் கழகத்தின் தொடக்க விழா அணிமையில் வேலணை வடக்கு ஆத்தி சூடி வித்தியாசாலையில் ஆசிரியர் ச. மகாலிங்கம் தலைமையில் நடைபெற்றது. கழகத்தின் நோக்கம் பற்றியும், அதன் அவசியம் பற்றியும் ஆசிரியர் தில்லைச்சிவன், ஆசிரியர் க. கோபாலபிள்ளை செல்வன் மு. வ. மாணிக்கவாசகர் ஆகியோர் எடுத்துரைத்தனர். பின்னர் நடைபெற்ற தேர்வின் போது பின் வருவோர் தெரிவு பெற்றனர்:—

தலைவர்: வே. தியாகராசா, செயலாளர்: மு. வ. மாணிக்கவாசகர், பொருளாளர்: சி. த. மகாலிங்கம், துணைத் தலைவர்: க. இரகுநாதன், துணைச் செயலாளர்: ஆ. சண்முகலிங்கம், செயற்குழு உறுப்பினர்கள்: ந. இராமநாதன் ச. சிவசம்பு, ஆ. மாணிக்கராசா, மா. மகாலிங்கம்.

### புங்குடுதீவு மகாசன சபை

இற்றைக்கு ஏறக்குறைய முப்பத்தியேழு ஆண்டுகட்கு முன்பு ஆரம்பிக்கப்பட்டுப் புங்குடுதீவின் அபிவிருத்திக்கு அரும் பெரும் சேவைகளைச் செய்து வந்ததுடன் வேலணைக்கும் புங்குடுதீவுக்கும் இடையேயுள்ள கடலினூடாக, வீதி அமைப்பதற்கும் மூலகாரணமாக இருந்த அகில இலங்கை புங்குடுதீவு மகாசனசபையின் விசேட மகாசபைக் கூட்டம் கடந்த 22-5-60-ல் கொழும்பு, ஜிந்துப்பிட்டி மத்திய கல்லூரி மண்டபத்தில் திரு. சி. சரவணமுத்துவின் தற்காலிக தலைமையில் ஆரம்பமாகியது. தற் காலிக தலைவரின் ஆரம்ப உரையின் பின் புது வருட உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இலங்கைப் புகையிரதப் பகுதிப் பிரதம இஞ்சினியர் திரு. ந. ஆ. வைத்தியலிங்கம் தலைவராகவும், திருவாளர்கள். எஸ். தர்மரத்தினம், என். சொர்ணலிங்கம், ஏ. வி. கனகரத்தினம் ஆகியோர் உபதலைவர்களாகவும், திரு. சி. க. நடராசா கௌரவ செயலாளராகவும், திரு. நா. அருளலிங்கம் உபசெயலாளராகவும், திரு. க. ஆறுமுகம் தனாதிகாரியாகவும், திரு. ச. இராமலிங்கம் உபதனாதிகாரியாகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

கீழ்க்காணப்படுவோர் நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். திருவாளர்கள்: ஏ. சோமசுந்தரம், அ. கு. பொன்னம்பலம், அ. பொன்னம்பலம், சேவியர் சாதாசிவம், இ. பாக்கியநாதன், பொ. சபாரத்தினம், சி. கு. செல்லையா, அ. குழந்தைவேலு, வை. கா. தளையசிங்கம், இ. தியாகராசா, அ. கெங்காதரன், ச. நாகலிங்கம் ப. ஐ. சின்னத்துரை, க. ஐயம்பிள்ளை, நீ. சிற்றம்பலம், அ. சுப்பிரமணியம், பொ. கனகசபை.

உத்தியோகத்தர்கள் தெரிவின் பின்பு பலர் புங்குடுதீவு அபிவிருத்திக்குச் செய்ய வேண்டியவை பற்றியும், சங்கத்தின் கடமைகளைப் பற்றியும் எடுத்துக் கூறினர். கூட்டத்திற்குப் பெருந் திரளான பிரமுகர்கள் சமூகமளித்திருந்தனர்.

### பொத்துவில் பகுத்தறிவு மன்றம்

பொத்துவில் பகுத்தறிவு மன்றத்தின் ஆதரவில் அணிமையில் உமறுப்புலவர் விழா கவிஞர் எம். எம். ஏ. கபூர் (யுவன்) தலைமையில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

விழாவில் ராஜகவி ஏ. எம். காஸீம்கான் "உமறு காட்டும் காதல்" என்னும் பொருள் பற்றியும், செல்வி. எம். குழந்தையம்மாள் "உமறு காட்டும் உத்தமிகள்" என்பது பற்றியும், அறிஞர் எம். அனிபா, "சிறுர்களின் மத உணர்ச்சி" என்பது பற்றியும் இளங்கவி எம். ஆதம் லெவ்வை "புவியில் வாழ்ந்த கவிகள்" என்பது பற்றியும் சொற்பெருக்காற்றினர்.




## நீங்கள் இல்லாவிட்டால்?

கூட்டுறவு இன்சூரன்ஸ் இலாகா,

CWE

ஒரு சாதாரண வருமானம் உள்ள மனிதனின் கவலைக்கு முக்கிய காரணம் பணத் தட்டுப்பாடுதான். நீங்கள் இல்லாத காலத்தில் உங்கள் குழந்தைகளின் கல்வியை யார் கவனிப்பார்கள், உங்கள் குடும்பம் எப்படிக் காலந் தள்ளும்—என்னும் கேள்விகள் உங்களுக்கு மனக் கவலையாக இருக்கும். அந்தப் பாதுகாப்பும், மன நிம்மதியும் கூட்டுறவு இன்சூரன்ஸ் பொலிசியை எடுத்தவுடன் உங்களுக்குக் கிடைத்துவிடும்.

வாழ்க்கை, நெருப்பு, கப்பல் பகுதி, மோட்டார், பொது விபத்துகள்.

கூட்டுறவு இன்சூரன்ஸ் உலக சேவை புரிகிறது.

103, சதாம் வீதி, கொழும்பு 1.
போன்: 5266, 5267.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

**காமினி** (மருதானை) ❋ **மைலன்** (கொழும்பு) ❋ **நியூசினிமா** (குருணாகலை) ❋ **தாஜ்மஹால்** (கல்முனை)



பிரேம் நசீர், ஈ. வி. சரோஜா, ஏ. கருணாநிதி, எம். என். ராஜம், டி. பாலசுப்பிரமணியம், வி. ஆர். ராஜகோபால், காமினி, ஓ. ஏ. கே. தேவர்

ஆகியோர் நடித்த

## லலித கலா பிலிம்ஸ்

# உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்

கதை-வசனம்: எஸ். ஐயாபிள்ளை, தயாரிப்பு: சி. ஹொன்னப்பபாக்வதர்

சங்கீதம்: கே. வி. மகாதேவன் டைரக்ஷன்: எம். ஏ. திருமுகம்

பின்னணி:

பி. லீலா-பி. சுசீலா - ஜமுனாராணி - ராஜேஸ்வரி - சீர்காழிகோவிந்தராஜன் - ராகவன்-எஸ். சி. கிருஷ்ணன்

---

**கிங்ஸ்லி** (கொழும்பு) **பிளாஸா** (வெள்ளவத்தை) **நவா** (கொம்பனித்தெரு) **வெலிங்டன்** (யாழ்ப்பாணம்) **மனோகரா** (யாழ்ப்பாணம்)

**விஜயா** (மட்டக்களப்பு) **வெம்பிளி** (கண்டி) **ஸ்ரீகிருஷ்ணா** (திருகோணமலை) **மொடர்ன்** (பதுளை) **விஜிதா** (மஸ்கேலியா) **ஜூப்பிட்டர்** (குருணாகல்)

காண்போர் மனதில் களிப்பூட்டும் கருத்தோவியம்!

கவலையைப் போக்கும் கலைக் காவியம்!!

கருத்தமைந்த கதை—காதுக்கினிய கீதம் - காலத்திற்கு ஏற்ற கலைப் பொக்கிஷம்

கலைகுரிசில்: சிவாஜி கணேசன் ❋ கலைஅரசி: பி. சரோஜாதேவி

எம். ஆர். ராதா-பத்மினி பிரியதரிசினி-டி. எஸ். பாலையா

முதலியோர் நடித்த

சரவணா பிலிம்ஸ்

# பாகப் பிரிவினை

கதை—வசனம்: எம். எஸ். சோலைமலை

திரைக் கதை-டைரக்ஷன்: ஏ. பீம்சிங்

இசை: விஸ்வநாதன் ராமமூர்த்தி

பின்னணி: டி. எம். சௌந்திரராஜன் —சீர்காழி கோவிந்தராஜன்

பி. லீலா—பி. சுசீலா—ஜமுனாராணி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை கொழும்பு பண்டாரநாயக்க மாவத்த, 196-ம் இலக்கத்தில் வசிக்கும் எஸ். டி. சிவநாயகம் அவர்களால் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக பண்டாரநாயக்கமாவத்த, சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1960 ஜூன் 5-ம் தேதி பிரசுரிக்கப்பட்டது.